DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளக்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail: raj.p@rogers.com


ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1523 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 13, 2025

# கனடாவைப் பொறுத்தளவில் எமது புதிய ஆட்சிக் காலம் என்பது தேசத்தின் புதிய நூற்றாண்டாக எதிர்காலத்தில் பார்க்கப்பெறும்

## கனடாவின் ஒட்டாவா மாநகரில் அமைந்துள்ள " War Museum " வளாகத்தில் தனது முக்கியமான ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய பிரதமர் மார்க் கார்னி உற்சாகத்துடன் அறிவிப்பு



”கனடாவைப் பொறுத்தளவில் எமது புதிய ஆட்சிக் காலம் என்பது தேசத்தின் புதிய நூற்றாண்டாக எதிர்காலத்தில் பார்க்கப்பெறும். எமது புதிய ஆட்சியில் கனடாவின் இராணுவக் கட்டமைப்பில் புதிய மாற்றங்களை எமது மக்கள் எதிர்காலத்தில் கண்டு வியப்படையப் போகின்றார்கள். ஏன் உலகமே வியக்கப்போகின்றது. எம்மோடு கைகோர்த்து பயணிக்கப் போகின்ற பல ஐரோப்பிய நாடுகளின் பங்களிப்புடன் எமது கனடிய தேசம் பலமான இராணுவக் கட்டமைப்பையும் இராணுவத் தளபாடங்களின் உற்பத்தி நாடாகவும் உயரப் போகின்றது. அத்துடன் அடுத்த வாரத்தில் கனடாவின் அல்பேர்ட்டா மாகாணத்தில் நடைபெறவுள்ள ஜி-7 நாடுகளின் மாநாட்டின் பின்னர் எமது நாட்டின் வளர்ச்சியையும அந்தஸ்த்தையும் உலக நாடுகள் பார்த்து வியக்கப்போகின்றன”. (தொடர்ச்சி 13ம் பக்கம்)



## Grand Opening Ceremony of Tamil-owned newly built Banquet Facility in City of Ajax, 'DURHAM CONVENTION CENTRE, took place on June 7th Saturday, 2025.

# தமிழர்களின் நிர்வாகத்தில் புதிதாக வடிவமைக்கப்பெற்று நிர்மாணிக்கப்பெற்றுள்ள DURHAM CONVENTION CENTRE



ஒன்றாரியோவில் தமிழர்கள் அதிகளிவில் வாழும் மார்க்கம். ஸ்காபுறோ. ரொறன்ரோ ஆகிய நகரங்களுக்கு அருகில் ஈழத்தமிழ் முதலீட்டாளர்கள் சிலர் ஒன்று சேர்ந்து நிர்மாணித்துள்ள பிரமாண்டமான மண்டபம் ஒன்று கடந்த 7ம் திகதி சனிக்கிழமையன்று ஏஜக்ஸ் மாநகரில் திறந்து வைக்கப்பெற்றுள்ளது

**630 Beck Cres-Ajax** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள- **Durham Convention Centre** என்ற இந்த மண்டபத்தில் ஒரே நேரத்தில் 1500 பேர் அமரக் கூடியதாக விசாலமாக நிர்மாணிக்கப்பெற்றுள்ளது.

401 - **E** நெடுஞ்சாலையில் பயணித்தால் சேலம் வீதியில் வெளியேறி வடக்கு நோக்கிச் சென்றால் மண்டபத்தைச் சென்றடையலாம

உங்கள் திருமணங்கள் மற்றும் மங்கல நிகழ்வுகள் மாநாடுகள் இசை நிகழ்ச்சிகள் எவையாகினும் எதுவாகிலும் சுவையான உணவு வகைகளுடன் மேற்படி மண்டபத்தினை நாடலாம். விபரங்களுக்கு:- 416 584 3333 (தொடர்ச்சி 4ம் பக்கம்)

UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL 2025
உதயன் சர்வதேச விருது விழா 2025
Music - Dance - Awards Presentation - Dinner
இசை - நடனம் - விருதுவழங்கல் - இராப்போசன விருந்து
Date/Time: Saturday, June 14th, 2025 at 6:00pm
Venue: The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4
அனுமதிச்சீட்டுக்களுக்கு: 416-732-1608 அல்லது 647-762-9512

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

Canada We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# எம். ஏ. சுமந்திரனின் வழிநடத்தலில் தமிழரசுக் கட்சி இயங்குமென்றால் தமிழர் அரசியலின் எதிர்காலம் பிரகாசிக்குமா?

இன்றா? அல்லது நாளையா? என்று பல ஆண்டுகளாக இலங்கை வாழ் வாக்காளப் பெருமக்களும் அரசியல் கட்சிகளும் எதிர்பார்த்துக் காத்திருந்த உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல் கடந்த 6ம் திகதி நடைபெற்று இன்று மூன்றாவது நாளைக் கடந்து செல்கின்றோம்.

இந்த மூன்று நாட்களும் இலங்கையில் மாத்திரமல்ல, உலகெங்கும் உள்ள தமிழர்களும் எமது மொழி சார்ந்த ஊடகங்களும் மௌனம் காப்பதும், ஊதித் தள்ளுவதுமாக வெவ்வேறு விதமாக கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட வண்ணம் நாட்கள் நகர்ந்து செல்லுகின்றன. எனினும் முன்னாள் யாழ்ப்பாண அரசாங்க அதிபரும் கவிஞரும் அரசியல் அவதானியுமான அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்கள் தனது முகநூல்ப் பக்கத்தில் குறிப்பிட்டவாறு "தமிழ் மக்கள் தவிர்க்க வேண்டியவர்களைத் தவிர்த்து வாக்களிக்க வேண்டியர்களுக்கு வாக்குகளை வழங்கி அவர்களை வெற்றியீட்டச் செய்துள்ளார்கள்" என்ற கருத்துக்களை ஏற்றுக்கொண்டவர்களும் மதிக்கின்றவர்களும் எவ்விதமான ஆர்ப்பாட்டமுமின்றி தங்கள் கருத்துக்களில் உறுதியாக உள்ளார்கள். எமது கனடா உதயன் ஆசிரிய பீடத்தினராகிய நாமும் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்களது கூற்றை ஏற்றுக் கொண்டவர்களாகவே உள்ளோம் என்பதை இந்தப் பக்கத்தில் பகிர்ந்து கொள்கின்றோம். ஆனால் பலரது கேள்விகளில் முக்கிய ஒன்றாக இருப்பது தமிழர்களினதும் தமிழரசுக் கட்சியினதும் "எதிர்காலம்" எவ்வாறு அமையப்போகின்றது? என்பதே ஆகும்.

தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றோடு பின்னிப் பிணைந்து, தளர்ந்தும் நிமிர்ந்தும் ஏமாற்றங்களைத் தழுவியும். துரோகத்தனங்களுக்கு உள்ளாகியும் தமிழரசுக் கட்சியின் அரசியல் பாதையை கடந்த ஐம்பது வருடங்களாக அவதானித்தவர்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்வியே நாம் இங்கு குறிட்பிட்ட ஒன்றாக விளங்குகின்றது.

நடந்து முடிந்த தேர்தலுக்கு முன்பதாகவே தமிழரசுக் கட்சிக்குள் "குத்து வெட்டுக்களும்" "கழுத்தறுப்புக்களும்" இடம்பெற்று தற்போது நீதி மன்றங்களில் நிர்வாக விடயங்கள் தொடர்பான வழக்குகளை தன்னகத்தே கொண்ட ஒரு "கோட்டு கட்சியாகவே" தமிரசுக் கட்சி அதன் தொண்டர்களால் பார்க்கப்படுகின்றது.

மேலும், சுமந்திரன் மற்றும் சிறிதரன் சிவஞானம் போன்ற முக்கியமானவர்களுக்கு இடையில் தோன்றியுள்ள உள்ளக முரண்பாடுகள் கட்சியை சின்னாப்பின்னமாக்கிய நிலையில் இந்த உளளூராட்சித் தேர்தல் மூலம் வடக்கில் தமிழரசுக் கட்சியானது உலகெங்கும் உள்ள தமிழர்களின் மனதில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்திய நிலையை அடைந்துள்ளது. எனினும் ஆங்காங்கே "நீறு பூத்த நெருப்பாக" உள்ள கட்சியின் எரியும் பிரச்சனைகள் எவ்வாறு தீர்க்கப்படப்போகின்றன என்பதே முக்கியமாகும்.

சிறிதரன் சிவஞானம் அவர்கள் கிளிநொச்சியில் தனது பலத்தைக் காட்டும் வகையில வாக்கு வங்கியை தனது கட்சிக்காக நிரப்பியிருந்தாலும் கட்சியில் அவரது தரமும் பலமும் தாழ்ந்துள்ளதாகவே கருதப்படுகின்றது. தற்போது எம். ஏ. சுமந்திரன் அவர்களால் கிளறப்படும் விடயங்களையும் குழப்பங்களையும் வெற்றி கண்டு கட்சியை சீரான பாதையில் நகர்த்திச் செல்லக் கூடிய பலம் சிறிதரன் சிவஞானம் அவர்களிடத்திலோ அன்றி அவரது அணியினரிடமோ உள்ளதாகத் தெரியவில்லை. எனவே தமிழரசுக் கட்சியின் பலத்தின் அதிகளவு சுமந்திரன் அணியினரையே சென்றடையும் என்ற எதிர்வும் தமிழர்கள் பிரதேசங்களில் பகிரப்பட்டு வரும் விடயமாக உள்ளது.

சுமந்திரன் அவர்கள் திறமையானவராக இருக்கலாம். ஆனால் அவரது கடந்த கால நகர்வுகள் இரட்டை வேடம் கொண்டவையாகவும் ரணில் விக்கிரமசிங்க போன்ற "கொலையாளிகளின்" நெருங்கிய நண்பர்களாகவும் காணப்படுவதால் அவரது தலைமையின் தமிரசுக் கட்சி இயங்குமானால் அந்த தலைமை தமிர்களின் இருப்பையும் அதே நேரம் தெற்கிலும் மீண்டும் ரணில் போன்ற ஓரங்கட்டப்பட்ட அரசியல்வாதிகளை உள்ளுக்குள் கொண்டு வந்து தென்னிலங்கை அரசியலையும் சீர்குலைக்கும் ஒரு ஆபத்தான அரசியலுக்குள் இலங்கையின் எதிர்காலம் சென்று விடும் என்ற எச்சரிக்கையையும் நாம் உதாசீனம் செய்துவிடக்கூடாது. எனினும் சிறிதரன் சிவஞானம் செல்வம் அடைக்கலநாதன் போன்ற அரசியல்வாதிகளும் இடதுசாரிப் போக்குக் கொண்ட தற்போதைய அரசாங்கத்தை வீழ்த்திவிட்டு தங்களுக்கு பல சலுகைகளைப் பெறக்கூடியு ரணில் போன்றவர்களின் ஆட்சி அமைவதையே விரும்புவார்கள் என்பதே உண்மை.

ஏனவே நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலின் வெற்றிகளை நிரந்தரமாக அனுபவிக்கும் வாய்ப்பை தமிரசுக் கட்சி தக்கவைக்குமா அன்றி ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகளிடம் தமிழர்களின் தலைமத்துவத்தை ஒப்படைப்பதா என்பதை தமிழர்கள் தீர்மானிக்க வேண்டும் என்பதையே எமது கதிரோட்டத்தின் வீச்சுக்களாக நாம் பதிவு செய்கின்றோம்.




Kantharmadam Makkal Ontrium Summer Picnic/ Get-Together.
It is being held on Saturday, June 21, 2025 at Thomson Park, Picnic area 2, starting at 10am to 8pm. Barbecue, food, snacks and drinks will be served. All are welcome!

Room for Rent
McLevin/Sewells வீட்டில் மேல் தளத்தில் அறை ஒன்று வாடகைக்கு உள்ளது. பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:
John 416-664-666

**Grand Opening Ceremony of the Tamils owned newly designed and built Banquet Facility in City of Ajax, 'DURHAM CONVENTION CENTRE, took place on June 7th Saturday, 2025**

# தமிழர்களின் நிர்வாகத்தில் புதிதாக வடிவமைக்கப்பெற்று நிர்மாணிக்கப்பெற்றுள்ள "DURHAM CONVENTION CENTRE"








ஒன்றாரியோவில் தமிழர்கள் அதிகளிவில் வாழும் மார்க்கம், ஸ்காபுறோ, ரொறன்ரோ ஆகிய நகரங்களுக்கு அருகில் ஈழத்தமிழ் முதலீட்டாளர்கள் சிலர் ஒன்று சேர்ந்து நிர்மாணித்துள்ள பிரமாண்டமான மண்டபம் ஒன்று கடந்த 7ம் திகதி சனிக்கிழமையன்று ஏஜக்ஸ் மாநகரில் திறந்து வைக்கப்பெற்றுள்ளது.

630 Beck Cres., Ajax என்னும் விலாசத்தில் அமைந்துள்ள Durham Convention Centre என்ற இந்த மண்டபத்தில் ஒரே நேரத்தில் 1500 பேர் அமரக் கூடியதாக விசாலமாக நிர்மாணிக்கப்பெற்றுள்ளது.

401 - E நெடுஞ்சாலையில் பயணித்தால் சேலம் வீதியில் வெளியேறி வடக்கு நோக்கிச் சென்றால் மண்டபத்தைச் சென்றடையலாம்.

உங்கள் திருமணங்கள் மற்றும் மங்கல நிகழ்வுகள் மாநாடுகள் இசை நிகழ்ச்சிகள் எவையாகினும் எதுவாகிலும் சுவையான உணவு வகைகளுடன் மேற்படி மண்டபத்தினை நாடலாம்.

விபரங்களுக்கு: (416) 584-3333




















இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சித்துபாத்தி புதைகுழி "சட்டவிரோதமாக அல்லது இரகசியமாக" உடல்கள் புதைக்கப்பட்ட இடம்!



இலங்கையில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி, சட்டவிரோதமாகவோ அல்லது இரகசியமாகவோ உடல்கள் புதைக்கப்பட்ட இடமாக இருக்கலாம் என அகழ்வுகளை மேற்கொள்ளும் நிபுணர்கள் நீதிமன்றத்திற்கு அறிக்கை அளித்துள்ளனர்.

இதுவரை ஆறு உடல்களின் எலும்புகள் அகழ்ந்து எடுக்கப்பட்டு, மேலும் எலும்புகள் அடையாளம் காணப்பட்டுள்ள, யாழ்ப்பாணத்தில் உள்ள செம்மணி, மயானத்தை ஒரு மனிதப் புதைகுழியாக அறிவிக்கக் கோரி பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு வெள்ளிக்கிழமை அன்று (ஜூன் 6) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, யாழ்ப்பாண சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் மற்றும் தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவா ஆகியோர் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்திற்கு இந்த விடயத்தை தெரிவித்தனர்.

மனித உடல்கள் அந்த இடத்தில் குழப்பமான சூழலில் அல்லது குழப்பமான முறையில் புதைக்கப்பட்டுள்ளதாகவும், இது அகழ்வினை வழிநடத்தும் இரண்டு முக்கிய அரச அதிகாரிகளின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட சட்டத்தரணி ரணிதா ஞானராஜா குறிப்பிட்டுள்ளார்.

"இந்த வழக்கில் சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் தொல்பொருள் தடயவியல் தொல்பொருள் பேராசிரியர் ராஜ் சோமதேவா ஆகியோரின் அவதானிப்பு அறிக்கைகளின் அடிப்படையில், மூன்று விதமான விடயங்கள் இருவராலும் முன்வைக்கப்பட்டது. முதலாவது விடயமாக குறிக்கப்பட்ட அகழ்வு இடம்பெறும் இடத்தில் 1.6 மீற்றர் அடி அளவிலேயே மனித என்பு எச்சங்கள் அடையாளப்படுத்த கூடியதாக உள்ளது. குழப்பமான சூழலில் அல்லது குழப்பமான வகையில் மனித என்புக்கூடுகள் புதைக்கப்பட்டுள்ளது. ஆடைகளோ அல்லது தனிப்பட்ட அணிகலன்களோ குறித்த இடங்களில் காணப்படவில்லை. இது சட்டவிரோதமான அல்லது இரகசியமான புதைகுழியாக இருக்கலாம் என்ற ஒரு சந்தேகம் ஏற்பட்டுள்ளது."

அகழ்வினை வழிநடத்தும் நிபுணர்கள், வெகுஜன புதைகுழி தொடர்பான விசாரணைகளைத் தொடர வேண்டியதன் அவசியத்தை நீதிமன்றத்திற்கு சுட்டிக்காட்டியதாக சட்டத்தரணி ரணிதா, நிபுணர்கள் திருப்தி அடையும் வரை அகழ்வுப் பணிகளைத் தொடர யாழ்ப்பாண நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா உத்தரவிட்டதாக சுட்டிக்காட்டினார்.

"17 எலும்புக்கூடுகள் இதுவரை பகுதியளவிலும் முழுமையாகவும் அடையாளம் காணப்பட்டு 5 மனித எலும்பு கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் தொடர்ந்தும் பல மனித எச்சங்கள் பகுதியளவில் அடையாளப்படுத்தபட்டுள்ள நிலையில் தொடர்ச்சியாக இந்த மனித புதைகுழியில் அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற பரிந்துரை பேராசிரியர் மற்றும் சட்ட வைத்திய அதிகாரியால் மேற்கொள்ளப்பட்டது. பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணியாலும் அகழ்வை முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையில், நிபுணர்கள், அகழ்வு நடவடிக்கையில் திருப்திபடும் வரையில் தொடர்ச்சியாக அகழ்வு பணிகள் முன்னெடுக்கபடவேண்டுமென கட்டளையிட்டது."






40 நாட்களுக்கு அகழ்வுப் பணிகளைத் தொடர தேவையான நிதி ஒதுக்கீடுகளைப் பெறுவதற்குத் தேவையான செயல்முறையை விரைவாக மேற்கொள்ளுமாறு, யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா, யாழ்ப்பாண சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவனுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவா மற்றும் யாழ்ப்பாண சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையில் செம்மனியாவில் உள்ள சித்துபாத்தி மனித புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வுபு பணிகள் வெள்ளிக்கிழமை அன்றையதினம் (ஜூன் 6) ஐந்தாவது நாளாகத் தொடர்ந்தன.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மாவை சேனாதிராஜாவை படுகொலை செய்ய முயன்றவரே டக்ளஸ் தேவானந்தா

## பாராளுமன்றில் சிறீதரன் எம்.பி தெரிவிப்பு!



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இயங்குதளத்தையும் மக்கள் அபிமானத்தையும் சிதையாமற் காத்த மாவை. சோ.சேனாதிராஜா அவர்களை படுகொலை செய்ய முயன்ற ஒட்டுக்குழுத் தலைவரே டக்ளஸ் தேவானந்தா என நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

6ம் திகதி அன்றையதினம்வெள்ளிக்கிழமை நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில், தமிழரசின் மேனாள் தலைவர் மாவை.சேனாதிராஜா அவர்களின் மறைவையொட்டி கொண்டுவரப்பட்ட அனுதாபப் பிரேரணை மீது உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிட்டதாவது, ஊர்காவற்றுறை மக்களைச் சந்திப்பதற்காகச் சென்ற மாவை.சேனாதிராஜா, நாடாளுமன்ற மேனாள் உறுப்பினர் கனகலிங்கம் சிவாஜிலிங்கம், மேனாள் கிராம அலுவலர் சிவராசா உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது, தமிழினப் படுகொலைகளைப் புரிந்த இலங்கை அரசின் பங்காளியான டக்ளஸ் தேவானந்தாவும், அவரது ஆயுதக்குழுவும் 2001.11.28 ஆம் திகதி நாரந்தனை - தம்பாட்டிப்பகுதியில் வைத்து தாக்குதல் மேற்கொண்டதுடன், ஏரம்பு பேரம்பலம், யோகசிங்கம் கமல்ஸ்ரோங் ஆகிய இருவர் அந்த இடத்தில் படுகொலை செய்யப்பட்டதுடன் 28 பேர் படுகாயமடைந்ததையும், மாவை.சேனாதிராஜா அவர்கள் கொட்டன் பொல்லுககளாலும், துப்பாக்கிகளாலும், வாள்களாலும் சுட்டும், வெட்டியும், அடித்தும் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டு நினைவிழக்குமளவு காயமுற்றிருந்த கறைபடிந்த சம்பவத்தையும் மீள நினைவூட்டி, அவரது நினைவுகளைப் பதிவுசெய்கிறேன்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் வடக்கு மாவிட்டபுரத்தில் பிறந்து, யாழ்.வீமன்காமம் வித்தியாலயத்திலும், யாழ்.நடேஸ்வராக் கல்லூரியிலும் தனது பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்து, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி மாணவனாக இளங்கலைமாணி பட்டப்படிப்பையும் மேற்கொண்ட திரு. மாவை.சோ.சேனாதிராஜா அவர்கள், ஈழத்தமிழினத்தின் மீதான அடக்குமுறைகளின் எதிர்க்குரல்களுள் ஒருவராக பதின்மங்களிலேயே தன்னையும் இணைத்துக் கொண்டவர்.

ஈழத்தமிழர்களின் தன்னாட்சிக் கோரிக்கை என்ற அரசியல் கருத்தியலின் அடிப்படையில் உருவாக்கம் பெற்ற இலங்கைத் தமிழ்த் தேசிய இயக்கத்தில் தனது 19வது வயதிலேயே இணைந்து கொண்ட மாவை அண்ணரின் அரசியற்பிரவேசத்துக்கான காலவெளி அப்போதுதான் மெல்லக் கருக்கொள்ளத் தொடங்கியது.

இலங்கைத்தீவின் இன முரண்பாடுகளை உச்சம் பெறச்செய்த தனிச்சிங்களச் சட்டம் 1956 இல் அறிமுகம் செய்யப்பட்டு கிடப்பிலிருந்த நிலையில், 1961 ஆம் ஆண்டு அதனை வடக்கு - கிழக்கிலும் நடைமுறைப்படுத்த முனைந்தமைக்கு எதிராக, 1961 ஜனவரி 21 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் 7வது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைய, 1961 பெப்ரவரி 20 இல் ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்கேற்றதன் மூலம் மாவை. சேனாதிராஜா அவர்களின் போராட்ட வாழ்வு ஆரம்பித்தது எனலாம்.

பின்னர், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி உறுப்பினராக, ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்தின் செயலாளராக, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ் இளைஞர் பேரவையின் செயலாளராக காலப்பெறுமதி மிக்க அரசியற் பணியாற்றிய இவர், 1969 முதல் 1983 வரையான காலப்பகுதியில் இலங்கை அரசால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு, மகசின், வெலிக்கடை உள்ளிட்ட எட்டு சிறைச்சாலைகளில் ஏழு ஆண்டுகள் தடுத்துவைக்கப்பட்டார்.

1989ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர், தமிழரசின் மூத்த தலைவரும் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களின் மறைவின் பின்னர், தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகி, ஈழத்தமிழர்களின் உரிமைக்குரலாக நாடாளுமன்றத்தின் உள்ளும், வெளியும் ஒலிக்கத் தொடங்கினார்.

ஈழவிடுதலைப் போராட்ட எழுச்சியின் போதும், அதன் வீழ்ச்சியின் பின்னான தமிழ்த்தேசிய அரசியல் தளத்திலும் மாவை.சேனாதிராஜா அவர்களது பணிகளின் கனதி மிகப்பெரியது. ஒடுக்குமுறைக்கும், இன அழிப்புக்கும் உள்ளாக்கப்பட்ட ஒரு இனத்தின் அரசியற்குரலாக இருந்து, பன்னாட்டு அரசியல் ஒழுங்கிலும், ஜெனீவா அரங்கிலும் தன்னாட்சி உரிமை கோரும் ஈழத்தமிழரின் அரசியற்பயணத்திற்கு அங்கீகாரம் தேடும் வரலாற்றுப் பணியையே அவர் தன் வாழ்வாக்கிக் கொண்டவர்.

மென்வலுப் போக்கில் நம்பிக்கை கொண்ட செயற்பாட்டு அரசியல்வாதியாக இருந்து, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி என்ற தமிழ்த்தேசிய அரசியல் பேரியக்கத்தின் ஒரு தசாப்பத கால தலைவராக, கட்சியின் இயங்குதளத்தையும் மக்கள் அபிமானத்தையும் சிதையாமற் காத்த அவர்தான், இன்று தமிழ்த்தேசிய அரசியற் தளத்திலிருக்கும் என்போன்ற பலருக்கும் அரசியல் வழிகாட்டி.

உள்நாட்டு மற்றும் பன்னாட்டு அரசியற் தளம்பல் மிகுந்திருந்த 2014 செப்டம்பரில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டது முதல், தன் அந்திமத்தின் போதான இறுதிக் கணம் வரை எமது கட்சியின் தலைவராக, தெளிவார்ந்த அரசியற் செயற்பாடுகளே அவரது தெரிவுகளாயிருந்தன.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் தொடக்கம் இன்றைய நாள் வரையும் தமிழ் மக்கள் அவாவி நிற்கும் தீர்க்கம்மிகு அரசியற் தீர்வை, எமக்குக் கிடைத்த ஜனநாயக சந்தர்ப்பங்களில் எல்லாம் எமது இனம் ஒருமித்து வெளிப்படுத்தியே வந்திருக்கிறது. அதன் தொடர்ச்சியாக 2009ம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் மேற்கொள்ளப்பட்ட கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் பிற்பாடு, பன்னாட்டு சமூகத்துடன் இணைந்து தமிழ்மக்களுக்கு அவர்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை நிறைவுசெய்யக் கூடிய அர்த்தமுள்ள அரசியல் தீர்வு நோக்கிய பயணத்தில் உலகத்தின் எதிர்பார்ப்பை அங்கீகரித்து, இலங்கை அரசாங்கத்தின் போருக்குப் பிந்திய நிலைப்பாட்டாலும், சிங்கள பௌத்த பேரினவாத சிந்தனையினாலும் பின்னடைவுகளை எதிர்கொள்ள நேரிட்ட போதும் அமரர்.மாவை சேனாதிராஜா அவர்கள் எல்லாவகை சமாதான முன் முயற்சிகளுக்காகவும் மிகக்கடுமையாக உழைத்திருந்தார்.

போருக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி கட்டமைக்கப் பட்டிருந்த தமிழரசு என்ற அரசியல் ஆலமரம், கிளிநொச்சி மண்ணிலும் விழுதெறிந்து வளர்ந்ததில் மாவை அண்ணனின் பங்கே விரவியிருக்கிறது. தமிழ்த்தேசியத்தின் இருப்பையும் இனத்துவ உரித்தையும் அவாவி நிற்கும் ஓர் அரசியற் கட்சியின் பயணம் தடம் மாறாததாக இருக்கவேண்டுமெனில், அது முழுக்க முழுக்க மக்கள் மயப்பட்டதாக, மக்களின் மன உணர்வுகளுக்கு நெருக்கமானதாக இருக்க வேண்டுமென்பதை தனது அரசியல் அனுபவத்தால் உற்றுணர்ந்த மாவை அண்ணன், ஈழத்தமிழ் சமூகத்தின் இருபெரும் சக்திகளாகிய இளைஞர்களையும், மகளிரையும் சமதளத்தில் இணைத்துப் பயணிக்கும் எல்லாவகைப் பிரயத்தனங்களிலும் ஈடுபட்டிருந்தார். அத்தகைய முதிர்ச்சி மிக்க அவரது செற்பாடுகளின் பயன்விளைவினால் தான், தமிழ்த் தேசியம் அதன் கொள்கை இறுக்கமும், கொதிநிலையும் தாழாது அடுத்த சந்ததியிடத்தே இன்று கையளிக்கப்பட்டிருக்கிறது.

ஈழத்தமிழர்களின் தன்னாட்சி உரிமைக்காகவும், நீடித்த செழுமைமிகு இருப்புக்காகவும், தொலைநோக்கான வழிகாட்டலை வழங்குகின்ற பொறுப்பை ஏற்று, இலங்கைத் தமிழரசுக் கட்சியையும், மக்களையும் கொள்கைப் பற்றுறுதியோடு தீர்க்கமான வழிமுறைகளில் முன்னேற்றிச் சென்ற ஒரு பெருந்தலைவராகவே அவரது மறைவின் பின்னும் மாவை அண்ணருக்கான அடையாளம் மக்கள் மனங்களில் நிலைபெற்றிருக்கிறது.

நாங்கள் ஒரு சுதந்திர அரசியல் இயக்கமாக "மக்கள் திரட்சி நிறைந்த தேசமாக எம்மை உருவாக்கிக் கொள்ளாதவரை, பலவீனமான அரசியல் கோரிக்கையாளர்களாகவே இருக்க வேண்டி ஏற்படும் என்பதை உணர்ந்தவராக, தமிழரசுக்கட்சியை மக்கள் பேரியக்கமாக வழிநடாத்திச் செல்ல வேண்டுமென்ற நேர்த்திமிகு சிந்தனையில் பின்வாங்காத பெருந்தலைவராக இருந்த, எனது அரசியல் வழிகாட்டியும், எமது கட்சியின் மறைந்த பெருந்தலைவருமாகிய அண்ணன் மாவை.சேனாதிராஜா அவர்களின் தடங்களை இறுகப்பற்றியபடி, சரிந்துபோயிருக்கக் கூடிய தமிழரசின் செயலூக்கத்தினை மீள நிலைநிறுத்துவதற்காக தமிழ்த்தேசிய ஆர்வலர்களோடும், தொண்டர்களோடும் இணைந்து ஒழுகி எமது அரசியல் இயக்கத்தை நிலைநிறுத்துவதன் வழி, ஈழத்தமிழினத்தின் விடுதலை நோக்கிய பயணத்தை இதயசுத்தியோடு முன்கொண்டுசெல்ல உழைப்பதுவே அன்னாருக்கான உயரிய அஞ்சலி என்பதை உணர்ந்த ஒருவனாக, அத்தகையதோர் மன உறுதியோடு அவரது மறைவுக்கான எனது அஞ்சலிகளையும், அனுதாபங்களையும் பகிர்ந்து கொள்கிறேன்." என்றார்.

# மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் சிறப்பாக இடம்பெற்ற சர்வதேச சூழல் தினம்!



மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் சர்வதேச சூழல் தினமும், சர்வதேச நீர் தினப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர் கௌரவிப்பும் கல்லூரியின் பிரதி முதல்வர் சதயாளன் தலைமையி மிகவும் விமரிசையாக வியாழக்கிழமை இடம்பெற்றது.

சிறப்பாக நடைபெற்ற இவ்விழாவில் பிதம விருந்தினராக பொறியியலாளர். வீ.ஜே.தெய்வேந்திரா அவர்கள் கலந்துகொண்டு பல்வேறு சூழல் சார் கருத்துக்களை வழங்கினார்.

விழாவில் விருந்தினர்களாக எதிர் காலத்திற்குரிய சுற்றுச் சூழல் கழக செயலாளர் ம.சசிகரன், மாவட்ட சுற்றாடல் முன்னேடி ஆலோசகர் ப.அருந்தவம், மத்திய சுற்றாடல் அதிகாராசபையின் உடுவில் பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் ரூபினி ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் மாணவர்களின் சுற்றுச் சூழல் தொடர்பான ஆற்று கைகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் கலந்துகொண்ட மாணவியர் எதிர்காலத்தில் ஃபிளாஷ்டிக் பாவனையை இழிவாக்குவதில் தம்மாலியன்ற பங்களிப்பை வழங்க உறுதிபூண்டுமிருந்தனர்.





# Congratulations

## UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL - 2025

Congratulations on your Success!
Good Luck for your Next Journey.



**Hon. Tim Hodgson**

Member of Parliament - Markham—Thornhill

107-16 Esna Park Drive
Markham, Ontario
L3R 5X1

Telephone: (905) 479-1269



# Thana Insurance Inc

## T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

## PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

## NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

**Thana Manickavasagar**
Insurance Broker

THANA INSURANCE Inc.




Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road ,
unit D218,
Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கூட்டாட்சி, தமிழீழம் மற்றும் தமிழ் தேசியப் போராட்டத்தின் வழியான ஒரு அரசியல் பகுப்பாய்வு




இலங்கைத் தீவு, ஒரு காலத்தில் பல பண்டைய தமிழ் இராச்சியங்களின் தாயகமாக விளங்கியது, 1948-இல் சுதந்திரம் பெற்றபிறகு ஒரு அதிகமாகப் போட்டியிடப்படும் அரசியல் மற்றும் இனப் போர்க்களமாக மாறியுள்ளது. 20-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உச்சக்கட்டத்தை எட்டிய தமிழ் தேசியப் போராட்டம், அடிப்படையில் தனியரசு, அரசியல் சுயாட்சி மற்றும் வாழ்வாதாரம் குறித்த கேள்விகளில் வேரூன்றியுள்ளது. இந்தப் போராட்டத்தின் மையத்தில், தமிழ் கேள்விக்கு “தீர்வுகள்” என முன்மொழியப்பட்ட மூன்று முக்கிய அரசியல் கட்டமைப்புகள் உள்ளன:

1. ஒற்றை ஆட்சி முறை (Unitary State)
2. கூட்டாட்சி முறை (Federalism)
3. சுதந்திர தமிழீழம் (Independent Tamil Eelam)

இவை வெறும் கல்விசார் கருத்துகள் அல்ல, மாறாக தமிழ் மக்களுக்கு உறுதியான விளைவுகளைக் கொண்ட உண்மையான அரசியல் வழிகள். இந்தக் கட்டுரை அவற்றின் வேறுபாடுகள், செயல்முறைகள், தாக்கங்கள் மற்றும் நீதி மற்றும் வாழ்வாதாரத்திற்கான தமிழர்களின் நடப்புப் போராட்டத்துடன் அவை எவ்வாறு தொடர்புடையவை என்பதை ஆராய்கிறது.

இலங்கை தற்போது அதன் அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஒரு ஒற்றை ஆட்சி முறையின் கீழ் செயல்படுகிறது. இந்த முறையில், இறைமை முழுமையாக கொழும்பில் உள்ள மத்திய அரசாங்கத்தில் குவிக்கப்பட்டுள்ளது. பிராந்தியங்கள் அல்லது மாகாணங்களுக்கு, மத்திய அரசு ஒப்படைக்கும் அதிகாரத்தைத் தவிர, தங்களுக்கென சிறிதளவு அல்லது எந்த அதிகாரமும் இல்லை.

### ஒற்றை ஆட்சி முறையின் முக்கிய அம்சங்கள்:

- சட்டமியற்றும், நிர்வாக மற்றும் நீதித்துறை அதிகாரங்கள் கொழும்பில் முழுமையாக மையப்படுத்தப்பட்டுள்ளன.
- தமிழர் பெரும்பான்மைப் பகுதிகள் (வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள்) அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாதம் அளிக்கப்பட்ட சுயாட்சியை கொண்டிருக்கவில்லை.
- தமிழ் தேசியம், மொழி அல்லது கலாச்சார தனித்துவம் ஆகியவற்றுக்கு அங்கீகாரம் இல்லை (குறியீட்டுவாதம் தவிர).
- அவசரச் சட்டங்கள் மற்றும் தேசிய பாதுகாப்புச் சட்டங்கள் (PTA போன்றவை) தமிழ் எதிர்ப்பை அடக்க பயன்படுத்தப்படுகின்றன.

### ஒற்றை ஆட்சியின் கீழ் ஒடுக்குமுறையின் கருவிகள்:

- அரசியல்: தமிழர்கள் நாடாளுமன்றத்தில் ஓதுக்கப்படுகிறார்கள் எதிர்ப்பு குற்றமாக்கப்படுகிறது.
- மொழி: சிங்களம் முதன்மைப்படுத்தப்படுகிறது தமிழ் கீழ்நிலைப்படுத்தப்படுகிறது.
- கலாச்சாரம்: தமிழ் கலாச்சார இடங்கள் இராணுவமயமாக்கல் மற்றும் சிங்களமயமாக்கல் மூலம் அழிக்கப்படுகின்றன.
- நிலம்: நிலக் கைப்பற்றுதல், சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் தமிழ் பகுதிகளில் பௌத்த விகாரைகள் திணிக்கப்படுகின்றன.
- கல்வி: தமிழ் கல்வி முறை பலவீனப்படுத்தப்படுகிறது பாடத்திட்டம் சிங்களமயமாக்கப்படுகிறது.
- நீதித்துறை: நீதித்துறை சிங்கள-பௌத்த தேசியவாதத்தை நோக்கி சார்புடையது.
- இராணுவம்: போருக்குப் பிந்தைய வடக்குத் தமிழ்ப் பகுதிகளில் இலங்கையின் 80% இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கட்டமைப்பு, தமிழர்களை ஒரு அரசுக்குள் அரசற்றவர்களாக ஆக்கியுள்ளது, அவர்களின் சொந்த விதியை தீர்மானிக்க முடியாமல்.

### கூட்டாட்சி முறை - பகிரப்பட்ட அதிகாரத்திற்கான இடைக்கால அணுகுமுறை

கூட்டாட்சி முறை என்பது முழுமையான சுதந்திரம் மற்றும் ஒடுக்குமுறை ஒற்றை ஆட்சி மாதிரிக்கு இடையேயான ஒரு சமரசம் என சிலரால் முன்மொழியப்பட்டுள்ளது. இது மத்திய அரசாங்கம் மற்றும் அரை-தன்னாட்சி பெற்ற பிராந்திய அரசாங்கங்களுக்கு இடையே அரசியல் அதிகாரத்தைப் பிரிப்பதை உள்ளடக்கியது, ஒவ்வொன்றும் தங்களது சொந்த சட்டமியற்றும், நீதித்துறை மற்றும் நிர்வாக முறைகளைக் கொண்டிருக்கும்.

### கூட்டாட்சி முறையின் கோட்பாட்டு அம்சங்கள்:

- மத்திய மற்றும் பிராந்திய அரசுகளுக்கு இடையே இறைமை பகிரப்படுகிறது.
- கல்வி, மொழி, நிலம் மற்றும் உள்ளூர் பாதுகாப்பு தொடர்பான சட்டமியற்றும் தன்னாட்சி.
- ஒரு பெரிய கட்டமைப்பிற்குள் தேசிய அடையாளங்களை அங்கீகரித்தல்.
- அரசியலமைப்பு ரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் மூலம் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பது.

### ஒடுக்குமுறையைக் குறைப்பதற்கான கூட்டாட்சி முறையின் தாக்கம்:

- மொழி உரிமைகள்: தமிழ் பிராந்திய நிர்வாகத்தில் சமமாக்கப்படுகிறது.
- கலாச்சார தன்னாட்சி: தமிழ் பாரம்பரியங்கள், மதம் மற்றும் பாரம்பரியம் பாதுகாக்கப்படுகின்றன.
- பாதுகாப்புக் கட்டுப்பாடு: மாகாண காவல்துறை உள்ளூர் ஆட்சிக்கு பொறுப்பாகும்.
- பொருளாதார வளங்கள்: உள்ளூரில் கட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சி நிதிகள் மற்றும் திட்டமிடல்.
- நீதித்துறை அதிகாரம்: தமிழ் மொழி மற்றும் பிரதிநிதித்துவத்துடன் கூடிய பிராந்திய நீதிமன்றங்கள்.

### இலங்கை சூழலில் கூட்டாட்சி முறையின் வரம்புகள்:

- உண்மையான கூட்டாட்சியை நடைமுறைப்படுத்த சிங்கள-பௌத்த அரசியலுக்கு வரலாற்று விருப்பம் இல்லை.
- 13-ஆம் திருத்தம் (இந்தியா திணிக்கப்பட்ட தீர்வு) உண்மையான சுயாட்சியை வழங்கத் தவறியது.
- கூட்டாட்சி முறை சிங்கள தேசியவாதிகளால் ”“பிரிவினைக்கான முதல் படி” எனக் கருதப்படுகிறது.
- கூட்டாட்சி உரையாடலுக்கான முந்தைய முயற்சிகள் (B-C ஒப்பந்தம், D-C ஒப்பந்தம், ISGA) சிங்களத் தலைவர்களால் ஒருதலைப்பட்சமாக ரத்து செய்யப்பட்டன.

கூட்டாட்சி முறை தற்காலிக நிவாரணத்தை வழங்கலாம், ஆனால் தமிழ் தேசியத்தை மறுக்கும் ஒரு அரசில் இது நம்பகத்தன்மையற்றது. இது தமிழ் விடுதலை இயக்கத்தைத் தீர்க்காமல் தாமதப்படுத்துவதற்கு வரலாற்று ரீதியாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

### சுதந்திர தமிழீழம் - இறைமை மற்றும் வாழ்வாதாரத்தின் பாதை

சுதந்திர தமிழீழம் என்பது தமிழ் மக்களின் தன்னரசு உரிமையின் முழுமையான வெளிப்பாடாகும். இது இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பாரம்பரிய தமிழ் தாயகத்தில் ஒரு இறைமை, மதச்சார்பற்ற மற்றும் ஜனநாயக மாநிலத்தை உருவாக்குவதைக் குறிக்கிறது. இந்த லட்சியம் 1976-இல் வடுகுட்டையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தில் உறுதிப்படுத்தப்பட்டது, மேலும் ஜனநாயக தேர்தல்கள் மற்றும் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் மூலம் ஆயுதப் போராட்டத்தின் மூலம் துரிதப்படுத்தப்பட்டது.

### தமிழீழத்தின் முக்கிய கோட்பாடுகள்:

- தமிழ் தேசியத்தை அங்கீகரித்தல்
- உள் மற்றும் வெளி தன்னரசு உரிமை
- இனப்படுகொலை மற்றும் கலாச்சார அழிப்பிலிருந்து பாதுகாப்பு
- நிலம், மொழி மற்றும் அடையாளத்தை மீட்டெடுத்தல்
- தேசியங்களுக்கு இடையே சம மரியாதை

### தனி தமிழ் அரசின் நன்மைகள்:

- பாதுகாப்பு: இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் இனப் படுகொலை முடிவுக்கு வரும்.
- ஆட்சி: உள்ளூர் தேவைகளுக்கு பதிலளிக்கும் தமிழர்-ஆளும் ஆட்சி.
- மொழி & கலாச்சாரம்: தமிழ் மொழி, கல்வி, கலைகளுக்கு முழு சுதந்திரம்.
- பொருளாதாரம்: உள்ளூர்-ஆளும் பொருளாதாரக் கொள்கைகள் வெளிநாடு தமிழர் முதலீடு.
- உலகளாவிய உரிமைகள்: UN, WHO போன்ற சர்வதேச அமைப்புகளில் உறுப்பினர்.

### சர்வதேச சட்டத்தின் கீழ் சட்டபூர்வமான அடிப்படை:

- ஐ.நா. சாசனம், பிரிவு 1(2): மக்களின் தன்னரசு உரிமை.
- ICCPR & ICESCR, பிரிவு 1: “அனைத்து மக்களுக்கும் தங்கள் அரசியல் நிலையை சுதந்திரமாக தீர்மானிக்க உரிமை உண்...டு”
- மாண்டேவீடியோ மாநாடு (1933): அரசு தகுதிக்கான அளவுகோல்கள் - மக்கள், பிரதேசம், அரசாங்கம், உறவுகளை மேற்கொள்ளும் திறன்.
- ICJ முன்னுதாரணங்கள்: கோசோவோ தீர்ப்பு, ஒரு பக்க அறிவிப்புகள் சர்வதேச சட்டத்தின் கீழ் சட்டவிரோதம் அல்ல என உறுதிப்படுத்துகிறது.

### ஒப்பீட்டுப் பகுப்பாய்வு: தமிழர்களின் விருப்பங்கள் சூழலில்

- தமிழ் தேசியத்தை அங்கீகரித்தல்: ஒற்றை ஆட்சி - மறுக்கப்பட்டது, கூட்டாட்சி - பகுதியாக, சுதந்திர தமிழீழம் - உறுதிப்படுத்தப்பட்டது
- சுய-ஆட்சி: ஒற்றை ஆட்சி - இல்லை, கூட்டாட்சி - வரையறுக்கப்பட்டது, சுதந்திர தமிழீழம் - முழுமையானது
- இனப்படுகொலையிலிருந்து பாதுகாப்பு: ஒற்றை ஆட்சி - ஆபத்து, கூட்டாட்சி - உத்தரவாதம் இல்லை, சுதந்திர தமிழீழம் - உறுதி
- கலாச்சார தன்னாட்சி: ஒற்றை ஆட்சி - ஒடுக்கப்பட்டது, கூட்டாட்சி - ஆதரவு, சுதந்திர தமிழீழம் - உத்தரவாதம்
- நில உரிமை: ஒற்றை ஆட்சி - பறிக்கப்பட்டது, கூட்டாட்சி - பேச்சுவார்த்தை, சுதந்திர தமிழீழம் - மீட்டெடுக்கப்பட்டது
- வளங்களின் மீது கட்டுப்பாடு: ஒற்றை ஆட்சி - மையப்படுத்தப்பட்டது, கூட்டாட்சி - பகுதியாக, சுதந்திர தமிழீழம் - முழுமையானது
- தலைமையை தேர்ந்தெடுக்கும் உரிமை: ஒற்றை ஆட்சி - கட்டுப்படுத்தப்பட்டது, கூட்டாட்சி - நிபந்தனை, சுதந்திர தமிழீழம் - சுதந்திரம்

### இறுதிப் பிரதிபலிப்பு: தமிழர் போராட்டம் ஒரு தேசிய விடுதலை இயக்கம், சிறுபான்மைப் பிரச்சினை அல்ல


தமிழ் கேள்வி ஒரு நல்லிணக்க அரசுக்குள் ஒரு சிறுபான்மையினரின் உரிமைகள் அல்ல, மாறாக ஒரு ஒடுக்குமுறை, பெரும்பான்மை, இன-மத அரசுக்கு எதிரான ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாகும். ஒற்றை ஆட்சி முறை என்பது கட்டமைப்பு ரீதியான இனப்படுகொலைக்கான ஒரு கவனமாக பராமரிக்கப்படும் கருவியாகும். கூட்டாட்சி முறை, காகிதத்தில் கவர்ச்சிகரமாக இருந்தாலும், தமிழர்களின் லட்சியங்களை ஏமாற்ற, தாமதப்படுத்த மற்றும் சிதைக்க பயன்படுத்தப்பட்டுள்ளது.

சுதந்திர தமிழீழம் மட்டுமே தமிழ் தேசியத்திற்கு நீண்டகால நீதி, பாதுகாப்பு மற்றும் மரியாதையை உறுதி செய்ய முடியும்.

“நாம் நமது மொழி, நிலம் மற்றும் சுதந்திரத்தை இழந்தால் - நமது ஆன்மாவை இழப்போம்.”

தமிழ் மக்கள் தங்கள் அடையாளத்தைக் கோருவதற்காக - உயிர்கள், மரியாதை மற்றும் நாடுகடத்தல் ஆகியவற்றில் மிகப்பெரும் விலை கொடுத்துள்ளனர். வரலாறு காட்டுவது போல், அடிப்படை காரணம் - சிங்கள-பௌத்த ஒற்றை அரசு - கலைக்கப்படாத வரை, உண்மையான அமைதி சாத்தியமில்லை.

உலகத் தமிழ் தேசியம் ஒன்றுபட வேண்டும் - சமரசத்தின் பின்னால் அல்ல, நீதியின் பின்னால்.




- ஈழத்து நிலவன் -
(09-06-2025)

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# இலங்கைக்கு கடத்துவதற்காக ராமேஸ்வரம் கடற்கரையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ரூ.10 லட்சம் மதிப்பிலான கஞ்சா மீட்பு — 6 பேர் கைது

## மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனிப்பிரிவு போலீசார் அதிரடி நடவடிக்கை

- எஸ்.ஆர்.லெம்பேட் (08-06-2025)



சட்ட விரோதமான முறையில் கடல் வழியாக இலங்கைக்கு கடத்துவதற்காக ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகம் அருகே உள்ள கடற்கரையில் சனிக்கிழமை 7ம் திகதி காரில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 10 லட்சம் இந்திய மதிப்பிலான 50 கிலோ கஞ்சா மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்திய கார் உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்ட கடற்கரை பகுதி இலங்கைக்கு மிக அருகே இருப்பதால் இலங்கை இந்திய சர்வதேச கடல் எல்லை ஊடாக படகுகளில் இலங்கைக்கு கஞ்சா, ஐஸ் போதைப்பொருள், பீடி இலை பண்டல்கள், கடல் அட்டை, சமையல் மஞ்சள், திமிங்கலம் துடுப்பு, சுக்கு உள்ளிட்ட பொருட்கள் அதிக அளவு சட்டவிரோதமான முறையில் கடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுக கடற்கரை பகுதியில் இருந்து இலங்கைக்கு படகில் கஞ்சா கடத்தி செல்ல இருப்பதாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சந்தீஷ்க்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனிப்பிரிவு சார்பு ஆய்வாளர் வடிவேல் தலைமையில் ஐந்து பேர் அடங்கிய தனிப்பிரிவு போலீசார் குழுவாக ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து சேராங்கோட்டை வரை கடற்கரை பகுதியில் திடீர் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது மீன்பிடி துறைமுகம் அருகே சந்தேகத்திற்கிடமான கார் ஒன்று நின்று கொண்டிருந்ததை கண்ட தனிப்பிரிவு போலீசார் காரில் இருந்து ஒருவர் பெரிய பை ஒன்றை எடுத்து நாட்டுப்படகில் ஏற்றுவதற்காக கடற்கரைக்கு கொண்டு சென்றதையடுத்து போலீசார் அந்த நபரை மடக்கி பிடித்த போது காரில் மேலும் இருவர் இருந்தது தெரியவந்ததையடுத்து காரை சோதனை செய்த போது காரில் கஞ்சா மூட்டைகள் இருந்தது தெரியவந்தது.

இதையடுத்து கஞ்சா மூட்டைகள், கடத்தலுக்கு பயன்படுத்திய கார் மற்றும் காரில் இருந்த மூவரை பிடித்து விசாரணைக்காக ராமேஸ்வரம் துறைமுகம் காவல் நிலையத்திற்கு தனிப்பிரிவு போலீசார் அழைத்து சென்றனர்.

பின்னர் அவர்களிடம் போலீசார நடத்திய தீவிர விசாரணையில் கஞ்சா மூட்டைகள் படகில் இலங்கைக்கு கடத்திச் செல்வதற்காக கொண்டுவரப்பட்டதாக தெரிவித்ததுடன் அவர்கள் கொடுத்த தகவல் அடிப்படையில் தங்கச்சிமடம் மற்றும் ராமேஸ்வரம் பகுதிகளை சேர்ந்த ஆறு நபர்களை போலீசார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் பறிமுதல் செய்யப்பட்ட 50 கிலோ கஞ்சாவின் இந்திய மதிப்பு ரூ.10 லட்சம் என்றும், பிடிபட்ட கார் ரூ.5 லட்சம் இருக்கும் என போலீசார் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே கடற்கரை பகுதிகளில் சட்டவிரோத நடவடிக்கை ஈடுபடும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சந்தீஷ் எச்சரித்துள்ளார்.

ராமேஸ்வரம் மீன் பிடித்து துறைமுகத்தில் இலங்கைக்கு கடத்துவதற்காக வைத்திருந்த ரூ.10 லட்சம் மதிப்பிலான உயர் ரக கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது மீனவ கிராமங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மன்னார் மறைமாவட்டத்தின் பேசாலை பங்கைச் சேர்ந்த 71 மாணவ மாணவிகளுக்கு உறுதிப்பூசுதல் என்னும் திருவருட்சாதனம் வழங்கி வைப்பு



- எஸ்.ஆர்.லெம்பேட் (07-06-2025)

மன்னார் மறைமாவட்டத்தின் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய பங்கைச் சேர்ந்த 71 மாணவ மாணவிகளுக்கு 7ம் திகதி அன்றையதினம் சனிக்கிழமை காலை உறுதிப்பூசுதல் என்னும் திருவருட்சாதனம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

பேசாலை பங்குத்தந்தை அருட்தந்தை எஸ்.சத்தியராஜ் அடிகளார் ஏற்பாட்டில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் குறித்த திருவருட்சாதனம் வழங்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட ஆயரின் தலைமையில் நடைபெற்ற கூட்டு திருப்பலியில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை தமிழ் நேசன் அடிகளார், மறைமாவட்ட ஆயர் இல்ல நிதி பொறுப்பாளர் அருட்தந்தை சுரேந்திரன் றெவல் அடிகளார், ஆகியோர் கலந்து கொண்டு கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.







# மன்னார் நகர் பகுதி பாடசாலைகளின் சுகாதார குறைபாடுகள் தொடர்பில் சுகாதார அதிகாரிகள் கண்காணிப்பு நடவடிக்கை



(09-06-2025)

மன்னார் நகர் பகுதியில் உள்ள பாடசாலைகள் தொடர்பாக மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு கிடைக்கப்பெற்ற எழுத்து மூல முறைப்படுகளை தொடர்ந்து மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி ரூபன் லெம்பேட் அவர்களின் ஆலோசனையின் பெயரில் தலைமை பொது சுகாதார பரிசோதகரின் தலைமையில் 9ம் திகதி அன்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஆய்வு நடவடிக்கையின் போது பாடசாலை ஒன்றில் காணப்பட்ட பல்வேறு சுகாதார குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பாக மாணவ மாணவிகள் பயன்படுத்தும் மலசலகூடங்கள் உரிய முறையில் சுத்தம் பேனப்படாமை, பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படும் மலசலகூடங்கள், சுகாதாரமற்ற முறையில் சிற்றுண்டி சாலையில் கையாளப்படும் உணவு பொருட்கள், மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச உணவு தயாரிக்கும் பகுதி பொருத்தமான முறையில் பராமரிக்கப்படாமை, சுத்தமின்றி காணப்படுகின்றமை, கழிவுநீர் வெளியேறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமை, டெங்கு நுளம்பு பரவும் வகையில் சுற்றுச்சூழல் காணப்படுகின்றமை, ஆசிரியர் விடுதி துப்பறவின்மை, பாடசாலை வளாகத்தில் கழுதை,நாய் போன்ற மிருக நடமாட்டம், பொலித்தீன் மற்றும் ஏனைய குப்பைகள் ஒழுங்கான முறையில் அகற்றப்படாமை போன்ற பல்வேறு சுகாதார குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளது.

அதே நேரம் பாடசாலை சூழலில் மாணவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்த கூடிய வகையிலான பொருட்கள், உலோகங்கள், கட்டிடங்கள், மணல் திட்டுகள் என்பன அடையாளப்படுத்தப்பட்ட நிலையில் அவற்றையும் அகற்றுவதற்கான பணிப்புறை மன்னார் பொது சுகாதார அதிகாரிகளினால் பாடசாலை நிர்வாகதினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதே நேரம் மாணவர்களுக்கு உணவு தயாரிக்கும் பகுதி புணர் நிர்மாணம் செய்யப்படும் வரை பொது சுகாதார அதிகாரிகளால் மூடி வைக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் தொடர்ச்சியாக பாடசாலைகளின் சுகாதார குறைபாடுகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெறும் நிலையில் மன்னாரில் உள்ள பாடசாலைகளில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்சியாக மன்னார் பொது வைத்திய அதிகாரிகள் பணிமனையினால் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.









# தமிழ்த் தேசியப் பேரவை: தமிழ் மக்களை எழுச்சியுறச் செய்யுமா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

பைபிள், பழைய ஆகமத்தில் ஒரு வசனம் உண்டு "பூமியிலே சூரியனுக்கு கீழே நூதனமானது எதுவுமே இல்லை" என்று. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உருவாக்கி வைத்திருக்கும் தமிழ்த் தேசியப் பேரவையும் ஏறக்குறைய அப்படித்தான்.

இப்பொழுது தமிழ்த் தேசியப் பேரவைக்குள் இருக்கும் கட்சிகளுக்குள் சந்திரகுமாரின் கட்சியைத் தவிர ஏனைய பெரும்பாலான கட்சிகள் தமிழ் மக்கள் பேரவைக்குள் இருந்தவைதான். அதாவது கிட்டத்தட்ட ஆறு ஏழு ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மக்கள் பேரவைக்குள் ஒன்றாக இருந்தவை. அப்பொழுது தயாரித்த யாப்பு முன்மொழிவைத்தான் இப்பொழுது இறுதித் தீர்வுக்கான முன்மொழிவாக அவர்கள் வைக்கிறார்கள். தமிழ் மக்கள் பேரவைக்குள் காணப்பட்ட சிவில் சமூகப் பிரதிநிதிகள், விக்னேஸ்வரனின் கட்சி ஆகிய இரண்டும் இப்போதுள்ள கூட்டுக்குள் இல்லை. புதிதாக சந்திரகுமார் வந்திருக்கிறார்.

அப்படித்தான் கடந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ்ப் பொது வேட்பாளரை முன் நிறுத்திய தரப்புகளில் பெரும்பாலானவை இப்பொழுது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு இணைந்து புதிய கூட்டுக்குள் காணப்படுகின்றன. பொதுக் கட்டமைப்புக்குள் அங்கம் வகிந்த மக்கள் அமைப்பு இல்லை என்பது ஒரு வித்தியாசம். சந்திரக்குமார் சஜித்தை ஆதரித்தவர். அதுவும் ஒரு வித்தியாசம். அப்படிப் பார்த்தால் தமிழ்ப் பொது வேட்பாளருக்காக ஒன்று திரண்ட கட்சிகள்தான் மீண்டும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு இணைந்து ஒரு புதிய கூட்டை உருவாக்கியிருக்கின்றன.

அதாவது கிட்டத்தட்ட பத்து மாதங்களுக்கு முன்பு தமிழ்ப் பொது வேட்பாளருக்காக ஒன்று திரண்டு அதே தரப்புகள் இப்பொழுது சமத்துவக் கட்சி சைக்கிள் கூட்டு என்பவற்றோடு இணைந்து ஒரு புதிய கூட்டாக மேலெழுந்திருக்கின்றன.

பத்து மாதங்களுக்கு முன்பு கஜேந்திரக்குமார் பொது வேட்பாளரை எதிர்த்தவர். அந்த விடயத்தில் அவரும் சுமந்திரனும் ஒரே கோட்டில் நின்றார்கள். இரு வேறு நிலைப்பாடுகளோடு அவர்கள் பொது வேட்பாளரை எதிர்த்தார்கள். ஆனால் பொது வேட்பாளருக்குக் கிடைத்த வாக்குகளை பின்னர் கஜேந்திரக்குமார் தேசியப் பண்புமிக்கவை என்று சொன்னார். இப்பொழுது அதே கட்சிகளோடு கூட்டு. ஆனால் மூன்று வித்தியாசங்கள். தமிழ்த் தேசியப் பொதுக்கூட்டமைப்பு இல்லை. விக்னேஸ்வரனின் கட்சி இல்லை. சந்திரகுமாரின் கட்சி உள்ளே வந்திருக்கிறது.

எனவே இப்பொழுது தொகுத்துப் பார்த்தால் என்ன தோன்றுகிறது? தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது தமிழ் மக்கள் பேரவையை பாதுகாக்க வேண்டும் என்ற முடிவெடுத்து கிட்டத்தட்ட ஆறு ஏழு ஆண்டுகளுக்கு முன் பொறுமையாகவும் தீர்க்கதரிசனமாகவும் செயற்பட்டு இருந்திருந்தால் இன்றைக்கு தமிழ்த் தேசிய அரசியலின் நிலைமை எங்கேயோ போயிருக்கும். அப்படித்தான் ஆகக் குறைந்தது கடந்த ஆண்டு பொது வேட்பாளரின் விடையத்திலாவது முன்னணி தீர்க்கதரிசனமாக முடிவெடுத்து இருந்திருந்தால் இன்றைக்கு முன்னணிதான் சில சமயம் தமிழ்த் தேசிய அரசியலின் தலைமைச் சக்தியாக மேல் எழுந்திருந்திருக்கும். ஆனால் கடந்த சுமார் 10 ஆண்டுகளில் அவர்கள் தீர்க்கதரிசனமற்ற முடிவுகளை எடுத்தார்கள். பகைவர்களைச் சம்பாதித்தார்கள். குறிப்பாக தமிழ் மக்கள் பேரவை, தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு ஆகிய நூதனமான கட்டமைப்புகளை பலப்படுத்தத் தவறினார்கள்.

தமிழ் மக்கள் பேரவை, தமிழ்த் தேசியப் பொதுக கட்டமைப்பு ஆகியவை இந்தப் பிராந்தியத்திலேயே நூதனமான அரசியல் தோற்றப்பாடுகள். கட்சிகளும் மக்கள் அமைப்புகளும் இணைந்து உருவாக்கிய ஒரு கலவை. அப்படி ஒரு கலவைதான் இப்பொழுது நாட்டை ஆளும் தேசிய மக்கள் சக்தியும். தமிழ் மக்கள் பேரவை படிப்படியாக பலவீனம் அடைந்து போன ஒரு காலகட்டத்தில் 2018இல் தெற்கில் தேசிய மக்கள் சக்தி உருவாகியது. இன்றைக்கு அது ஆளுங்கட்சியாக எழுச்சி பெற்றுவிட்டது.

எனவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடந்த ஒரு தசாப்த காலத்தில் விட்ட தவறுகளில் இருந்து கற்றுக் கொண்டவற்றின் அடிப்படையில் புதிய கூட்டைப் பாதுகாக்குமாக இருந்தால் தமிழ்த் தேசிய அரசியலில் அடுத்த கட்டத்திற்கு தலைமை தாங்கும் சக்தியாக அவர்கள் தங்களை வளர்த்துக் கொள்ள முடியும்.

கடந்த ஆண்டின் தொடக்கத்தில் தனது சொந்தக் கட்சிக்காரர்களாலே நிராகரிக்கப்பட்டவரும், அதே ஆண்டின் இறுதியில் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டவருமாகிய சுமந்திரன் இப்பொழுது தமிழ் மக்கள் மத்தியில் உள்ள மூத்த கட்சி ஒன்றின் தலைவர் போல செயல்படுகிறார். கட்சிக்கு கிடைத்த வெற்றிக்கூடாக அவர் தன்னை ஸ்தாபித்துக் கொள்ளப் பார்க்கிறார். தமிழரசுக் கட்சிக்கு கிடைத்த வெற்றி சுமந்திரனின் வெற்றியோ அல்லது சிவிகேயின் வெற்றியோ அல்ல. தமிழ் மக்கள் மத்தியில் வடக்கு கிழக்கு தழுவிய ஒரே கட்சியாக அது காணப்படுகின்றது. அதனால்தான் அது ஏனைய கட்சிகளை விடவும் பலமாக மேலெழ முடிந்தது.

ஆனால் முன்னணி யாழ்ப்பாணத்துக்கு வெளியில் போதிய அளவுக்கு வேலை செய்யவில்லை என்பதுதான் உண்மை. கடந்த 15 ஆண்டுகளிலும் அவர்கள் ஒரு கட்சியாகவும் தங்களை வளர்த்துக் கொள்ளத்தவறி விட்டார்கள்; தங்கள் கொள்கைகளை மக்கள் மயப்படுத்தி தமிழ் மக்களை ஒரு தேசமாகவும் திரட்டத் தவறி விட்டார்கள்அதன் விளைவாக தமிழரசுக் கட்சியின் முதன்மையைக் கேள்விக்கு உள்ளாக்க அவர்களால் முடியவில்லை.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கிய ஆணை என்பது மிகத் தெளிவானது. ஒன்றுபட்டால் மட்டும்தான் என்பிபியை எதிர்கொள்ளலாம் என்பதே அந்த ஆணை. ஒன்றுபடவில்லை என்றால் என்பிபி அடுத்த மாகாண சபைக்குள் மேலும் பலமாக கால்களை ஊன்றப் பார்க்கும்.

ஆனால் கடந்த சில வாரங்களாக புதிய உள்ளூராட்சி சபைகளை உருவாக்கும் விடயத்தில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளுக்கு இடையே நடக்கும் உரையாடல்கள், வாதப் பிரதிவாதங்கள், மோதல்கள், குறிப்பாக அவர்களுடைய விசுவாசிகள் சமூக வலைத்தளங்களில் முன்னெடுக்கும் வெறுப்புப் பிரச்சாரங்கள் போன்றவற்றைத் தொகுத்துப் பார்த்தால் தெரிவது என்னவென்றால், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை மேற்படி கட்சிகள் சரியாக கிரகித்துக் கொள்ளவில்லை என்பதுதான். இந்த ஆணை புதியது அல்ல. கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் ஏறக்குறைய தமிழ் மக்கள் வழங்கிய ஆணை அத்தகையதுதான். தேசமாகத் திரளவில்லை என்றால் என்பிபியின் வழிகளை இலகுவாக்குவீர்கள் என்பதே.

எனவே பொது எதிரிக்கு எதிராகத் தேசமாகத் திரள்வது எப்படி என்பதுதான் இங்குள்ள சவால். சுமந்திரன் அதற்கு தயாரில்லை என்பதற்காக, சி வி கே அந்த விடயத்தில் தளம்புகிறார் என்பதற்காக, தமிழரசு கட்சிக்குள் உள்ள எல்லாரையுமே அவ்வாறு தேசத் திரட்சிக்கு எதிரானவர்கள் என்று முத்திரை குத்த முடியாது; மாத்திரை குத்தவுங்கூடாது. ஏனென்றால் தமிழரசுக் கட்சிக்குள் இப்பொழுது தெளிவாக இரண்டு அணிகள் உண்டு. அதில் சிறீதரன் அணியானது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிடம் பரிவோடு காணப்படுகிறது. சந்திரக்குமாரை புதிய கூட்டுக்குள் உள்ளீர்த்ததன் மூலம் சிறீதரனுக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையிலான உறவில் சில நெருடல்கள் ஏற்படலாம். ஆனாலும் சுமந்திரனுக்கு எதிரான அணிச் சேர்க்கை என்று பார்க்கும் பொழுது சிறீதரன் அணி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குக் கிட்டவாகத்தான் நிற்கும்.

அதற்காக அரசியலை சுமந்திரனுக்கு எதிராக குவிமையப்படுத்தத் தேவையில்லை. அது தவறு. மாறாக தேசத்தைத் திரட்டுவது என்ற அடிப்படையில் கிராமங்களில் இருந்து தமிழ்த் தேசியப் பேரவையை எப்படிக் கட்டியெழுப்புவது என்று சிந்திக்கலாம். ஏறக்குறைய ஆறு ஏழு ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மக்கள் பேரவைக்குள் இருந்த பொழுது இதே கட்சிகள்தான் எழுக தமிழ்களைச் செய்தன. மக்கள் எழுச்சிகள்தான் அரசியலில் புதிய ரத்தச் சுற்றோட்டங்களை ஏற்படுத்தும். அவ்வாறான மக்கள் எழுச்சிகளுக்குரிய உணர்ச்சிகரமான தொடக்கப் புள்ளிகள் ஏற்கனவே உண்டு. உதாரணமாக தையிட்டி. அடுத்தது, கிழக்கில் மேய்ச்சல் தரை. மன்னாரில் கனியவள மண் அகழ்வு.. இவை தவிர அண்மைக் காலமாக கிண்டப்பட்டு வரும் செம்மணிப் புதைகுழி. இது ஓர் உணர்ச்சிகரமான விடயம் இங்கே கண்டெடுக்கப்படும் எலும்புக்கூடுகள் புதைக்கப்பட்ட விதம், பார்ப்பவர்களை கொதிப்படையச் செய்யக்கூடியவை. எனவே இந்தப் புதை குழியைச் சூழ்ந்திருக்கும் அரசியலை புதிய போராட்டக் களமாக மாற்றலாம்.

அப்பகுதியில் நூற்றுக்கணக்கானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டதாக கருதத்தக்க வாக்குமூலங்களை சம்பந்தப்பட்ட படைத்தரப்பைச் சேர்ந்தவர்களே நீதிமன்றங்களில் வாக்குமூலங்களாக வழங்கியிருக்கிறார்கள். எனவே செம்மணிப் புதை குழியானது காணாமல் ஆக்கப்பட்டவர்களைப் புதைத்த குழிகளில் ஒன்றாக இருக்குமா இல்லையா என்ற உணர்ச்சிக் கொதிப்பான சந்தேகம் வலுத்து வருகின்றது. அந்த உணர்ச்சிப் புள்ளியில் இருந்து அரசியல் செய்ய வேண்டிய தேவை தமிழ் தேசிய கட்சிகளுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் குடிமக்கள் சமூகங்களுக்கும் உண்டு. ஏற்கனவே கடந்த ஐந்தாம் தேதி பல்கலைக்கழக மாணவர்கள் அப்பகுதியில் ஒரு கவன ஈர்ப்புப் போராட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். யாழ். பல்கலைக்கழகம் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ஒப்பீட்டளவில் துடிப்பாகச் செயல்பட்டு வருகிறது.

தமிழ்த் தேசியப் பேரவையும் செம்மண்ணிலிருந்து மக்கள் மைய அரசியலை தொடங்கலாம். ஏற்கனவே எழுக தமிழ் செய்த அனுபவம் அவர்களுக்கு உண்டு. மக்களை எழுச்சி பெறச் செய்வதென்றால் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் எதையாவது காட்ட வேண்டும் அல்லது உணர்ச்சிக் கொதிப்பான ஏதாவது ஒன்று நடக்க வேண்டும். தமிழ்த் தேசிய அரசியலில் எதிரும் புதிருமாக இருந்த தரப்புகள் ஒன்றாகத் திரளும்பொழுது அது மக்கள் மனதில் புதிய நம்பிக்கைகளை உருவாக்கும். கடந்த பௌர்ணமி நாளன்று தையிட்டியில் வழமையை விட கூடுதலானவர்கள் திரண்டார்கள். அது ஐக்கியத்தின் பலம்.

அதுபோலவே செம்மணி புதைகுழி போன்றவை மக்களை இயல்பாக எழுச்சியுறச் செய்பவை. எனவே புதிய கூட்டு அது ஒரு தேர்தல் மைய கூட்டு அல்ல மக்கள் மைய அரசியலுக்கான ஒரு தொடக்கம் என்பதனை நிரூபிக்குமாக இருந்தால் தமிழ் மக்கள் அதன் பின் வருவார்கள்.

---

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடதய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

# உலகமே அழுதழுது கண்ணீர் வடிக்கின்றது! இந்தியாவின் குஜராத் மாநிலத்தின் அகமதாபாத் நகரில் இடம்பெற்ற விமானவிபத்தில் பலியான பல குடும்பங்களின் சோகக் கதைகள்.








கடந்த 11ம் திகதி புதன்கிழமையன்று இந்தியாவின் குஜராத் மாநிலத்தின் அகமதா-பாத் நகரில் இடம்பெற்ற விமானவிபத்தில் பலியான பல குடும்பங்களின் சோகக் கதைகள். தொடர்ந்து வெளிவந்த வண்ணம் உள்ளன.

பிரதிக் ஜோஷி கடந்த ஆறு வருடங்களாக லண்டனில் வசித்து வந்தார். ஒரு மென்பொருள் நிபுணரான அவர், தனது மனைவி மற்றும் இந்தியாவில் தங்கியிருந்த மூன்று இளம் குழந்தைகளுக்கு வெளிநாட்டில் ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க வேண்டும் என்று நீண்ட காலமாக கனவு கண்டிருந்தார்.

பல வருட திட்டமிடல், காகித வேலைகள் மற்றும் பொறுமைக்குப் பிறகு, அந்தக் கனவு இறுதியாக நனவாகியது. இரண்டு நாட்களுக்கு முன்பு, அவரது மனைவி, மருத்துவ நிபுணரான டாக்டர் கோமி வியாஸ், இந்தியாவில் தனது வேலை-யை ராஜினாமா செய்தார். பைகள் நிரம்பியிருந்தன, விடைபெற்றனர், எதிர்காலம் காத்திருக்கிறது.

இன்று காலை, நம்பிக்கை, உற்சாகம் மற்றும் திட்டங்களால் நிரப்பப்பட்ட அவர்கள் ஐந்து பேரும், லண்டனுக்கு ஏர் இந்தியா விமானம் 171 இல் ஏறினார்கள். இந்த செல்ஃபியை எடுத்து, உறவினர்களுக்கு அனுப்பினார்கள். புதிய வாழ்க்கையைத் தொடங்க ஒரு வழி பயணம்.
ஆனால் அவர்கள் அதை ஒருபோதும் அடையவில்லை. வி-மானம் விபத்துக்குள்ளானது. அவர்களில் யாரும் உயிர் பிழைக்கவில்லை.
சில நிமிடங்களில், வாழ்நாள் கனவுகள் சாம்பலாகிவிட்டன. ஒரு மிருகத்தனமான நினைவூட்டல், வாழ்க்கை பயங்கரமாக உடையக்கூடியது. நீங்கள் கட்டும் அனைத்தும், நீங்கள் எதிர்பார்க்கும் அனைத்தும், நீங்கள் விரும்பும் அனைத்தும், அனைத்தும் ஒரு நூலால் தொங்குகின்றன. எனவே உங்களால் முடிந்தவரை, வாழுங்கள், நேசிக்கவும், நாளை மகிழ்ச்சி தொடங்கும் வரை காத்திருக்காதீர்கள்.

மேற்படி விமான விபத்தில் சாதுரியமாக செயற்பட்டு உயிர் தப்பிய “அதிசியப் பிறவி“யான ஒரு இளைஞர் பற்றிய விபரங்களும் வெளிவந்த வண்ணம் உள்ளன.

மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பயிற்சி வைத்தியர்கள் என பலரும் தங்கியிருந்த விடுதிக்கு மேல்பகுதியில் விழுந்து எரிந்த இந்த விமானத்தில் பயணம் செய்த மற்றும் பணி செய்த அனைவருமே கொல்லப்பட்டவர்களாக உலகின் அனுதாபத்தைப் ஈர்த்தவர்களாக இருக்க ஒரே ஒருவரான இந்தியாவில் பிறந்து பிரிட்டின் பிரஜையாகவுள்ள விகாஸ் குமார் ரமேஸ் பற்றியும்“ உலகம் வியந்து நிற்கின்றது.







## ஜனாதிபதி அநுர குமாரவின் ஜெர்மனுக்கான உத்தியோகபூர்வ பயணம்



ஜெர்மனி கூட்டாட்சி குடியரசிற்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, கடந்த 10ம் திகதி இரவு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டார்.

ஜெர்மனியின் ஜனாதிபதி பிராங்க்-வால்டர் ஸ்டெய்ன்மியரின் (Frank – Walter Steinmeier) அழைப்பின் பேரில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, 2025 ஜூன் 11 முதல் 13 வரையில், ஜெர்மனிக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இவ்விஜயத்தின் போது ஜனாதிபதி, ஜெர்மனியின் ஜனாதிபதி, சான்சலர், கூட்டாட்சி அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் மற்றும் அரச பிரதானிகளுடன் இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளதுடன், அரசாங்க முன்னுரிமைகளின் அடிப்படையில் வர்த்தகம், இலத்திரனியல் பொருளாதாரம், முதலீடுகள் மற்றும் தொழில் பயிற்சி வாய்ப்புகள் உள்ளிட்ட இருநாட்டினதும் ஒத்துழைப்புகளை விரிவுபடுத்தும் புதிய வழிகள் குறித்தும் கலந்துரையாடவுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் நடைபெறும் ஜெர்மன் வர்த்தக மற்றும் தொழிற்துறை சபை ஏற்பாடு செய்யும் வணிக மன்றத்தில் இலங்கையின் பொருளாதார மாற்றம், முதலீட்டு வாய்ப்புகள், நாட்டின் வளர்ச்சித் திறன் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையில் புதிய வர்த்தக உறவுகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் குறித்தும் வலியுறுத்தவுள்ளார்.

மேலும், இவ்விஜயத்தின் போது ஜனாதிபதி, ஜெர்மனியின் சுற்றுலா மற்றும் சுற்றுலாத் தொழில் சங்கங்கள் (Tourism and Travel Industry Associations) பிரதிநிதிகளையும் மற்றும் ஜெர்மனியில் வசிக்கும் இலங்கையர்களையும் சந்திக்கவுள்ளார்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இவ்விஜயத்தில் ஜனாதிபதியுடன் பயணத்தில் இணைந்து கொண்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# 90 நாட்கள் காவலில் வைக்கப்பட்ட முஸ்லிம் இளைஞர் எவ்வித குற்றச்சாட்டுக்களும் இன்றி விடுதலையான பின்னரும், அவரைப் பின்தொடரும் பொலிசார்?



பலஸ்தீன மனிதப் படுகொலைக்கு எதிராக ஸ்டிக்கர் ஒன்றை ஒட்டி இஸ்ரேல் எதிர்ப்பைக் காட்டியமைக்காக அடிப்படைவாதக் குற்றம் சுமத்தப்பட்டு 90 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட முஸ்லிம் இளைஞரை நீதிமன்றம் எந்தவித குற்றச்சாட்டுக்களும் இன்றி விடுதலை செய்த பின்னரும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பொலிஸார் தொடர்ச்சியான தேடுதல்களை முன்னெடுத்துள்ளனர்.

இருபது வயதுடைய மொஹமட் லியாவுதீன் மொஹமட் ருஷ்டி கைது செய்யப்பட்டதை சவாலுக்கு உட்படுத்தி முன்வைக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பில் பதிலளிக்கும் போது பொலிஸ் உயர் அதிகாரிகளினால் இந்த விடயம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த இளைஞரை கைது செய்வதற்காக அதிகாரிகளால் ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்ட காரணம் நீதியானது அல்ல என்ற சூழல் உருவாகி வந்த சூழ்நிலையில், புதிதாக பயங்கரவாத குற்றங்களை சுமத்துவதற்கு பொலிஸ் தரப்பு முயற்சி செய்திருக்கின்ற விடயம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

அது நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்கு பொலிஸ் தரப்பினால் விடுக்கப்பட்ட சவால் விடுக்கும் ஒரு நடவடிக்கை என சட்ட நிபுணர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

## நீதிமன்றத்தை விட அதிகாரம் கொண்ட பயங்கரவாத தடுப்புப் பிரிவு

"பயங்கரவாத தடைச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டே நாம் இயங்குகிறோம். நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டாலும் எதிர்காலத்தில் ஏதாவது நடைபெறலாம் என்ற சந்தேகத்தில் சந்தேகநபரை விசாரணைக்கு உட்படுத்த எமக்கு முடியும்" என ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகளின் முன்னால் கருத்துத் தெரிவித்த பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் (CTID) பொலிஸ் அத்தியட்சகர் லசந்த ரத்நாயக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கூறியிருந்தார்.

பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினால் ருஷ்டி கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் கொண்டு வரப்பட்டமைக்கு எதிராக அவரின் பெற்றோர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாடு கடந்த ஏப்ரல் 25 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்த போதும் பயங்கரவாத தடைப் பிரிவின் அதிகாரிகளின் வேலைப்பளுவைக் காரணம் காட்டி அது ஒரு மாதத்திற்கு பிற்போடப்பட்டது.

கடந்த 21ஆம் திகதி மீள அழைக்கப்பட்டிருந்த போது அந்த விசாரணைக்கு ஆணைக்குழுவின் சார்பாக ஆணையாளர் கலாநிதி கெஹான் குணதிலக தலைமையிலான விசாரணைக் குழுவின் முன் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் லசந்த ரத்நாயக்க உள்ளிட்ட அதிகாரிகள் ருஷ்டி குற்றவாளி அல்லது சந்தேகநபர் என்பதற்கு தம்மிடம் எந்த சாட்சியும் இல்லாத நிலையிலும், அவரால் எதிர்காலத்தில் ஏதேனும் ஒன்று மேற்கொள்ளப்படலாம் என்ற உத்தேசத்தில் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்தனர்.

"பயங்கரவாத தடைச் சட்டத்தின் 11 (1) உப பிரிவின் அடிப்படையில்தான் ருஷ்டி விடுதலை செய்யப்பட்டார். அது நிபந்தனைக்குட்பட்ட விடுதலை. அதாவது நீதிமன்றத்தால் சந்தேகநபரை தடுப்புக் காவலில் உள்ள மூன்று மாதங்களுக்கு இடையில் விடுதலை செய்த போதிலும் எமக்கு முழுக் காலமும் அவரை விசாரணைக்குட்படுத்த முடியும்." என பயங்கரவாத தடைப் பிரிவின் அதிகாரிகள் விசாரணையின் போது கூறியதாக விசாரணையில் பங்குபற்றிய ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## சாட்சி இன்றி பின்தொடர்தல்

ருஷ்டிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நீதிமன்றத்தில் முன்வைப்பதற்குப் போதுமான எந்த சாட்சியும் இல்லை என்று விசாரணைக்கு சமூகமளித்த பொலிஸ் அதிகாரிகள் விசாரணையின் போது தெரிவித்ததாக அடையாளத்தை வெளியிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்ட அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

ருஸ்தி ஒரு அடிப்படைவாத கருத்துக்களை கொண்டவர் என்பதற்கு சாட்சிகள் இருப்பதால் மேலதிக விசாரணை நடைவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக, அவர் கைது செய்யப்பட்டதன் பின்னர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது அவ்வாறான சாட்சிகள் இல்லை எனும் போது, ருஷ்டி விடயத்தில் ஏற்பட்ட தவறை சரி செய்வது எவ்வாறு என்பது தொடர்பில் ஆணைக்குழு பயங்கரவாத விசாரணைப் பிரிவின் அதிகாரிகளிடம் கேட்ட போது "அந்த சந்தர்ப்பத்தின் அடிப்படையில் தாம் இயங்கியதாகவும், அது தொடர்பில் மேற்கொள்ள வேறு மாற்று வழிகள் இருக்கவில்லை எனவும்" அந்த அதிகாரி தெரிவித்ததாக எம்மிடம் பேசிய குறித்த அதிகாரி தெரிவித்தார்.

## "இஸ்ரேலுக்கு எதிராக ஸ்டிக்கர் ஒட்டுங்கள்" பயங்கரவாத தடை அதிகாரிகள்

பயங்கரவாதத் தடைப் பிரிவினால் மொஹமட் ருஷ்டி கைது செய்யப்பட பின்னர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்கவினல் 25.03.30 ஆம் திகதி விடுக்கப்பட்ட அறிக்கையில் "சுயமாக தூண்டப்பட்ட அடிப்படைவாத சிந்தனையைக் கொண்ட கடும்போக்குச் சிந்தனையைக் கொண்டவராக அடையாளம் காணப்பட்டிருப்பதாக" தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறே குறித்த அறிக்கையின் அடிப்படையில் அவர் கைது செய்யப்படுவதற்கான காரணமாக ஸ்டிக்கர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் ருஷ்டி கைது செய்யப்பட பின்னர், அந்தக் கைது நடவடிக்கையை நியாயப்படுத்தி நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஆளும் கட்சியின் பிரபலங்கள் மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரியவும் அரசியல் பிரசாரக் கூட்டங்களிலும் பகிரங்கமாக ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் அவர் ஸ்டிக்கர் ஒட்டியதை மையமாக வைத்தே கைது செய்யப்பட்டிருந்தார். அவ்வாறே ருஷ்டி பணியாற்றிய சுப்பர் மார்கட்டிலிருந்த இருந்து அவரைக் கைது செய்வதற்கு அவர் செய்த குற்றமாக குறிப்பிடப்படுவது அவர் ஸ்டிக்கர் ஒட்டியதாக அடையாளம் வெளிப்படுத்தப்படாத ஒருவர் கறுவாத்தோட்ட பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாடாகும்.

எனினும் கடந்த 21 ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நடந்த விசாரணையின் போது பயங்கரவாத தடுப்புப் பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் லசந்த ரத்னாயக்க ருஷ்டி ஸ்டிக்கர் ஒட்டியது தொடர்பில் பொலிசாருக்கு எந்த பிரச்சினையும் இல்லை என தெரிவித்துள்ளார்.

## ஒன்றுக்கொன்று முரண்பட்ட அறிக்கைகள்

"ஸ்டிக்கர் ஒட்டியது பிரச்சினை அல்ல. பாதையில் அல்ல. இஸ்ரேல் தூதரகத்தின் முன் ஒட்டினாலும் எமக்குப் பிரச்சினை இல்லை. நாங்கள் இவரைக் கைது செய்தது தொலைபேசித் தொடர்பாடல் செயற்பாடுகள் தொடர்பில் ஆய்வு செய்தே" என்று பொலிஸ் அத்தியட்சகர் விசாரணைக் குழுவின் முன் கூறியுள்ளார்.

எனினும், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன் நடைபெற்ற விசாரணையில் வெளியான விபரங்களின் அடிப்படையில் ருஷ்டிக்கு எதிராக 90 நாட்கள் தடுப்புக் காவல் உத்தரவு பெற்றுக் கொள்வதற்காக பாதுகாப்பு அமைச்சுக்கு பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆவணங்களில் ருஷ்டி கைது செய்யப்படுவதற்கு காரணமாக குறிப்பிடப்பட்டிருப்பது "அடிப்படைவாதக் கருத்துகள் கொண்ட ஸ்டிக்கர் ஒட்டியமை" என்றாகும். ருஷ்டி ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக பொறுப்புக் கூறவேண்டிய ஒருவராக சந்தேகித்து புதிதாக அது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும், நம்பகமான தகவல்கள் எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

மொஹமட் ருஷ்டி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு 16 நாட்கள் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் போது உயிர்த்த தாக்குதல் தொடர்பில் அவரிடம் விசாரணை செய்யப்பட்டிருப்பது 12ஆவது தினத்தில் அதாவது நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்டு விடுதலை செய்வதற்கு மூன்று நாட்களுக்கு முன்னராகும். அதுவும் சில தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பாகவாகவே.

கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களின் அடிப்படையில் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினது ருஷ்டியைக் கைது செய்து அதன் பின் தடுப்புக் காவலில் வைத்திருந்திருப்பது பரஸ்பரம் முரண்பட்ட சம்பவங்கள் சிலவற்றின் அடிப்படையிலாகும். முதலில் ஸ்டிக்கர் மற்றும் அடிப்படைவாதக் குற்றச்சாட்டு சுமத்திய போதிலும், நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படும் வரை அது தொடர்பில் ஏற்றுக் கொள்ளக் கூடிய எந்தவொரு சாட்சியும் அவருக்கு எதிராக முன்வைப்பதற்கு அதிகாரிகள் தவறி இருக்கிறார்கள். அதனால் எந்தவிதமான குற்றச்சாட்டும் இன்றி குறைந்த பட்சம் பிணை ஒன்றுக்கேனும் உட்படுத்தப்படாமல் ருஷ்டியை விடுதலை செய்ய வேண்டிய நிலை அத்தனகல்ல நீதிவானுக்கு ஏற்பட்டது.

## ஒரே சட்டம் பயங்கரவாத சட்டமா?

நீதிமன்றத்தினால் குற்றச்சாட்டுக்கள் இன்றி விடுவிக்கப்பட்ட ருஷ்டியை தொடர்ந்து பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் துரத்துவது எந்தளவு தூரம் நியாயமானது மற்றும் சட்டபூர்வமானது என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகள் அல்லது ருஷ்டி சார்பில் விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையான சட்டத்தரணிகள் கோரினார்களா? என்பது தொடர்பில் அறிந்து கொள்ள முடியவில்லை.

எவ்வாறாயினும் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் ஏற்றுக் கொள்ளத்தக்க எந்த சாட்சியும் இன்றி ருஷ்டி கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தமையினால், அவருக்கு ஏற்பட்டுள்ள உளவியல் மற்றும் சமூக அழுத்தங்கள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி கெஹான் குணதிலகவினால் வினவப்பட்டிருந்தபோதிலும் அதற்குப் பதிலாக பொலிஸ் அத்தியட்சகர் லசந்த ரத்னாயக தலைமையினால அதிகாரிகள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் செயற்படும் போது "செய்வதற்கு வேறு எதுவும் இல்லை" என்று பதில் வழங்கியிருந்தார்.

அவ்வாறே கைது செய்யப்படும் அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்படும் நபர் நிரபராதியா, அப்பாவியா என்பதை தேடித் பார்க்க தங்களால் முடியாது எனவும், அவ்வாறு செய்தால் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் போன்று தன் மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## இது நீதிமன்றத்தின் மீது விடுக்கப்பட்ட சவால்

பயங்கரவாத தடுப்பு பிரிவின் அதிகாரிகளின் அறிக்கைகள் மூலம் தெளிவாவது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் சந்தேகநபர் ஒருவர் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டாலும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழே மேலும் விசாரணை செய்யலாம் என்பதாயின், அதன் மூலம் நீதிமன்றத்தின் தீர்ப்பின் மீது தாக்கம் ஏற்படல் மற்றும் குறித்த நபருக்கு ஏற்படும் பாதிப்பு குறித்தும் மனித உரிமைகள் தொடர்பான இலங்கையின் பிரபலமான சட்டத்தரணிகளிடம் கேட்ட போது தெளிவாக அது நீதிமன்ற தீர்ப்பிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சவாலாகும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

"இது மிக மோசமான அநீதியான நிலையாகும். சட்டம் ஒன்றில் என்ன இருந்தாலும், கடைசியாக தீர்ப்பை வழங்குவது நீதிமன்றம் என்றால் அதற்கு வெளியில் செயற்பட யாராலும் முடியாது. குறிப்பாக பொலிசாருக்கு முடியாது. இப்படி செய்வது எவ்வாறு? நீதிமன்றம் சாட்சி இல்லை என விடுதலை செய்கிறது. ஆனால், அதன் பின்னர் நீதிமன்றத்திற்கும் களவாக அந்த நபரின் குற்றங்களை தேட பொலிஸ் இரகசியமாக விசாரணைகளை நடத்துகிறது. அது சரியாக நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக பழிவாங்கும் நோக்கில் இரகசிய சதி செய்வது போன்ற ஒரு செயலாகும். அதே போன்று ஒரே குற்றச்சாட்டுக்கு இரண்டு முறை வழக்கு விசாரணை நடத்த முடியாதே. நீதிமன்றத்தால் ஒருவர் விடுவிக்கப்பட்டால் அவர் விடுவிக்கப்பட்டவர்தான். அவ்வளவுதான்" என சட்டத்தரணி ஒருவர் குறிப்பிடுகிறார்.

கனடிய செய்திகள் Canadian News

# கனடாவைப் பொறுத்தளவில் எமது புதிய ஆட்சிக் காலம் என்பது தேசத்தின் புதிய நூற்றாண்டாக எதிர்காலத்தில் பார்க்கப்பெறும்

## கனடாவின் ஒட்டாவா மாநகரில் அமைந்துள்ள "போர்க் கால நூதன சாலை" வளாகத்தில் தனது முக்கியமான ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய பிரதமர் மார்க் கார்னி உற்சாகத்துடன் அறிவிப்பு






"கனடாவைப் பொறுத்தளவில் எமது புதிய ஆட்சிக் காலம் என்பது தேசத்தின் புதிய நூற்றாண்டாக எதிர்காலத்தில் பார்க்கப்பெறும். எமது புதிய ஆட்சியில் கனடாவின் இராணுவக் கட்டமைப்பில் புதிய மாற்றங்களை எமது மக்கள் எதிர்காலத்தில் கண்டு வியப்படையப் போகின்றார்கள். ஏன் உலகமே வியக்கப்போகின்றது. எம்மோடு கைகோர்த்து பயணிக்கப் போகின்ற பல ஐரோப்பிய நாடுகளின் பங்களிப்புடன் எமது கனடிய தேசம் பலமான இராணுவக் கட்டமைப்பையும் இராணுவத் தளபாடங்களின் உற்பத்தி நாடாகவும் உயரப் போகின்றது. அத்துடன் அடுத்த வாரத்தில் கனடாவின் அல்பேர்ட்டா மாகாணத்தில் நடைபெறவுள்ள ஜி-7 நாடுகளின் மாநாட்டின் பின்னர் எமது நாட்டின் வளர்ச்சியையும அந்தஸ்த்தையும் உலக நாடுகள் பார்த்து வியக்கப்போகின்றன".

இவ்வாறு கனடாவின் ஒட்டாவா மாநகரில் அமைந்துள்ள "போர்க் கால நூதன சாலை" வளாகத்தில் தனது முக்கியமான ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய பிரதமர் மார்க் கார்னி உற்சாகத்துடன் அறிவித்தார்.



09-06-2025 அன்று திங்கட்கிழமை மாலை நடைபெற்ற ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் கலந்து கொண்ட மேற்படி கூட்டத்தில் பிரதமர் மார்க் கார்னி அவர்கள் உற்சாகமாகவும் உறுதி நிறைந்த மனதுடனும் உரையாற்றினார்.

அங்கு தமிழ் பேசும் அமைச்சர் ஆனந்தசங்கரி உட்பட பல அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு காணப்படும் படங்களில் வர்த்தகப் பிரமுகர் சங்கர் நல்லதம்பி மற்றும் உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் ஆகியோரும் பிரதமர் மற்றும் முக்கிய அரசியல் தலைவர்களோடு காணப்படுகின்றார்கள்.



## Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24






## Drieberg College Chavakachcheri Alumni Association – Canada

வாழ்வின் ஒளி

1875 - 2025 Celebrating 150 Years of Excellence in Education

We are delighted to announce that Drieberg College will be celebrating its 150th anniversary, a significant milestone in our institution's history. We cordially invite you to join us, to commemorate this momentous occasion.

Venue: JC's Banquet Hall, 1686 Ellesmere Rd, Toronto, ON M1H 2V5
Date: Saturday, June 14, 2025 Time: 6:00 PM

**Ticket: $50.00 per person**

**Note:** Parking underground Level P1 and Reception in Level 'G"

**Contacts:**
Mohan Devabalan - 416-274-2169
Mathialagan Rajagopal - 416-277-1067
Vasuki Devadas - 416-266-1234
Regi Thevaranjan - 647-740-2965
Gunam Hunt - 905-472-0379



## NISSAN | VILLAGE NISSAN

**தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்**

*DAA ROTATION



**25 SENTRA**
*S CVT* ULTRA-LOW
**$69** WEEKLY | **39** MOS. LEASE $2,695 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 KICKS PLAY**
*S* ULTRA-LOW
**$69** WEEKLY | **39** MOS. LEASE $2,192 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 ROGUE**
*S AWD*
**0.99%** | **30** MOS. LEASE
+$1,000 60th Anniversary Cash



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT
905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

NISSAN | VILLAGE NISSAN
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com



உ



கனடா மிஸிஸாகா பிரம்ரன்

# அருள்மிகு கற்பக விநாயகர் தேவஸ்தானம் பிறம்ரன் வருடாந்த கொடியேற்ற-மஹோற்சவப் பெருவிழா விஞ்ஞாபனம்-2025

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலதரஞ்செய்யும் நீள் விசும்பருளும் அருளொடு பெரு நிலமளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்.

சீர்மேவு மதி நதியுமரவும் சிறப்பும் சூழ்ந்த
பார்போற்றும் சிவனுமையின் மைந்தராகி
கார்மேவும் கனடாவின் களிறு நாயகனாகி
நேர்மேவு கற்பகத்து கணபதியே காப்பு.

அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்றசோதி பிளம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய

## ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் அடியார்களே!

சகல செல்வங்களும் நிறைந்து விளங்கும் கனடா மிஸிஸாகா பகுதியில் பிரம்ரன் மாநகரில் எழுந்தருளியிருந்து தம்மை பக்தியுடன் வந்து வழிபடும் மெய்யடியார்களின் இன்னல்களைப் போக்கி நல்லருள் பாலித்து ரட்சிப்பவராகிய ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் பெருங்கருணையினால் அழகிய திருமணமண்டபம் மணிமண்டபம் கொடிஸ்தம்பத்துடன் கூடிய புதிய திருக்கோவில் நிர்மாணிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்தேறிய பின்னர் பதினேழாவது முறையாக நிகழும் மங்களகரமான விசுவாவசு வருஷம் வைகாசி மாதம் மூன்றாம் நாள் (ஆங்கிலம்16-05-2025) வெள்ளிக்கிழமை பகல் 11:30 மணிக்கு கொடியேற்று விழாவுடன் மஹோற்சவம் ஆரம்பமாகி வைகாசி மாதம் 26ம் நாள் ஆங்கிலம் 08-06-2025 ஞாயிற்றுக்கிழமை வைகாசி விசாகத் தினத்தில் தேர்த்திருவிழாவும் 09-06-2025 திங்கள்கிழமை தீர்த்தோற்சவம் கொடியிறக்கல் திருவிழா வரையில் வழமைபோல இருபத்தைந்து தினங்களுக்கு பகலும் இரவும் கொடிஸ்தம்ப பூஜை மஹாயாக பூஜை ஆகியவற்றுடன் வருடாந்தப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற ஸ்ரீ கற்பகவிநாயகர் நல்லருள் பாலித்துள்ளார். விரதகாரர்கள் உபயகாரர்கள் அனைவரும் கீழ்காணும் காலநேர அட்டவணைப்பிரகாரம் நிகழவிருக்கும் திருவிழாக்களை ஆசார நியமங்களுடன் தினமும் வந்து தரிசித்து கண்கண்ட தெய்வமாம் கற்பகவிநாயகரின் அருளால் வேண்டியவரங்களைக் குறையாது பெற்றுச் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம். சுபம்

மஹோற்சவ சிவாச்சாரியார்:
சிவாகம பாலசூரியர், சிவாகமவித்வான்
சிவஸ்ரீ கோகுலநாத குருக்கள்
ஸ்ரீநாகபூசணி அம்மன் திருக்கோவில் U.K. லண்டன் ஸ்தாபகர்
மற்றும் பிரதம குருக்கள்

ஆலய குருமார்:
சிவஸ்ரீ விஸ்வநாத கைலசநாத குருக்கள் (பாண்டிச்சேரி, இந்தியா)
சிவஸ்ரீ சண்முக ஜனார்த்தன குருக்கள் (பாண்டிச்சேரி, இந்தியா)

கனடாவாழ் குருமார்கள் அனைவரையும் மஹோற்சவ விழாக்காலங்களில் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கிறோம்.
முக்கிய குறிப்பு:
தேர்த்திருவிழாவன்று காவடி கற்பூரச்சட்டி, எடுக்க விரும்புவோர் தயவுசெய்து உங்கள் பெயர்களை முன்னரே பதிவு செய்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

15-05-2025 வியாழன் மாலை 5மணிக்கு கணபதி ஹோமம் தொடர்ந்து அனுக்ஞை கிராமசாந்தி வாஸ்துசாந்தி மிருத்சங்கிரஹணம் நடைபெறும்.

**கொடியேற்றத் திருவிழா காலை 11:30மணி தேர்த்திருவிழா காலை 11:30மணி தீர்த்தத் திருவிழா காலை 11:30 மணி**

**விழாக் கால நிகழ்வுகளின் நேர கால விபரங்கள்**

| | | | காலை உபயம் | மாலை உபயம் | திருவிழா அலங்காரங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | 16-05-2025 | வெள்ளி | கொடியேற்ற விழா<br>திரு. கு.முத்துக்கிருஸ்ணன் குடும்பம் - சுழிபுரம் | திரு. பிரதீபன் சிவராஜா குடும்பம் | ஓங்கார வடிவம் |
| 02 | 17-05-2025 | சனி | திரு. சுகுனேந்திரன் வாசுகி குடும்பம்-புங்குடுதீவு<br>சிவநேசராசா காளிராசா குடும்பம்-மீசாலை | தம்பிஜயா-மனோன்மணி குடும்பம்<br>சிவனேசன் சுசீலா குடும்பம்<br>சந்திரகுமார் உதயலட்சுமி குடும்பம் | சூரியப்பிரபை |
| 03 | 18-05-2025 | ஞாயிறு | திரு. பாலகாந்தன் கனகசபை குடும்பம்<br>கரவெட்டி | திரு.அருட்பிரகாசம் ரெங்கநாதன் குடும்பம்<br>சுழிபுரம் | சந்திரப்பிரபை |
| 04 | 19-05-2025 | திங்கள் | திரு. தியாகராஜா அன்பழகன் குடும்பம்<br>கிளிநொச்சி | திரு. சிவஞானம், திரு. பரமேஸ்வரன், திரு.பூலோகசிங்கம்<br>திரு. செல்வரத்தினம் குடும்பம் -நயினாதீவு மக்கள் | நட்சத்திர வடிவம் |
| 05 | 20-05-2025 | செவ்வாய் | திரு. பாலச்சந்திரன் ரதிமாலா குடும்பம்<br>பிருந்தாவன உணவகம் | திரு. கதிர்காமநாதன் குடும்பம்<br>திரு. நாதன் குடும்பம் - சுழிபுரம் | திருத்தொங்கல் வடிவம் |
| 06 | 21-05-2025 | புதன் | சிவகுமார் தியாவி<br>திருச்சி | ஜெயராம் அபிராமி குடும்பம்<br>மட்டுவில் | கப்பல் திருவிழா |
| 07 | 22-05-2025 | வியாழன் | திரு. கஜதீபன் சுஜா குடும்பம்<br>தையிட்டி, காங்கேசன்துறை | பசுபதிப்பிள்ளை குமரசற்குணன்<br>குறிகட்டுவான் | சிவலிங்க வழிபாடு |
| 08 | 23-05-2025 | வெள்ளி | திரு. நடராசா பிரதீபன் நிஷா குடும்பம்<br>தச்சன்தோப்பு | திரு. இரத்தினவடிவேல் குடும்பம்<br>சுழிபுரம்- தும்பளை | நாக வாகனம் |
| 09 | 24-05-2025 | சனி | திரு. பொன்னையா கனகலிங்கம் குடும்பம்<br>அல்வாய் | திரு. தியாகராஜா பரமநாதன் குடும்பம்<br>தாவடி | மூஷிக வாகனம் |
| 10 | 25-05-2025 | ஞாயிறு | திரு. தவராசா சிவசோதி குடும்பம்<br>அனலைதீவு | திரு. சந்திரபோஸ் பிருந்தா குடும்பம்<br>Plastform Countertops Ltd. | மஞ்சம் |
| 11 | 26-05-2025 | திங்கள் | திரு. சின்னத்தம்பி குலேந்திரன் குடும்பம்<br>கோப்பாய் | ஓர் அன்பர் | மயில் வாகனம் |
| 12 | 27-05-2025 | செவ்வாய் | திரு சிவகுரு பத்மநாதன் குடும்பம்<br>நுணாவில், சாவகச்சேரி | திரு. சிவலிங்கம் திருக்குமரன்,<br>தனுஷன், அனோயன், நிக்ஷன்<br>குடும்பம் - இணுவில் | கற்பகதரு வடிவம் |
| 13 | 28-05-2025 | புதன் | திரு. பரஞ்சோதி-ரஜனி குடும்பம்<br>(கனடா) | ஓர் அன்பர் | குதிரை வாகனம் |
| 14 | 29-05-2025 | வியாழன் | ஓர் அன்பர் | செந்தூரன் லாவன்யா குடும்பம்<br>மட்டக்களப்பு | மஞ்சள் அலங்காரம் |
| 15 | 30-05-2025 | வெள்ளி | Steve பாலசிங்கம் குடும்பம், மட்டுவில்<br>ONGO I LOGISTIC | திரு. நிரஞ்சன் நிரு குடும்பம்<br>பிரம்ரன் | கஜ அலங்காரம் |
| 16 | 31-05-2025 | சனி | ஓர் அன்பர் | திரு. இ. வேணுகோபாலன் குடும்பம்<br>புன்னாலைக்கட்டுவன் | கருட வாகனம் |
| 17 | 01-06-2025 | ஞாயிறு | திரு. குமாரசாமி பிரபாகரன் நளினி குடும்பம்<br>சங்கரத்தை, வட்டுக்கோட்டை | திரு. ரத்னபாலன் சோபா ராஜ் குடும்பம்<br>-மானிப்பாய் | பக்தி முக்தி பாபநாசம் |
| 18 | 02-06-2025 | திங்கள் | ஓர் அன்பர் (பிரம்ரன்) | திரு. ஜெய்கீதா குடும்பம்<br>கேரளா, இந்தியா | நர்த்தன வடிவம் |
| 19 | 03-06-2025 | செவ்வாய் | திரு. சந்திரமோகன்<br>சுகிர்தா குடும்பம்-துன்னாலை | திரு. நிரஞ்சன் அருணாசலம் குடும்பம்<br>Top Quality Plastic Ltd. | கைலாச வாகனம் |
| 20 | 04-06-2025 | புதன் | ஓர் அன்பர் | திரு. யோகி முருகேசு மஞ்சு குடும்பம்<br>அனலைதீவு | காமதேனு வாகனம் |
| 21 | 05-06-2025 | வியாழன் | ஓர் அன்பர் | திரு. பொன்னம்பலம் சர்வேஸவரன்<br>குடும்பம், சுழிபுரம் | மாம்பழத் திருவிழா |
| 22 | 06-06-2025 | வெள்ளி | காரைநகர் மக்கள் - வேட்டைத் திருவிழா | ஓர் அன்பர் | வேட்டைத் திருவிழா |
| 23 | 07-06-2025 | சனி | ஓர் அன்பர் | திரு சாம் குடும்பம்<br>சிங்கப்பூர் | சப்பறத் திருவிழா |
| 24 | 08-06-2025 | ஞாயிறு | தேர்த் திருவிழா DYNEVOR EXPRESS<br>அழகரெட்ணம் குமார் குடும்பம் கனடா | திரு முத்துக்குமார்<br>தயாவதி குடும்பம் | வைகாசி விசாக முருகன் விழா<br>தேரடி உற்சவம் |
| 25 | 09-06-2025 | திங்கள் | தீர்த்தத் திருவிழா -<br>திரு லெட்சுமன் குடும்பம் (சென்னை) | திரு. கிருபானந்தராஜா றமணி குடும்பம்<br>தொல்புரம் | கொடியிறக்கல் விழா<br>சண்டேஸ்வரர் விழா<br>ஆச்சார்ய உற்சவம் |
| 26 | 10-06-2025 | செவ்வாய் | கற்பக விநாயகர் ஆலய அந்தணர்கள் | | பிராயச்சித்தம் |
| 27 | 13-06-2025 | வெள்ளி | | லக்ஷி சுப்பர் மார்க்கட் | வைரவர் மடை |
| 28 | 14-06-2025 | சனி | திரு. திருவருள் கனகசபை குடும்பம் - | அனலைதீவு | பூங்காவனம் |

**முக்கிய குறிப்பு: ஆடிவேல் திருவிழா இருபத்தி நான்காவது தடவையாக ஆகஸ்ட் மாதம் 14, 15, 16ம் திகதிகளில் வெகு சிறப்பாக நடைபெற்று 17ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடிவேல் இசைமாலையும் சிறப்பாக நடைபெறும்.**

### திருவிழாக்கால நிகழச்சிகள் நேரகால அட்டவணை


**காலை திருவிழா**

6:30 மணி காலை பூஜை
7:30 மணி காலை சந்தி பூஜை
09:00 மணி ஸ்நபனகும்ப அபிஷேகம்
10:30 மணி உச்சிகால பூஜை- யாகபூஜை கொடிஸ்தம்ப பூஜை
11:30 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம்
01:00 விபூதி, பிரசாதம் வழங்கப்படும்

**மாலை திருவிழா**

05:00 மணி ஸ்நபன கும்ப அபிஷேகம்
06:30 மணி மூலஸ்தான பூஜை பஞ்சமுகார்சனை யாக பூஜை கொடிஸ்தம்ப பூஜை
07:30 சமய கலை நிகழ்ச்சிகள்
07:45 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம் பிரசாதம் வழங்கல்.
10:00 மணி அர்த்தஜாமப் பூஜை

தேவஸ்தான மங்கள இசை: கற்பக விநாயகர் தேவஸ்தான இசைக் கலைஞர்கள்
ஜெகநாதன் கோபாலகிருஷ்ணன் - முனிராஜ் முனிரெத்தினம்
அர்ஜுணன் கிருஷ்ணகுமார் - பழனிவேல் கோபாலகிருஷ்ணன்
விசேடமங்கள இசை: கனடா, இலங்கை, இந்தியா கலைஞர்கள்
புஷ்பமாலைகள், புஷ்ப அலங்காரங்கள்: M, குமார் Mark Florist
(விசேஷ திருவிழாத் தினங்களில் நிகழ்ச்சிகளின் காலநேர மாற்றம் அறிவிக்கப்படும்)




ARULMIGU KATPAGAVINAYAGAR HINDU TEMPLE BRAMPTON
200 Advance Blvd, Unit 1, Brampton, (Dixie & Advance Blvd) L6T 4V4
Tel: 905-458-9701 / 905-458-0623 / 416-471-0255 Fax: 905-458-0326
www.srikatpagavinayagar.ca

இங்ஙனம்
என்றும் இறைபணியில் நிற்கும்
கணகுக சிவத்தொண்டர்,
திரு. இரா. விஜயநாதன்
(தேவஸ்தான தர்மகர்த்தா)

VIVEKA

இலங்கை செய்திகள் Sri Lanka News

ந.லோகதயாளன்

# ஜனாதிபதியின் பொது மன்னிப்பு என்ற போர்வையில்சிறைக் கைதிகள் 70 பேர் சட்டவிரோதமாக விடுதலை

## கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் மேலதிக சொலிசிட்டர் தெரிவிப்பு



ஜனாதிபதியின் பொது மன்னிப்பு என்ற போர்வையில் 70 கைதிகள் சட்டவிரோதமாக விடுதலை செய்யப் பட்டுள்ளனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் தெரிவித்தார்.

கைதிகள் சட்டவிரோதமாக விடுதலை செய்யப்பட்டமை தொடர்பில் பணி இடை நீக்கம் செய்யப்பட்டு கைது செய்யப்பட்ட சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய 10ம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பட்டார். ஜனாதிபதியின் பொது மன்னிப்பு பெற்றமையைக் குறிக்கும் போலி ஆவ ணங்களைச் சமர்ப்பித்தார் என்று உபுல் தெனிய மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதன்போது, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் சமர்ப்பணங்களை முன்வைத்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “2024ஆம் ஆண்டு நத்தார் பண்டிகையின்போது 57 கைதிகளும், கடந்த பெப்ரவரி 4 சுதந்திர தினத்தன்று 11 கைதிகளும் தேவையான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத போதிலும் சட்டவிரோதமாக விடுதலை செய்யப்பட்டனர். மேலும், கடந்த வெசாக் பண்டிகையின் போது 29 சிறைகளில் இருந்து 388 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இவர்களில் குறைந்தது இருவர் சட்டவிரோ தமாக விடுதலை செய்யப்பட்டனர். சிறைச்சாலைகள், சட்ட அமுலாக்க அமைப்புகளின் பெரும் தோல்வியை இந்தக் கண்டுபிடிப்புகள் பிரதிபலிக் கின்றன. சட்டவிரோத நடைமுறைகள், அதிகார துஷ்பிரயோகம் வேரூன்றத் தொடங்கியுள்ளன.இவ்வாறான சட்டவிரோத வலைய மைப்புகளை அகற்றுவதில் சட்டமா அதிபர் திணைக்களம் விசாரணை அதிகாரிகளை ஆதரிக்க வேண்டும். நாடு முழுவதும் உள்ள மூத்த சிறை அதிகாரிகள், நிர்வாகிகளின் சொத்துகள், நிதி அறிவிப்புகள் குறித்து தனித்தனியான விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும்.” - என்றார்.

இதனையடுத்துப் பணி இடை நீக்கம் செய்யப்பட்ட சிறைச்சாலைகள் ஆணை யாளர் துஷார உபுல்தெனியவை இன்று புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கைதிகளுக்கான ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் போது அனுமதியற்ற முறையில் சிலரை விடுதலை செய்த குற்றச்சாட்டின் பேரிலேயே உபுல்தெனிய கைது செய்யப்பட்டார். ஜனாதிபதியின் பொது மன்னிப்புக்கு மாறாக நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத கைதி ஒருவர் கடந்த வெசாக் பண்டிகையின்போது விடுதலை செய் யப்பட்டார். இந்த விடயம் பேசுபொருளானதையடுத்து, கடந்த 6ஆம் திகதி ஜனாதிபதியின் மூத்த மேலதிக செய லாளர் எழுத்துபூர்வமாக அளித்த முறைப் பாட்டைத் தொடர்ந்து சி.ஐ.டி. விசார ணையைத் தொடங்கியது. மறுநாள் அநுராதபுரம் சிறைச்சாலை யில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அத்துல திலகரட்ண என்ற கைதி சட்டவிரோதமாக விடுதலை செய்யப்பட்டமை கண்டறியப் பட்டது. இந்தச் சிறைச்சாலையிலேயே மற்றொரு கைதியும் இவ்வாறு முறையற்ற விதத்தில் விடுதலை செய்யப்பட்டமை கண்டறியப்பட்டது. இதைத்தொடர்ந்து, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் து'ஷார உபுல் தெனிய பணி இடை நீக்கம் செய்யப்பட்டு கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரி நகர சபை எல்லைப் பரப்பில் வசிக்காத உறுப்பினர்கள் மீது வழக்குத் தாக்கல்

சாவகச்சேரி நகர சபை மற்றும் பிரதேச சபைகளில் போட்டியிட்டு உறுப்பினர்களாக தேர்வான இருவருக்கு எதிராக தடை விதிக்கக் கோரி உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் திகதி இடம்பெற்ற உள்ளூராட்சி சபைகளிற்கான தேர்தலின்போது சாவகச்சேரி நகர சபை மற்றும் பிரதேச சபைகளில் போட்டியிட்டு உறுப்பினர்களாக தேர்வான இருவர் அந்த சபை எல்லைப் பரப்பிற்குள் தம்மை ஓர் வாக்காளராக பதிவு செய்வதற்கு தகுதி அற்றவர்கள் என்ற அடிப்படையில் இருவரின் உறுப்புறுமைகளை இரத்து செய்ய தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு உத்தரவிடக்கோரி இரு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட இந்த இரு வழக்கும் 11ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

சாவகச்சேரி நகர சபை மற்றும் பிரதேச சபைகளில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பில் தேர்வான இரு உறுப்பினர்கள் சார்பிலும் சிரேஸ்ட சட்டத்தரணி குமரவடிவேல் குருபரன் ஆஜராவதோடு வழக்குத் தொடுநர் சார்பில் சிரேஸ்ட சட்டத்தரணி சுரேன் பெணான்டோ ஆஜயராகின்றார்.




இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இந்திய மீனவர்களை சுட்டு பிடியுங்கள் – இலங்கை மீனவர்கள் கடற்படையிடம் ஆவேசமாக வேண்டுகோள்!

பு. கஜிந்தன்



எல்லை தாண்டி வரும் இந்திய மீனவர்களை சுட்டுப் பிடிக்குமாறு யாழ்ப்பாணம் மீனவ சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியதாஸ் தெரிவித்துள்ளார்.

6ம் திகதி வெள்ளிக்கிழமை அன்றையதினம் யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு ஆவேசமாக கடற்படையினரிடம் கோரிக்கை முன்வைத்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 60 நாட்களும் எந்தவித பிரச்சினைகளும் இன்றி எமது வாழ்வாதாரமான கடற்றொழிலை நாங்கள் சிறப்பாக செய்து வந்தோம். வருமானமும் திருப்திகரமாக இருந்தது.

இந்திய மீனவர்கள் மீண்டும் 16ஆம் திகதி எமது கடற்பரப்புக்குள் வரப்போகின்றார்கள். அவர்களது அட்டூழியங்களால் இதுவரை காலமும் எமது யாழ்ப்பாண மீனவர்கள் பல்வேறு விதமான போராட்டங்களை முன்னெடுத்தும் எமது அரசாங்கத்தாலோ அல்லது இந்திய அரசாங்கத்தாலோ எந்தவிதமான தீர்வுகளும் வழங்கப்படவில்லை.

கடற்படையானது தோளோடு தோள் நின்று எமக்கு பக்கபலமாக செயல்பட வேண்டும். இந்திய இழுவைமடிப் படகுகளை வராமல் தடுக்க வேண்டும். இரண்டு நாட்டு அரசாங்கமும் இனிமேலாவது கதைத்து எமக்கு ஒரு நல்ல முடிவை கூற வேண்டும்.

அத்துடன் நமது கடற்படைக்கு ஒரு முக்கிய வேண்டுகோளை விடுகின்றோம். அதாவது இந்திய மீனவர்களை கட்டுப்படுத்த முடியாவிட்டால் சுட்டாவது அவர்களை பிடியுங்கள். இவ்வாறு பிடித்து அவர்களை சிறையில் அடைத்து விட்டு படக்குகளை கைப்பற்றுங்கள். எமது மீனவர்களையும் குடும்பங்களையும் காப்பாற்றுவதற்கு இதனைத் தவிர வேறு வழி இல்லை என்றார்.



# செம்பியன்பற்று கடற்கரையில் மீனவர்களிடையே முறுகல் நிலை!

யாழ்ப்பாணத்தின் வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று பகுதியில் மீனவர்களிடையே 6ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் முறுகல் நிலை ஏற்பட்டது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்று சென் பிலிப்நேரியார் கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் பொதுச்சபை செம்பியன் பற்று பகுதியில் உழவு இயந்திரத்தை பயன்படுத்தி கரைவலை தொழில் செய்வது முற்றாக தடை செய்வதாக ஒரு தீர்மானத்தை இந்த ஆண்டு நிறைவேற்றியது.

இந்த தீர்மானத்திற்கு பின்பு குறித்த பிரதேசத்தில் உழவுஇயந்தத்தை பாவித்து கரவலை தொழில் செய்து வந்தவர்களை அதிகாரிகளின் உதவியுடன் சென் பிலிப்நேரியார் கடற்தொழிலாளர் சங்க நிர்வாகம் அகற்றிவந்தனர்.

இந்நிலையில் சில நாட்களாக செம்பியன் பற்று கடற் பிரதேசத்தில் சிலர் உழவு இயந்திரம் கொண்டு மீண்டும் கரைவலை தொழிலை மேற்கொண்டு வருவதாக குற்றச்சாட்டு எழுப்பப்பட்டது.

இதன் அடிப்படையில் கடற்தொழிலாளர் சங்க நிர்வாகத்தினர் மற்றும் பொதுமக்கள் போலீசார், நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளுடன் குறித்த கரவலைவாடிகளுக்கு இன்று விஜயம் செய்தனர்.

இதன் போது ஆவணங்களை பரிசோதித்த கடற்தொழில் பரிசோதகர் முறையான அனுமதி பெறவில்லையென்பதனை சுட்டிக் காட்டியதுடன் கடற்தொழில் சங்கத்தின் தீர்மானத்திற்கு அமைய உடனடியாக குறித்த இடத்திலிருந்து வெளியேறுமாறு பணித்ததுடன் உழவு இயந்திரம் பாவித்து கரைவலை தொழில் செய்ய முடியாதென தெரிவித்தார்.

மேற்கொண்டு இந்த பிரதேசத்தில் உழவு இயந்திரம் பாவித்து சட்டவிரோதமாக தொழில் புரிந்தால் நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் குறித்த பரிசோதகர் எச்சரித்தார்.

உழவு இயந்திரம் பாவித்து கரைவலை தொழில் செய்வதால் சிறு தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதாகவும் கடற் தாவரங்கள் அழிந்து வருவதாக அப்பகுதி மீனவர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கரைவலை தொழிலாளர் ஒருவர், கடந்த ஐந்து வருடங்களாக செம்பியன் பற்று பகுதியில் இதே கடல் தொழிலாளர் சங்க நிர்வாகம் எங்களை உழவியந்திரம் பாவித்து தொழில் செய்ய அனுமதித்தார்கள்.

ஆனால் திடீரென்று இந்த வருடம் உழவுஇயந்திரத்தை பாவித்து தொழில் செய்ய வேண்டாம் இதனால் பாதிப்பு என்று கூறுகிறார்கள்.

அவ்வாறு என்று சொன்னால் கடந்த ஐந்து வருடங்களாக ஏன் எங்களை அனுமதித்தார்கள்.

கடந்த வருடங்கள் எங்களிடம் கையூட்டல்களை வாங்கி சென்றவர்கள் இந்த வருடம் நாங்கள் அதை கொடுக்கவில்லை என்பதனால் போலியான விம்பத்தை உருவாக்கி குழப்பத்தை ஏற்படுத்துகிறார்கள்.

கடற்தொழிலுடன் சம்பந்தமில்லாத நபர்களை கூட்டிக்கொண்டு வந்து ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். எமது கரைவலை தொழிலை நம்பி பல குடும்பங்கள் இருக்கின்றன மனித வலுவை பயன்படுத்தி கரைவலை தொழில் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கின்றது.

ஆகவே தான் உழவுஇயந்திரத்தை பாவித்து கரைவலை தொழில் செய்து வருகிறோம். உழவுஇயந்திரம் பாவித்து கரைவலை தொழில் செய்வது வடமராட்சி கிழக்கில் செம்பியன் பற்று பகுதியில் மட்டுமல்ல வடமராட்சி கிழக்கின் அதிகளவான பகுதிகளில் உழவு இயந்திரம் பாவித்து தான் தொழில் செய்து வருகிறார்கள்.

இலங்கையில் சட்டம் எல்லோருக்கும் பொதுவாக இருக்க வேண்டும் ஒரு கிராமத்திற்கு ஒரு சட்டம் என்றால் அதை எவ்வாறு நாம் ஏற்றுக் கொள்வது?

நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் கூறியது போன்று நாங்கள் உரிய முறையில் அனுமதி எடுத்து உழவுஇயந்திரம் பாவித்து மீண்டும் கரைவலை தொழில் செய்வோம் என தெரிவித்தார்.






# யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தால் வட பகுதி மீனவர்களுக்கு உதவித் திட்டம் வழங்கல்!

இந்திய துணை தூதரக ஸ்தானிகர் திரு. சாய் முரளி அவர்கள் 2025 ஜுன் 06ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று ஊர்காவற்துறை கிராமத்தைச் சேர்ந்த மீனவர் சமூகத்துக்காக மீன்பிடி வலைகளும் உலர்ந்த அத்தியாவசியப் பொருட்களும் வழங்கும் நிகழ்வில் பங்கேற்றார். ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் மற்றும் ஊர்காவற்துறை மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய துணை தூதரக ஸ்தானிகர் திரு, சாய் முரளி அவர்கள், ஊர்காவற்துறை என்பது யாழ்ப்பாணத்தின் வரலாற்று முக்கியத்துவம் மிக்க, பண்பாட்டு செழுமை வாய்ந்த பகுதியென்று குறிப்பிட்டார். இந்திய ஆதரவுடன் நவீனமயமாக்கப்பட்ட குருநகர் மீன்பிடி வலை தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட வலைகளை வழங்குவதில் மகிழ்ச்சி எனத் தெரிவித்தார். உள்ளூரிலேயே தயாரிக்கப்படும் இவ்வலைகள் மூலம் பலன்கள் சமூகத்துக்குள் தங்குகின்றன என்றும் குறிப்பிட்டார்.

உலர்ந்த அத்தியாவசியப் பொருட்களை வழங்கும் போது, இந்திய அரசின் பொது மக்களுக்கான சேவைத் திட்டங்களும் சமூக பங்களிப்பையும் அதிகரிக்கவுள்ளது என்ற உறுதியை துணை தூதரக ஸ்தானிகர் மீண்டும் வலியுறுத்தினார். வட மற்றும் கிழக்கு மாகாணங்களில் இந்தியா மேற்கொண்டு வரும் வீடுகள், சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, கலாசாரம் மற்றும் திறனறிதல் பயிற்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய அபிவிருத்தித் திட்டங்களை அவர் விளக்கினார்.

வட மாகாண மக்கள், குறிப்பாக ஊர்காவற்துறை பகுதியில் வாழும் மக்களைப் பற்றிய சவால்கள் குறித்து தானறிந்திருப்பதாகவும், இந்தியா எப்போதும் அவர்களுடன் இருந்தது என்றும் என்றும் இருக்கும் என்றும் தூதரகத் தலைவர் உறுதியளித்தார். நம்பிக்கையும், வாய்ப்புகளும், அமைதியும் நிரம்பிய எதிர்காலத்தை கட்டியெழுப்ப இந்தியா எப்போதும் நண்பனாகவும் துணைதாகவும் இருக்கும் என அவர் வலியுறுத்தினார்.

# யாழ்ப்பாணத்தில் அளவுக்கு அதிகமாக மருத்துவ மாத்திரைகளை உட்கொண்ட முதியவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணத்தில் அளவுக்கு அதிகமான மாத்திரைகளை உட்கொண்ட முதியவர் ஒருவர் 7ம் திகதி சனிக்கிழமை அன்றையதினம் உயிரிழந்துள்ளார். இதன்போது கீரிமலை வீதி, சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த நல்லையா இராசலிங்கம் (வயது 77) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில் குறித்த முதியவர் கடந்த நான்காம் திகதி மதுபோதையில் மருத்துவ மாத்திரைகளை அளவுக்கு அதிகமாக உட்கொண்டுள்ளார். பின்னர் அவரது மனைவி ஐந்தாம் திகதி அதிகாலை அவரை எழுப்பியுள்ளார். அவர் மயக்கம் அடைந்து காணப்பட்டதால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

தொடர்ந்து மயக்க நிலையிலேயே காணப்பட்ட குறித்த முதியவர் சிகிச்சை பலனின்றி 8ம் திகதி அன்றையதினம் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

மருத்துவ வில்லைகளை அளவுக்கதிகமாக உட்கொண்டதால் மரணம் சம்பாதித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.




# "பிடில்" வாசித்த நீரோ மன்னனும் "வீணை" இசைக்கும் தமிழரசு மன்னர்களும்

**"தமிழ் தேசியத்தின் பால் உண்மையான பற்றுறுதியும் கொள்கைப் பிடிப்பும், இலட்சியமும் கொண்ட ஏனைய தமிழ்த்தேசிய கட்சிகளுடன் இணைந்து உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க இணங்கிப்போக, இறங்கிப்போக இந்த தமிழரசின் சில மன்னர்களுக்கு வரட்டுக் கௌரவமும் மேதாவித் தலைக்கனமும் ஆணவமும் இடம்கொடுக்காமையினால்தான் இராணுவத் துணைக்குழுக்கள், தமிழினத் துரோகிகள், தமிழ், இளைஞர் யுவதிகளை படுகொலை செய்தோர், காணாமல் போகச் செய்தோர் என்று தங்களினாலேயே குற்றம்சாட்டப்பட்டவர்களுடன் இரவு நேரத் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களின் அலுவலகக் கதவுகளை ஆடையின்றி தட்டத் தொடங்கியுள்ளனர்"**

**- கே. பாலா -**

ரோம் நகரம் பற்றி எரியும்போது ரோமாபுரி மன்னன் நீரோ பிடில் வாசித்தானாம். அதாவது தன் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் நாட்டின் தலைநகரம் எரிந்து மக்களது உயிரும், அவர்தம் உடைமையும் நாசமாகியதைப் பற்றிய அக்கறையற்று, பிடில் இசைத்தபடி இருந்தான் என்பது பதிவு. ஆக மோசமான, மனிதாபிமானமற்ற, பொறுப்பற்ற ஆட்சியாளனுக்கான, தலைவனுக்கான முன் மாதிரியாக வரலாற்றில் பதிவாகியுள்ளான் "நீரோ" மன்னன். அது மட்டுமில்லை, ஒவ்வொரு நாசகரமான ஆட்சியாளனையும் குறிப்பிடும் குறியீடாகவும் இருக்கிறான் "நீரோ" மன்னன்.

உலகம் முழுவது உள்ள அரசியல்வாதிகளாலும் விமர்சகர்களாலும் பயன்படுத்தப்படும் இந்த மேற்கோளில் வரும் ரோமாபுரியின் நீரோ மன்னன், போன்றவர்கள் இன்று உலக நாடுகளில் இருக்கின்றார்களோ இல்லையோ இலங்காபுரியில் அதிலும் தமிழர் தாயகப் பகுதியான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசியல் தலைவர்களாக, தமிழ் தேசியக்கட்சிகளின் தலைவர்களாக, அரசியல்வாதிகளாக தாராளமாகவே இருக்கின்றார்கள்.

தன் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் நாட்டின் தலைநகரம் எரிந்து மக்களது உயிரும், அவர்தம் உடைமையும் நாசமாகியதைப் பற்றிய அக்கறையற்று நீரோ மன்னன் ரோமாபுரியில் "பிடில்" வாசித்தான் ஆனால் இலங்காபுரியில் உள்ள வடக்கு கிழக்குதமிழர் தாயகத்தில் தமது உரிமைக்காகவும் நிலத்திற்காகவும், காணாமல்போன தம் உறவுகளுக்காவும் தமிழனப் படுகொலைக்காக நீதி கேட்டும் தமிழ் மக்கள் போராடிவரும் நிலையில் தமிழ்மக்களின் தலைவர்கள் நாமே என மார்தட்டிக்கொள்ளும் "தமிழரசின் மன்னர்கள்" இந்த அநீதிகளுக்கு பக்கபலமாக இருந்தவர்கள் என தம்மாலேயே குற்றம் சாட்டப்பட்டவர்களுடன் இணைந்து "வீணை" இசைக்கத் தொடங்கியுள்ளனர்.

தமது "மேதாவி" தலைக்கனத்தாலும் பதவி மோகத்தாலும் "நான்" என்ற அகங்காரத்தினாலும் தமிழ் மக்களின் அரசியல் தலைவர்கள் எந்தளவு கீழ்த்தரமான நிலைக்கும் இறங்குவார்கள், எந்தளவு கீழ்த்தரமான வேலைகளையும் செய்வார்கள் என்பது ஒன்றும் புதிய விடயமல்ல. ஆனால் அண்மையில் இலங்கையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் தேசியக்கட்சிகளின் தாய்கட்சி எனப் போற்றப்பட்ட இலங்கை தமிழரசுக்கட்சியில் தமிழ் தேசிய முகமூடிகளுடன் "நீரோ" மன்னர்களாக இருந்த சில தலைவர்களின் முகத்திரையை கிழித்து விட்டுள்ளது.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தொகுதிவாரி, விகிதாசார முறைமையினால் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பதில் ஏற்பட்ட நெருக்கடிகளினாலேயே தமது தமிழ் தேசிய முகமூடிகளை கழற்றி வைத்துவிட்டு, தமிழினத் துரோகிகள், ஒட்டுக்குழு, இராணுவத் துணைக்குழு என தங்களினாலேயே குற்றம்சாட்டப்பட்ட, ஒதுக்கிவைக்கப்பட்ட தரப்புக்களின் காலடி தேடித் சென்று உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க ஆதரவு கோரி "வீணை" இசைக்குமளவுக்கு இந்த தமிழரசின் சில மன்னர்கள் சிரம்தாழ்த்தி தரம் தாழ்ந்துள்ளனர்.

தமிழ் தேசியத்தின் பால் உண்மையான பற்றுறுதியும் கொள்கைப் பிடிப்பும், இலட்சியமும் கொண்ட ஏனைய தமிழ்த்தேசிய கட்சிகளுடன் இணைந்து உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க இணங்கிப்போக, இறங்கிப்போக இந்த தமிழரசின் சில மன்னர்களுக்கு வரட்டுக் கௌரவமும் மேதாவித் தலைக்கனமும் ஆணவமும் இடம்கொடுக் காமையினால்தான் இராணுவத் துணைக்குழுக்கள், தமிழினத் துரோகிகள் என்று தங்களினாலேயே குற்றம் சாட்டப்பட்டவர்களுடன் இரவு நேரத் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களின் அலுவலகக் கதவுகளை ஆடையின்றி தட்டத் தொடங்கியுள்ளனர்.

இவ்வாறாக உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே சிவஞானம் தமிழினத் துரோகி, இராணுவத் துணைக்குழுத் தலைவர், தமிழ் இளைஞர், யுவதிகள் பலர் கொல்லப்பட்டமைக்கும் காணாமல் போனமைக்கும் காரணமானவர், தமிழரசுக்கட்சியின் தலைவராகவிருந்த மாவை சேனாதிராஜாவையே படுகொலை செய்ய முயன்றவர் என்றெல்லாம் இவர்களினாலேயே குற்றம்சாட்டப்பட்ட ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் (ஈ.பி.டி.பி.) தலைவர், டக்ளஸ் தேவானந்தாவிடம் அவரது அலுவலகம் சென்று ஆதரவு கோரி அடிபணிந்தமை தமிழ் மக்களையும் தமிழரசுக்கட்சியில் உள்ள தமிழின உணர்வாளர்களையும் கொந்தளிக்க வைத்துள்ளது.

உள்ளூராட்சி சபைகளில் இணைந்து ஆட்சியமைக்க ஏனைய தமிழ் தேசியக்கட்சிகள் ஆதரவளிக்கத் தயாராக இருந்த போதும் அவர்களுக்கு எந்தவொரு விட்டுக் கொடுப்பையும் செய்ய மறுத்து அவர்களை நிராகரித்து விட்டு ஈ.பி.டி.பி.யின் டக்ளஸ் தேவானதாவிடம் தமிழரசு சரணாகதி அடைந்துள்ளமைதான் இன்று தமிழ் தேசிய அரசியலையே கொதிப்படைய வைத்துள்ளது. குறித்த விடயம் தொடர்பில் சி.வி.கே சிவஞானம் தன்னுடன் தொலைபேசியில் உரையாடியதாகவும் அதுமட்டுமன்றி இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் தவிசாளர் ஒருவர் தன்னைச் சந்திப்பதற்குப் பல தடவைகள் முயற்சி செய்ததாகவும் அதன் பின்னரே சிவஞானம் சந்தித்து ஆதரவு கோரியதாகவும் டக்ளஸ் தேவானந்தா பகிரங்கமாக கூறியுள்ளதன் மூலம் "வீட்டுக்குள்" செல்ல டக்ளஸ் தேவானந்தா விருப்பப்படாத நிலையிலும் "வீணை" இசைக்க தமிழரசின் சில மன்னர்கள் ஆசைப்பட்டது அம்பலமாகியுள்ளது.



உள்ளூராட்சி சபைகளில் இணைந்து ஆட்சியமைப்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானமும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் அதன் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் கடந்த 5 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை டக்ளஸ் தேவானந்தாவின் யாழ் நகரிலுள்ள ஸ்ரீதர் திரையரங்க அலுவலகத்தில் சந்தித்துப் பேசியுள்ளமையே தமிழ் தேசிய அரசியலிலும் தமிழரசுக்கட்சிக்குள்ளும் புயலைக் கிளப்பியுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் எம்.பி., உள்ளூராட்சி சபைகளில் கூட்டணி அமைப்பது குறித்து டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடுவது பற்றி கட்சியின் உயர்மட்டக் குழுவில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. ஆகவே, இந்தச் சந்திப்பு தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது. உள்ளூராட்சி சபைகளில் கூட்டணி அமைப்பது குறித்து தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேசுவதற்கே இலங்கைத் தமிழரசுக் கட்சி தீர்மானித்திருந்தது. அவ்வாறிருக்கையில் தமிழ்த் தேசியத்துக்கு விரோதமான கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதெனில், அது பற்றி கட்சியின் உயர்மட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டியது அவசியம் எனத் தெரிவித்துள்ளார்.

இதேபோன்றே இலங்கைத் தமிழரசுக் கட்சி எந்த சந்தர்ப்பத்திலும் எமது தமிழ்த் தேசியக் கொள்கைக்கு விரோதமாக செயற்பட முடியாது. தமிழ்த் தேசியத் தலைவரின் கொள்கைக்கு எதிர்ப்பாக ஒருபோதும் நாம் செயற்படப் போவதுமில்லை. இது திண்ணம்.கட்சியின் உயர்மட்டக் குழுவின் (மத்தியகுழு) அனுமதியில்லாமல் தனிப்பட்ட முடிவுகள் எதனையும் நாம் ஏற்கவும் முடியாது அனுமதிக்கவும் முடியாது. டக்ளஸ் மற்றும் சிவஞானத்தின் சந்திப்பிற்கு கட்சி பொறுப்பேற்க முடியாது என்பதுடன் இதனை எனது தனிப்பட்ட முடிவின் அடிப்படையில் வன்மையான எதிர்ப்பினையும் தெரிவித்துக்கொள்கிறேன் - என சுமந்திரன் - சாணக்கியன் அணி விசுவாசியும் மத்தியகுழு உறுப்பினருமான மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் மேயர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்துள்ளார்.


ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவை தமிழரசுக்கட்சியின் பதில்தலைவர் சி.வி.கே.சிவஞானம் சந்தித்தமையானது கட்சியின் அடிமட்ட தொண்டனால் கூட ஏற்றுக்கொள்ள முடியாது. அண்மையில் பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர் பிரசாந்தன் மற்றும் கருணா ஆகியோர் எங்களுடன் சேர்ந்து தமிழரசுக்கட்சி பயணிக்க வேண்டும் என்றனர். எனவே தற்போதைய சூழ்நிலையில் சி.வி.கே.சிவஞானம் அவர்களுடனும் கூட்டு சேர வாய்ப்புள்ளது. டக்ளஸ் தேவானந்தாவுடன் கூட்டணி சேர முடிவெடுத்த இவர்களுக்கு பிள்ளையான் - கருணாவுடன் கூட்டணி சேர்வது இலகுவானது என்று தமிழரசுக்கட்சியின் ஆயுட் கால உறுப்பினர் அன்பின் செல்வேஸ் தெரிவித்துள்ளார். இதனை நிரூபிக்கும் வகையில் மட்டக்களப்பில் சில உள்ளூராட்சி சபைகளில் பிள்ளையானின் ஆதரவை தமிழரசு கோரி சில காய் நகர்த்தல்களை செய்துள்ளதாகவும் தகவல்கள் உண்டு.

இவ்வாறாக உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க ஈ,.பி.டி.பி.யிடம் தமிழரசு ஆதரவு கோரியமைக்கு எதிராக தமிழ் மக்கள் மத்தியிலும் தமிழரசுக்கட்சிக்குள்ளும் எதிர்ப்புக்கள் வெளிக் கிளம்பியுள்ள நிலையில் மானிப்பாய் பிரதேச சபையில் ஆட்சியை அமைப்பதற்காக தமிழரசுக் கட்சி ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தியிடம் ஆதரவு கோரிய விடயம் அம்பலமாகியுள்ளது. தமிழரசு கட்சியின் மானிப்பாய் பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரே, மானிப்பாய் பிரதேச சபையின் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் உறுப்பினர் ஒருவரிடம் இவ்வாறு ஆதரவு கோரியதாக தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும், கட்சியின் உயர்மட்ட குழுவின் தீர்மானத்துக்கு அமையவே ஆதரவு வழங்குவதா இல்லையா என முடிவு எடுக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் மானிப்பாய் பிரதேச சபையின் உறுப்பினர் கூறியதாக தகவல்கள் அம்பலமாகியுள்ளன.

உள்ளூராட்சிசபைகளில் ஆட்சியமைக்கும் விடயத்தில் தமிழ் தேசியக்கட்சிகளை புறம்தள்ளி தமிழரசுக்கட்சியின் பதில் தலைவர் சீ.வீ. கே சிவஞானம் ஈ.பி.டி.பியின் அலுவலகத்தில் அதன் செயலாளரை ஆசனப்பங்கீடு தொடர்பில் சந்திருப்பது ஒரு தமிழின துரோகமாகவும் நீண்ட தியாகங்களை கொண்ட தமிழரசின் வரலாற்றில் ஒரு கறையாகவும் தலைக்கனங்களினாலும் விட்டுக்கொடுப்பின்மையினாலும் தமிழ் தலைமைகள் அழிந்த. அழிக்கப்பட்ட வரலாறு மீண்டும் எழுதப்படுவதையுமே தமிழரசின் சில மன்னர்கள் வீணை இசைக்க ஆசைப்படும் இந்த சந்திப்பு வெளிப்படுத்துகின்றது.



# சிங்கப்பூரில் "தமிழிசை மூவர்" திருவுருவ ஓவியம் வெளியீடு




**ஆ**தி மும்மூர்த்திகள், சீர்காழி மூவர், தமிழிசை மூவர் என்று அழைக்கப்படும் சீர்காழி "முத்துத் தாண்டவர் ( 1525-1600)", தில்லையாடி "அருணாச்சலக் கவிராயர் (1711-1779), "தில்லைவிடங்கன்" மாரிமுத்தாப்பிள்ளை (1712-1787) ஆகியோரின் திருவுருவப் படம் கடந்த 1.5.2025, ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணியளவில், சிங்கப்பூர் தேசிய நூலக வாரியம் 16ஆம் தளத்தில் தமிழ் வரலாற்று மரபுடைமைக் கழகம் ஏற்பாடு செய்த நிகழ்வில் வெளியிடப்பட்டது.

தற்காலத்தில் பெரும்பான்மையாகப் பாடப்பட்டு வரும் எடுப்பு (பல்லவி), தொடுப்பு (அனுபல்லவி), முடிப்பு (சரணம்) ஆகிய அங்கங்களைக் கொண்ட கீர்த்தனை வடிவிலான பாடல்களை உருவாக்கி இந்திய இசை உலகுக்குத் தந்த இம்மூவரின் திருவுருவப் படங்கள் கல்வி நிறுவனங்களிலும், இசை அரங்கங்களிலும் இடம்பெறவில்லை என்பதாலும் இம்முவரும் தமிழ்பால் அன்புகொண்ட அனைவராலும் கொண்டாடப் படவேண்டும் என்பதாலும், இம்மூவரின் இசைப்பணிகள் தமிழ் சமுதாயத்திற்குக் கொண்டுசெல்லவேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழிசை மூவர்களின் உருவப்படங்களை வடிவமைக்கத் திட்டமிடப்பட்டு, அந்த பணியை சோழப் பெருவேந்தன் இராசேந்திர சோழனின் உருவப்படத்தை வடிவமைத்தவரான புதுச்சேரியை சேர்ந்த கலைமாமணி ஓவியர், பேராசிரியர் ராஜராஜனிடம் வழங்கப்பட்டது.

கடந்த இரண்டு மாத காலத்தில் மூவர்களின் ஓவியம் பல்வேறு வரலாற்று தரவுகளைக் கொண்டு உருவாக்கப்பட்டது. அவர்கள் வாழ்ந்த காலம், அவர்களின் குடும்ப பின்னணி மற்றும் அவர்கள் இசைப்பணியின் செயல்பாடுகளை உள்வாங்கி அவர்களது ஓவியம் உருவாக்கப்பட்டது. கி.பி பதினைந்தாம் நூற்றாண்டுக்குப் பிந்தைய தமிழிசையின் பல்வேறு சூழல்கள் காரணமாக ஏற்பட்ட தொய்வின் நிலையை உணர்ந்து, அதன் மீட்டெடுப்பிற்கான ஒரு அங்கமாக தமிழிசை மூவர்களின் திருவுருவப்படங்கள், தற்கால தலைமுறையினர்களிடம் கொண்டு செல்லும் நோக்கத்தில் இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஓவியத்தில் தமிழிசை மூவர்களான முத்துத் தாண்டவர், அருணாச்சலக் கவிராயர், மாரிமுத்தாப் பிள்ளை ஆகியோர்களின் திருவுருவங்கள், சீர்காழி சட்டைநாதர் கோவிலின் பின்னணியில் தீட்டப்பட்டுள்ளது.

நிகழ்ச்சிக்குப் கவிமாலைக் காப்பாளர் புதுமைத்தேனீ மா.அன்பழகன் தலைமை தாங்க, அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் மாணவர் சங்க மேனாள் தலைவர் திரு. க.நெடுஞ்செழியன் முன்னிலை வகிக்க, சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகப் பதிவாளரும், இந்திய மரபுடைமைக் நிலைய ஆலோசகருமான ஆர்.ராஜாராமன் தமிழிசை மூவரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

தமிழிசை மூவரின் இசைத்தொண்டு குறித்து முனைவர் மீனாட்சி சபாபதி சிறப்புரை ஆற்றினார். அவர் இம்மூவரும் மூத்த மும்மூர்த்திகள் என்பதைப் பல்வேறு தரவுகளோடு எடுதுரைத்தது பார்வையாளர்களைக் கவர்ந்தது. தமிழிசை மூவர், இராசேந்திர சோழன் ஆகியோரின் ஓவியங்கள் உருவான அனுபவங்களையும். தமிழக ஓவியங்கள் குறித்தும் ஓவியர் ராஜராஜன் பேசியது அனைவரையும் கவர்ந்தது.

இனிவரும் ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் சிங்கப்பூரில் "தமிழிசை மூவர் விழா" எடுக்கப்படும் என்று தமிழ் வரலாற்று மரபுடைமைக் கழகத்தின் தலைவர் திரு. ப.புருடோத்தமன் அவர்கள் அறிவித்தார்.

அத்துடன் இவ்விழாவில் ஆய்வாளர்களும் எழுத்தாளர்களும் பயனுறும் வகையில் முனைவர் கி.திருமாறன், திரு. தியாக இரமேஷ், திரு. ப.புருடோத்தமன் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு அமைக்கப்பட்ட "முத்தமிழ்" இணைய இதழும் தொடங்கி வைக்கப்பட்டது.

விழாவிற்கு தமிழ் வரலாற்று மரபுடைமைக் கழகத்தின் செயலாளர் திரு. சங்கர் ராம் வரவேற்புரை அளிக்க, அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் மாணவர் சங்கத்தின் மேனாள் தலைவர் திரு. ப.கருணாநிதி அவர்கள் நன்றிகூற, கழகத்தின் துணைத்தலைவர் திரு. செந்தில் சம்பந்தம் அவர்கள் தொகுத்து வழங்க இனிதே நிறைவேறியது.

நிகழ்ச்சியை தமிழ் வரலாற்று மரபுடைமைக் கழக நிர்வாகிகள் புருஷோத்தம்மன் பட்டுசாமி மற்றும் அவ்வமைப்பினர், அண்ணாமலைப் பல்கலைகழக முன்னாள் மாணவர்கள் சங்கத் தலைவர் கருணாநிதி மற்றும் தமிழ் வரலாற்று மரபுடைக்கழகத் துணைத் தலைவர் செந்தில் சம்பந்தம் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.















## தந்தையரை வணங்கி வாழவைப்போம்
## (நிலை மண்டில ஆசிரியப்பா)

---

தாயார் எமக்குத் தந்தார் உடலினை
சேயாய் எம்மை தாங்கினார் தந்தை
மாதா மாதம் பத்துச் சுமந்தார்
தாதா தோளில் பிரியமாய் ஏந்தினார்
எட்டுத் திங்களில் எட்டடி வைத்து
எட்டி நடக்க ஏற்றம் காட்டினீர்
மூன்று வயதில் முச்சொல் சொன்னீர்
நான்கு வயதில் நடனம் கற்பித்தீர்
மூச்சிலும் பேச்சிலும் முழுமையாய் நின்றீர்
மூச்சு உள்ளவரை மூர்த்தியாய்ப் போற்றுவோம்
ஐந்து வயதில் அணைத்துச் சென்றுமே!
புந்தி புகட்டப் பள்ளியில் சேர்த்தீர்
எண்ணும் எழுத்தும் ஏற்றநல் பாடலும்
கண்ணை விழித்துக் கருத்துடன் கற்பித்தீர்
கல்வியும் கலைகளும் கற்க வைத்தீர்
வல்லடி நெருங்கா விழிபோல் காத்தீர்
தன்னலம் கருதாத் தவமாய்த் தாங்கினீர்
உன்னத வாழ்வுக்கு உரமாய் இருந்தீர்
பருவ வயதில் பண்பான பெண்ணை
விருப்புடன் எமக்கு விவாகம் செய்திட
பகல் இரவாய்ப் பாடுபட்ட தந்தையை
அகக்கையில் வைத்து அருமையாய்த் தாங்குவோம்
தந்தை என்போர் தசையுடல் அல்லரே!
பந்தம் என்ற பசையால் ஆனவர்
தந்தையர் தினமல்ல தரணியில் வாழ்வரை
சிந்தை நமக்குச் சிறப்புடன் இருந்தால்
ஆடி அமாவாசை அல்ல அறுதிவரை
நாடிகள் நமக்கு நன்றாய் இயங்குவரை
உயிருடன் இருந்தால் உசிதமாய்க் காப்போம்
உயிரிழந்தால் ஆயுள் உள்ளவரை வணங்குமே!

---

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டக்களப்பில் ரி.எம்விபி கட்சி உபதலைவர் உட்பட 3 பேரை அழைத்து சிஐடி விசாரணையின் பின்னர் விடுவிப்பு

கனகராசா சரவணன்

வாழைச்சேனையில் பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பதில் தலைவர் ஜெயம் என அழைக்கப்படும் நாகலிங்கம் திரவியம் உட்பட 3 பேரை 6ம் திகதி அன்று வெள்ளிக்கிழமை கொழும்பில இருந்து வந்த குற்ற விசாணைப் பிரிவான சிஜடி யினரால் அவரது வீட்டில் வைத்து வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து கொண்டு சென்று விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடந்த 2006 டிசம்பர் 15ம் திகதி கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வாகனத்தில் பிரயாணித்த நிலையில் அவர் கொழும்பில் வைத்து கடத்தப்பட்டு காணாமல் போயுள்ள சம்பவம் தொடர்பாக பிள்ளையான் என்றழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தனை கடந்த ஏப்பிரல் 8ம் திகதி கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவு (சிஜடி) யினர் மட்டக்களப்பில் உள்ள அவரது காரியாலயத்தில் வைத்து கைது செய்து பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 3 மாதம் தடுப்புக்காவலில் வைத்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணையினையடுத்து மட்டக்களப்பு முதலாவது வாவிக்கரை வீதியில் அமைந்துள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைமைக்காரியலயத்தை கடந்த 30ம் (30-5-2025) கொழும்பில் இருந்து வந்த சிஜடி யினர் விசேட அதிரடிப்படையினர் சுற்றிவளைத்து சுமார் 12 மணித்தியாலம் சோதனை நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்தனர்.

இதன் போது அங்கிருந்து ஒரு சற்றலைற் போன் உட்பட 3 கையடக்க தொலைபேசிகள், சாரதி அனுமதிபத்திரம் ஒன்று, கடவுச் சீட்டு ஒன்று, ஜபாட் ஒன்று, 9 மில்லிமீற்றர் ரக கைதுப்பாக்கி 5 ரவை, ரிப்பிற்றர் ரக துப்பாக்கியின் 5 வெற்று தோட்டாக்களை மீட்டனர்.

இதனையடுத்து கைப்பற்றப்பட்ட சற்றலைற் போன் தொடர்பாக் ரி.எம்.வி கட்சியின் வாழைச்சேனையை சேர்ந்த மார்கண் என்ற ழைக்கப்படும் ஜயாத்துரை ரவி மற்றும் அவரின் உதவியாளர் குமரன் ஆகிய இருவரையும் வியாழக்கிழமை (5) வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திற்கு சிஜடி யினர் வரவழைத்து சுமார் 5 மணித்தியாலம் விசாரணைகளை மேற்கொண்டு பின்னர் அவர்களை விடுவித்தனர்.

இதனை தொடர்ந்து 6ம் திகதி அன்று வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணியளவில் வாழைச்சேனை பேத்தாளையிலுள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உப தலைவரான ஜெயம் என்பவரது வீட்டை சிஜடியினர் முற்றுகையிட்டு அவரை விசாரணைக்கு அழைத்துச் சென்று வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் வைத்து சுமார் 4 மணித்தியாலம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை விடுவித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 8130 மில்லியன் ரூபா பெறுமதியான 2077 திட்டங்களுக்கு அனுமதி!! அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவிப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் 8130 மில்லியன் ரூபா பெறுமதியான 2077 திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட அபிவிருத்தி குழுவின் புதிய தலைவரும் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியான்மை அபிவிருத்தி அமைச்சரும் பாரளுமன்ற உறுப்பினருமாகிய சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்தார்.

மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் 11ம் திகதி அன்று புதன்கிழமை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஜே.ஜே முரளிதரனின் ஒருங்கமைப்பில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக அமைச்சர் அறிவித்தார்.

இதன் போது அவர் தெரிவிக்கையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் இதன்போது முன்னேற்ற மீளாய்வு செய்யப்பட்டதுடன், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கான முன்மொழிவுகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம், சுற்றாடல், வீதிகள் பாலங்கள் அமைத்தல், யானை வேலி அமைத்தல், உரம் வழங்கள், அரச மருந்தகம் அமைத்தல், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இடப்பற்றாக்குறை, காணி பிரச்சினைகள், மேய்ச்சல்தரை பிரச்சினை, ஆளணியினர் பற்றாக்குறை, குடிநீர் வழங்கல், உட்பட்ட பல திணைக்களங்கள் சார் விடயங்களும் விரிவாக ஆராயப்பட்டதுடன் அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு பணிக்கப்பட்டுள்ளது.



இதன் போது முக்கியமாக காணப்படும் மக்கள் நலப்பணிகளை தெரிவு செய்து துரிதகதியில் நிறைவு செய்ய வேண்டும் என அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அதேவேளை விவசாய குழு, கைத்தொழில் குழு, போக்குவரத்து குழு, சுற்றாடல் குழு ஆகியன நான்கு குழுக்களும் மாதாந்தம் கலந்துரையாடி தீர்வுகள் காணப்பட வேண்டும் என்பதுடன் குறித்த கூட்டறிக்கைகள் மாவட்ட ஒருங்கினைப்பு குழுகூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத்தலைவருமான பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர, மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கந்தசாமி பிரபு, எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ், ஞானமுத்து சிறிநேசன், இராசமாணிக்கம் சாணக்கியன், இளையதம்பி சிறிநாத் மற்றும் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ரீ.ஏ.சி.என். தலங்கம,

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த், திருமதி. நவருபரஞ்ஜினி முகுத்தன் (காணி), மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர் வீ.நவநீதன், உள்ளுராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள், செயலாளர்கள், மாவட்ட பொலிஸ் உயரதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், முப்படை உயர் அதிகாரிகள் ஏனைய திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் திணைக்களங்கள் சார் உயரதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

உலக செய்திகள்
World News

# திருத்தணி அரசு மருத்துவமனை, மக்கள் பயன்படுத்தும் வகையில் செயல்படப்போவது எப்போது?

## நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் கேள்வி



நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, தரம் உயர்த்தப்பட்ட திருத்தணி அரசு மருத்துவமனையை மக்கள் பயன்படுத்தும் வகையில் இயங்கச்செய்யாமல் தமிழ்நாடு அரசு காலம் தாழ்த்தி வருவது வன்மையான கண்டனத்துக்குரியது.

கடந்த 2020ஆம் ஆண்டு திருவள்ளூர் அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்தி, மாவட்ட மருத்துவக் கல்லூரியாக மாற்றப்படுவதாக அறிவித்த தமிழ்நாடு அரசு, அதே ஆண்டு சட்டப்பேரவையில் திருத்தணி அரசு பொது மருத்துவமனையைத் தரம் உயர்த்த 45 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி தீர்மானமும் நிறைவேற்றி, ஒப்பந்தமும் விடப்பட்டது. இதற்கிடையே தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு திமுக அரசு அமைந்த பிறகு கடந்த ஏப்ரல் மாதம் காணொளிக் காட்சி வாயிலாக தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் அவர்கள் தரம் உயர்த்தப்பட்ட திருத்தணி மருத்துமனையைத் திறந்து வைத்தார். ஆனால், அதன்பிறகும் கடந்த இரு மாதங்களாக திருத்தணி அரசு மருத்துவமனை மருத்துவ உபகரணங்கள் மற்றும் மின்வசதி இல்லாத காரணத்தால் இன்னும் திறக்கப்படவில்லை. மக்கள் பயன்பாட்டுக்கு இல்லாத மருத்துவமனை யாருக்காக? எதற்காக? தரம் உயர்த்த தமிழ்நாடு அரசு வழங்குவதாக அறிவித்த 45 கோடி என்னானது?

தரம் உயர்த்தப்பட்ட மாவட்ட மருத்துவமனைகள், மருத்துவக்கல்லூரிகள், புதிதாகத் தொடங்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதிய உட்கட்டமைப்பு வசதிகளை திமுக அரசு ஏற்படுத்தவில்லை என்பது நிர்வாகச் சீர்கேட்டின் உச்சமாகும். வெற்று விளம்பரத்திற்குத் தரம் உயர்த்துவதாக வெற்று அறிவிப்புகளை வெளியிட்டுவிட்டு, மருத்துவமனைகளுக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்புகளைக் கூடத் திமுக அரசு நிறைவு செய்யாதிருப்பது கோடிக்கணக்கான ஏழை எளிய மக்களின் உயிரோடும், உடல் நலனோடும் விளையாடும் கொடுஞ்செயலாகும்.

குறிப்பாக, விழுப்புரம் மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரியாகத் தரம் உயர்த்தப்பட்ட நிலையில் மருத்துவ உட்கட்டமைப்பு வசதியோ, மருத்துவர்கள் நியமனமோ செய்யப்படாத காரணத்தால் பயிற்சி மருத்துவர்களைக் கொண்டு இயங்கி வருவது அதிர்ச்சியும், வேதனையும் அளிக்கிறது. அதன்காரணமாக விழுப்புரம் சுற்றுவட்டார மக்கள் பாண்டிச்சேரி மாநிலத்திலுள்ள ஜிப்மர் மருத்துவமனைக்குப் போகச்சொல்லி அலைகழிக்கப்படுவதும் அரங்கேறுகிறது. இதுகுறித்துப் பலமுறை பொதுமக்கள் புகாரளித்தும் திமுக அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதுதான் திராவிட மாடல் அரசின் சாதனையாகும்.

தமிழ்நாட்டில் ஏற்கனவே இயங்கி வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் முதல் மருத்துவக் கல்லூரிகள் வரை போதிய அளவில் மருத்துவர்கள் இல்லை, செவிலியர்கள் இல்லை, மருந்துகள் இல்லை, மருத்துவ உபகரணங்கள் இல்லை, படுக்கை வசதி இல்லை என்பதால் தமிழக மக்கள் பெரும் இன்னலுக்கு ஆளாகிவரும் நிலையில், தரம் உயர்த்தப்பட்ட மருத்துமனைகளும் அதைவிட மிக மோசமான நிலையிலிருப்பது ஏற்க முடியாத பெருங்கொடுமையாகும். இத்தனை மோசமான நிர்வாகத்தை வைத்துக்கொண்டு “இந்தியா வியக்கும் திராவிட மாடல், உலகம் வியக்கும் நான்காண்டு சாதனை” என்று திமுக அரசு பேசுவது வெட்கக்கேடானது.

ஆகவே, தமிழ்நாடு அரசு, தரம் உயர்த்தப்பட்ட திருத்தணி அரசு மருத்துவமனையில் அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தித் தந்து மக்கள் பயன்பாட்டிற்காக விரைந்து இயங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

மேலும், விழுப்புரம் மருத்துவக் கல்லூரி உட்பட தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் முதல் மருத்துவக்கல்லூரிகள் வரை மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப்பணியாளர்கள் பற்றாக்குறையைப்போக்கி, மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட தேவைகளை நிறைவேற்றி தமிழ்நாட்டு மக்களின் உயிர்காக்க உடனடி நடவடிக்கையை தமிழ்நாடு அரசு எடுக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் சீமான் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

புு. கஜிந்தன்

# சட்டவிரோதமாக தேக்கம் மர குற்றிகளை எடுத்து வந்த சந்தேகநபர் சாவகச்சேரியில் கைது!



கருங்கல்லு சல்லிக்குள் தேக்கம் குற்றிகளை மறைத்து ஏற்றிச் சென்ற டிப்பர் ஒன்றுடன் சாரதி 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்றையதினம் கைது செய்யப்பட்டுள்ளார். ஒட்டுசுட்டான் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி குறித்த மரக் குற்றிகளை கொண்டு வந்தபோது சாவகச்சேரி பகுதியில் வைத்து இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

15 இலட்சம் ரூபா பெறுமதியான தேக்கம் குற்றிகளை டிப்பரின் கீழே மறைத்து வைத்துவிட்டு சல்லியை ஏற்றி வந்தபோது, சாவகச்சேரி பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகரான மயூரன் மற்றும் கொஸ்தாபல் நிருபன் ஆகியோர் அந்த டிப்பரை சோதனையிட்டனர். இதன்போது அதில் மரக்குற்றிகள் ஏற்றி வந்தமை தெரிய வந்துள்ளது.

கைது நடவடிக்கை செய்யப்பட்ட சந்தேகநபருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மன்னாரில் காற்றாலை மின் உற்பத்தி, கனிய மணல் அகழ்வுக்கு எதிராக முன்னெடுக்கப்படவுள்ள கவனயீர்ப்பு பேரணி

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

## அனைத்து தரப்பினரையும் கலந்து கொண்டு ஆதரவு வழங்க பிரஜைகள் குழு கோரிக்கை




- எஸ்.ஆர்.லெம்பேட் (10-06-2025)

மன்னாரில் மக்களின் வாழ்வியலை பாதிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் 11ம் திகதி புதன்கிழமை மன்னாரில் இடம் பெற உள்ள கவனயீர்ப்பு பேரணியில் அனைவரும் கலந்து கொண்டு ஆதரவை வழங்குமாறு மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மன்னார் பிரஜைகள் குழுவில் 10ம் திகதி அன்று நடைபெற்றது.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னாரில் மக்களின் வாழ்வியலை பாதிக்கும் வகையில் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு இடம் பெற்று வருகிறது.

காற்றாலை மின் உற்பத்தி மக்களுக்கு நன்மையை ஏற்படுத்தும் செயல் திட்டமாக காணப்பட்டாலும்,குறித்த காற்றாலைகள் அமைக்கப்படும் இடம் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

மேலும் மன்னார் தீவு மற்றும் பெரு நில பரப்பிலும் கனிய மணல் அகழ்வு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பை தெரிவித்து வருகின்ற போதும், குறித்த நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

எனவே மக்களின் வாழ்வியலை பாதிக்கின்ற காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மன்னார் பிரஜைகள் குழு, பொது அமைப்புக்கள், மீனவ அமைப்புகள் உள்ளடங்களாக சிவில் அமைப்புக்கள் இணைந்து நாளைய தினம் புதன்கிழமை காலை மன்னாரில் கவனயீர்ப்பு பேரணி ஒன்றை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காலை 9 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதான வீதியில் ஆரம்பமாகி பிரதான வீதியூடாக மன்னார் பஜார் பகுதியை சென்றடையும்.

அதனை தொடர்ந்து ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட வேண்டிய கோரிக்கை அடங்கிய மகஜர் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு வழங்கி வைக்கப்படும். எனவே குறித்த பேரணியில் மன்னார் மாவட்ட மக்கள், வர்த்தகர்கள் உள்ளடங்களாக அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டு எமது இருப்பை தக்க வைக்க அனைவரும் குரல் கொடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழக மீனவர்களின் 60 நாள் மீன்பிடி தடைக்காலம் இம்மாதம் 15 ஆம் தேதியுடன் நிறைவடைகிறது – எல்லை தாண்டினால் அவர்கள் கைது செய்யப்படுவார்கள்



## ஊடக சந்திப்பில் வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவிப்பு

- எஸ்.ஆர்.லெம்பேட் (12-06-2025)

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய வருகையை தடுக்க இலங்கை அரசும், மீனவ அமைச்சும் தீவிரமாக இருக்கிறது. கடற்படையும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகிறார்கள். எதிர்வரும் 15 ஆம் திகதியில் இருந்து இலங்கை கடல் எல்லையை கடற்படை ஊடாக தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதோடு, அத்துமீறி வருகின்ற இந்திய மீனவர்களையும் ,அவர்களின் படகுகளையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என மீன்பிடி அமைச்சர் உறுதியளித்துள்ளதாக வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் 12ன்று வியாழக்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடற்றொழில் அமைச்சரை புதன்கிழமை (11) மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் இணைந்து அமைச்சரின் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடி இருந்தோம்.

குறித்த சந்திப்பானது எதிர் வருகின்ற 15ஆம் திகதி தமிழக மீனவர்களின் அத்து மீறிய எல்லை தாண்டிய வருகை தொடர்பாகவும்,குறித்த விடையம் தொடர்பாக அரசு முன்னெடுக்க திட்டமிட்டுள்ள விடையம் தொடர்பாகவும் வட பகுதி மீனவர்கள் சார்பாக நாங்கள் எதிர்நோக்க உள்ள பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக வும் நாங்கள் அமைச்சர் அலுவலகத்திற்கு சென்றிருந்தோம். குறித்த சந்திப்பில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் அவர்களும் கலந்து கொண்டிருந்தார்.

தமிழக மீனவர்களின் 60 நாள் மீன்பிடி தடைக்காலம் இம்மாதம் 15 ஆம் திகதியுடன் நிறைவடைகிறது.15 ஆம் திகதிக்கு பின்னர் அவர்களின் எல்லை தாண்டிய வருகை நிச்சயமாக எமது கடல் பகுதியில் இடம் பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கிறது. அதை அரசாங்கமும் மீன்பிடி அமைச்சும் எவ்வாறு தடுக்க இருக்கிறது.

வட பகுதி மீனவர்கள் இதனை எவ்வாறு முகம் கொடுக்க போகிறார்கள் என்ற விடையங்களை நாங்கள் ஆழமாக கலந்துரையாடினோம்.

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய வருகையையும், சட்டவிரோத மீன் பிடியையும் தடுப்பதற்காக நீண்ட காலமாக நாங்கள் போராடி வருகிறோம்.பேச்சு வார்த்தைகளையும் நடத்தி இருக்கின்றோம்.தமிழக இந்திய மட்டத்திலும் பேசி உள்ளோம்.

மேலும் பல்வேறு மட்டங்களிலும் பேசி வந்துள்ளோம். வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் நீண்ட காலமாக இவ்விடயத்தை கையாண்டு வருகிறது.2004 ஆம் ஆண்டில் இருந்து இவ்விடயம் குறித்து அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது.நெப்சோ நிறுவனமும் தன்னால் ஆன உதவிகளை முன்னெடுத்து வருகின்றது.

எதிர்வரும் 15 ஆம் திகதியில் இருந்து இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகையை தடுப்பதற்கான திட்டம் என்ன? என்பது குறித்து கடல்தொழில் அமைச்சருடன் கலந்துரையாடினோம்.

இவ்விடயம் தொடர்பாக வடபகுதி மீனவர்களுக்கும் விளக்கத்தை தெரிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் முன் வைத்திருந்தோம். இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய வருகையை தடுக்க இலங்கை அரசும், மீனவ அமைச்சும் தீவிரமாக இருக்கிறது. கடற்படையும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகிறார்கள்.

எனவே எதிர்காலத்தில் இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்போம். எதிர்வரும் 15 ஆம் திகதியில் இருந்து இலங்கை கடல் எல்லையை கடற்படை ஊடாக தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை முன் கெடுப்பதோடு, அத்துமீறி வருகின்ற இந்திய மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். வட பகுதி மீனவர்கள் அச்சம் கொள்ள தேவையில்லை. அரசு தனது செயல்பாட்டில் உறுதியாக இருக்கிறது என்கிற தகவலை மீன்பிடி அமைச்சர் உறுதியாக தெரிவித்திருந்தார்.

அரசாங்கம் அத்துமீறிய மீனவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் தீவிரமாக உள்ளது என்பதை நாங்கள் அறிகிறோம். எனினும் கடற்படை, அரசாங்கம் இவ்விடயத்தில் கவனயீனமாக இருப்பார்கள் எனினும் எமது வாழ்வாதாரம் கேள்விக்குறியாகிவிடும் என்கின்ற அச்சம் மீனவர்களிடம் காணப்படுகின்றது என்கிற விடையத்தை மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.





இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னாரில் சிந்துஜா, வேணுஜா ஆகியோரின் மரணத்திற்கு நீதி கோரி பொது வைத்தியசாலைக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் மூவர் பல மாதங்களின் பின் கைது




மன்னார் பொது வைத்தியசாலையில் இடம்பெற்ற மகப்பேற்று சிகிச்சைகளின் போது மரணமடைந்த சிந்துஜா மற்றும் பட்டி தோட்டத்தை சேர்ந்த வேணுஜா மற்றும் அவரின் சிசுவின் மரணத்திற்கு நீதி கோரி இடம்பெற்ற போராட்டத்தில் பொதுமக்கள் சார்பாக முன்னின்று போராடியவர்கள் மூவர் 8ம் திகதி அன்றையதினம் ஞாயிற்றுக்கிழமைமன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பாக சட்ட விரோதமாக பொது மக்களை ஒன்று கூட்டியமை மற்றும் பொது சொத்துக்களை சேதப்படுத்தியமை உள்ளிட்ட பல பிரிவுகளில் சம்பந்தப்பட்ட மூன்று இளைஞர்களும் கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.





கடந்த டிசம்பர் மாதம் மன்னார் பொது வைத்தியசாலைக்கு முன்பாக பொது அழைப்பின் பெயரில் ஒன்று கூடிய பொதுமக்கள் மன்னார் பொது வைத்தியசாலையில் இடம் பெறும் பல்வேறு சீர்கேடுகளுக்கு எதிராக அமைதியான போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையில் போராட்டக்காரர்களின் கோரிக்கை தொடர்பில் பல்வேறு வாக்குறுதிகளை அதிகாரிகளால் வழங்கப்பட்ட போதிலும் அதை ஏற்க மறுத்த சில போராட்டக்காரர்களால் போராட்டம் வன்முறையாக மாற்றம் அடைந்தது.

இந்த நிலையில் விதிகளை மறித்தும் டயர்களை கொளுத்தியும் போராட்டகாரர்கள் சிலர் தங்கள் எதிர்ப்புக்களை தெரிவித்த நிலை போராட்டத்தில் சில விசமிகள் புகுந்து போலீசார் மீதும் வைத்தியசாலை மீதும் கல் வீச்சுக்களை மேற்கொண்டு போராட்டத்தை திசை திருப்பி இருந்தனர்.

இவ்வாறான நிலையில் போராட்டம் இறுதியில் சுமுகமான நிலையில் நிறைவடைந்த போதிலும் மக்கள் சார்பாக போராட்டத்தில் கலந்து கொண்ட மூவரை பல மாதங்கள் கழித்து மன்னார் பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை அன்றையதினம் 8ம் திகதி கைது செய்துள்ளனர்.

சிந்துஜா மற்றும் வேணுஜா வின் மரணம் தொடர்பில் விசாரணைகள் இதுவரை முடிவுறுத் தப்படாத நிலையில் அவர்களுக்கு, அவர்களின் குடும்பங்களுக்கு நீதி கிடைக்காத நிலையில் அவர்கள் சார்பாக போராடிய மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமை மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

# மன்னார் மாவட்ட மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கான பரிந்துரை வாத நிகழ்ச்சித் திட்டம்



(8-06-2025)

மன்னார் மாவட்ட மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கான பரிந்துரை வாத நிகழ்ச்சித் திட்டம் மன்னார் மாவட்ட மனித உரிமைகள் முதலுதவி மையத்தின் ஏற்பாட்டில் ரைட் டு லைப் நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட ஊடகவியலாளர்கள் சமூக செயற்பாட்டாளர்கள் என தெரிவு செய்யப்பட்ட குழுவினருக்கு இந்த நிகழ்ச்சி இடம்பெற்றது.

சமூக மட்டங்களில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவற்றை அறிந்து ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் எவ்வாறு அவற்றை சமூக மட்டங்களுக்கு கொண்டு செல்வது தொடர்பாக இந்த நிகழ்வில் பயிற்சி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சி திட்டத்தில் ரைட்டு லைப் நிறுவனத்தின் திட்ட உத்தியோகத்தர்களான பிரசாந்த் மற்றும் சுனீத் மற்றும் மன்னார் மாவட்ட மனித உரிமைகள் முதலுதவி மையத்தில் மாவட்ட இணைப்பாளர் டிலக்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த செயல்பாடு எதிர்காலத்தில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர் களிடையே இணைப்பை ஏற்படுத்தி சமூகப் பிரச்சினைகளை அடையாளப் படுத்துவதை பிரதானமாகக் கொண்டதாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

**புனித அந்தோனியார் பக்தர்களுக்கான விசேட அறிவித்தல்**

**புனித அந்தோனியார் திருவிழா, எதிர்வரும் யூன் 13ம் திகதி, மாலை 7 மணிக்கு, ஸ்காபரோ நகரில், பேர்ச்மவுண்ட்-டன்போர்த் அவனியூ சந்திப்பிற்கு அருகே, இலக்கம் 131 பேர்ச்மவுண்ட் வீதியில் அமைந்துள்ள தூய ஆரோக்கிய அன்னை தமிழ் கத்தோலிக்க பங்கில் நடைபெறவுள்ளது.**

**எதிர்வரும் யூன் 10ம் திகதி, செவ்வாய்க்கிழமை, புனித அந்தோனியாரின் திருவுடலின் ஒரு பகுதியைத் தாங்கிய விசேட திருப்பண்டம், புனித அந்தோனியார் பக்தர்களின் ஆராதனைக்கும் வேண்டுதலுக்கும், எமது ஆலயத்திற்கு கொண்டுவரப்படவிருக்கிறது.**

**யூன் 10ம் திகதி, செவ்வாய்க்கிழமை, காலை 10 மணியிலிருந்து இரவு 9 மணிவரை, 131 பேர்ச்மவுண்ட் வீதி, ஸ்காபரோவில் புனித அந்தோனியாரின் விசேட திருப்பண்டத்தை தரிசித்து, புதுமைகள் புரியும் புனித அந்தோனியாரின் விசேட அருள்வளங்களைப் பெற்றுக்கொள்ள அன்போடு அழைக்கிறோம்.**

மேலதிக விபரங்களுக்கு: 416-264-6544

**(131 Birchmount Road, Scarborough)**
**(Birchmount and Danforth Avenue)**



இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# யாழ்ப்பாணம் – புங்குடுதீவு கடலில் கரையொதுங்கிய 15 அடி நீளமுள்ள திமிங்கிலம்!



திங்கட்கிழமை 9ம் திகதி அன்றையதினம் யாழ்ப்பாணம் - புங்குடுதீவு கடலில் திமிங்கிலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

காலை 11.45 மணியளவில், ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புங்குடிதீவு கடற்கரையில் 15 அடி நீளமுள்ள குறித்த திமிங்கலம் இறந்து கரையொதுங்கியது.

குறித்த எதிமிங்கிலம் உயிரிழந்தமைக்கான காரணம் தெரியவராத நிலையில் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் சிறப்பாக இடம்பெற்ற பஞ்சரத உற்சவம்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

(08-06-2025)

வரலாற்றுச் சிறப்பு மிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்த பெருவிழா வின் விசேட திருவிழாவான தேர் திருவிழா 8ம் திகதி அன்று ஞாயிற்றுக்கிழமை விமரிசையாக இடம் பெற்றது.

உற்சவ மூர்த்திகளுக்கு வசந்த மண்டபத்தில் விசேட பூஜைகள், தீபாரதனைகள் இடம் பெற்றதை தொடர்ந்து உள் வீதி உலா வந்து மூர்த்திகள் தொடர்ந்து தேரில் எழுந்தருளி தொடர்ந்து மக்கள் வடம் பிடித்து இழுக்க தேர் வீதி உலா வந்தது.

அதனை தொடர்ந்து உற்சவ மூர்த்திகள் பச்சை சார்த்தப்பட்டு ஆலயத்திற்கு எடுத்துவரப்பட்டது.

கடந்த மாதம் 31 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற நிலையில் இன்றைய தினம் தேர் திருவிழா மிக விமர்சையாக ஆலயத்தின் பிரதம குரு தியாகராஜா கருணானந்த குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.

இவ் உற்சவத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

செவ்வாய்க்கிழமை தீர்த்த திருவிழாவும், உற்சவமும் இடம் பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.





# நாட்டின் மிகப்பெரிய மன்னார் சதொச மனிதப் புதைகுழியை மூடுவதற்கு நீதிமன்றம் இடைக்காலத் தடையை விதித்தது

இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய மனிதப் புதைகுழியின் அகழ்வுக்கு குறித்த நிபுணர் அறிக்கைகளின் அடிப்படையில் தீர்மானம் எட்டப்படும் வரை, மனிதப் புதைகுழி மூடாதிருக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மன்னார் சதொச மனிதப் புதைகுழியை மூடுவதற்கு தடை விதிக்கக் கோரி மூத்த சட்டத்தரணி கே.எஸ். ரத்னவேல், சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் மற்றும் சட்டத்தரணி ரணிதா ஞானராஜா ஆகியோர் தாக்கல் செய்த வழக்கை ஜூன் 2ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொண்ட வட மாகாண உயர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

மன்னார் சதொச மனிதப் புதைகுழியின் அகழ்வுக்குப் பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி, புதைகுழியில் பணியைத் தொடர வேண்டிய அவசியமில்லை என மன்னார் நீதிமன்றத்திற்குத் தெரிவித்திருந்தார்.

152 நாட்கள் அகழ்வின் முடிவில் மீட்கப்பட்ட உயிரியல் மற்றும் ஏனைய மாதிரிகள் உள்ளிட்ட 342 எலும்புக்கூடுகள் விசாரணை நோக்கங்களுக்கு போதுமானவை என அவர் தீர்மானித்துள்ளார்.

"எனவே, தற்போதுள்ள தரவுத் தொகுப்பு நீதவான் நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட விசாரணை நோக்கங்களை பூர்த்தி செய்ய போதுமானது எனவும், எனவே வளாகத்தில் மேலும் கள தலையீடு (ஆய்வு) தேவையில்லை எனவும் நாங்கள் முடிவு செய்கிறோம்," என வைத்தியர் டபிள்யூ. ஆர். ஏ. சமிந்த ராஜபக்ச நவம்பர் 2, 2024 அன்று நீதிமன்றத்திற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

அந்த அறிக்கையின் அடிப்படையில், மன்னார் சதொச வெகுஜன புதைகுழியை மூடுவதற்கு மே 8 ஆம் திகதி நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை நிறுத்தக் கோரி, மூத்த சட்டத்தரணி கே.எஸ். ரத்னவேல், சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் மற்றும் சட்டத்தரணி ரணிதா ஞானராஜா ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ததோடு, சட்டமா அதிபர் மற்றும் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் ஆகியன (OMP) பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தன.

ஜூன் 2 ஆம் திகதி வவுனியா உயர் நீதிமன்றத்தில் வழக்கு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நிபுணர் அறிக்கைகளின் அடிப்படையில் ஒரு தீர்மானம் எட்டப்படும் வரை அகழ்வு இடம்பெற்ற பகுதியை மூட வேண்டாம் என நீதிபதி எம்.எம்.எம். மிஹால் உத்தரவிட்டார்.

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் நிர்வாக பணிப்பாளர் சட்டத்தரணி ஜெகநாதன் தற்பரன் மற்றும் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் மன்னார் கிளையின் தலைவர் சட்டத்தரணி ரஸ்கா முபாரக் ஆகியோர் அன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகினர்.

சட்டத்தரணிகள் முன்வைத்த வாதங்களைக் கருத்தில் கொண்ட நீதிபதி, மனிதப் புதைகுழிகள் குறித்த நிபுணர் அறிக்கைகள் பெறப்பட்டு அதன் அடிப்படையில் ஒரு தீர்மானம் எட்டப்படும் வரை புதைகுழிகளை மூட வேண்டாம் என்று உத்தரவிட்டதாக, நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் நிர்வாக பணிப்பாளர் சட்டத்தரணி ஜெகநாதன் தற்பரன் தெரிவித்தார்.

"மன்னார் புதைகுழியை போதிய சான்று ஆதாரங்கள் அந்தப் பகுதியில் இருந்து முற்று முழுதாக எடுக்கும் வரை அதனை மூடுவது சரியான செயற்பாடு அல்லவென வாதிடப்பட்டது. மேல் நீதிமன்றம் அதனை ஆராய்ந்து தீர்ப்பினை அறிவித்துள்ளது. தற்காலிகமாக அந்த புதைகுழியை மூடுவதில் இருந்து விடுவித்துக்கொள்ளப்பட வேண்டும் எனவும் தொடர்புடைய நிபுணத்துவம் வாய்ந்த அறிக்கைகளை பெற்று, அந்த அறிக்கையின் ஊடாக முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். முழுமையான அறிக்கைகளைப் பெற்று முடிவுகள் எடுக்கப்படும் வரை அங்கே சான்று ஆதாரங்கள் எடுக்கப்படும் வரை அதனை தொடர்ச்சியே அப்படியே வைத்திருக்கவும், தொடர்புடைய அரச அதிகாரிகளின் ஆலோசனைகளையும் பெற்று செயற்படுவது குறித்தும் இன்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது."

அகழ்வு இடம்பெற்ற பகுதியில் ஏற்படக்கூடிய சுகாதார சீர்கேடுகளை தடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வவுனியா உயர் நீதிமன்ற நீதிபதி பரிந்துரைத்திருந்தார்.

"அப்பகுதியில் அகழ்வு பகுதியில் ஏற்பட்டுள்ள சுகாதார சீர்கேடு தொடர்பிலான விடயத்தினை கருத்தில் கொண்டு குறித்த அகழ்வுப் பகுதியினை மூடுவது தொடர்பில் அல்லது அதனை சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படாதவாறு பேணுவது தொடர்பில் மனுதாரர்கள் மற்றும் வழக்குடன் தொடர்புடைய நிபுணர்களின் பங்கேற்புடன் விஞ்ஞான ரீதியிலான செயன்முறைகளைப் பின்பற்றி முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள நீதிபதிக்கு உத்தரவிடப்படுகிறது," என்று உயர் நீதிமன்ற நீதிபதி மிஹாலின் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூலை 5ஆம் திகதி மன்னார் நீதவான் நீதிமன்றம் மீண்டும் கூடியபோது, நீதிபதி, சட்டத்தரணிகள், அரச அதிகாரிகள் மற்றும் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பிரதிநிதிகளுடன் இணைந்து, மேற்சொன்ன உத்தரவுக்கு அமைய, மன்னார் சதொச மனித புதைகுழியில் ஆய்வுப்பணிகளை மேற்கொண்டதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தோண்டப்பட்ட மண் குவிக்கப்பட்ட இடம், அகழ்வு செய்து எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட இடங்கள் மற்றும் இன்னும் எலும்புக்கூடுகள் இருக்கலாம் என நம்பப்படும் மீதமுள்ள இடங்கள் குறித்து ஆய்வுகள் நடத்தப்பட்டன.

இதற்கமைய, அகழ்வு இடம்பெற்ற இடத்தில் இருந்து அகற்றப்பட்ட மண்ணில் மேலும் சான்றுப் பொருட்கள் இருக்கக்கூடும் என்பதால் அந்த மண்ணை அகற்றாறு இருக்கவும், அகழ்வு இடம்பெற்ற குழியில் மேலும் எலும்புக்கூடுகள் இருக்கக்கூடும் என்பதாலும், எலும்புக்கூடுகள் இருக்கலாம் என நம்பப்பட்டு அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் எலும்புகள் இருக்கலாம் என்பதாலும் அவற்றை மூடாது இருக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னார் சதொச மனித புதைகுழி அகழ்வுக்குப் பொறுப்பான தடயவியல் நிபுணர் சமிந்திர ராஜபக்ச, நீர் மற்றும் குப்பைகளை அகற்றுவதன் மூலம் சான்றுகள் அழிவடையாது என வழங்கிய சான்றிதழின் அடிப்படையில், மன்னார் நீதவான் நகராட்சி மன்றத்திற்கு நீர் மற்றும் குப்பைகளை அகற்ற உத்தரவிட்டுள்ளார்.

ஜூன் 12 ஆம் திகதி மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

மன்னார் புதைகுழியின் அளவு

2018 ஆம் ஆண்டு நிர்மாணப் பணிகளின் போது அடையாளம் காணப்பட்ட மன்னார் சதொச மனிதப் புதைகுழியில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின் போது 28 சிறுவர்கள் உட்பட 376 மனித உடல் உறுகண்டுபிடிக்கப்பட்டன.

குற்றம் இடம்பெற் இடமாக கருதப்பட்டு மன்னார் சதொச மனிதப் புதைகுழி தோண்டப்பட்டு வருவதாக சட்ட வைத்திய நிபுணர் சமிந்த ராஜபக்ச 190ஆவது நாள் அகழ்வு விசாரணையின்போது ஊடகவியலாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

மன்னார் சதொச புதைகுழியில் இருந்து தோண்டியெடுக்கப்பட்ட ஆறு எலும்புகளை ஆய்வு செய்த அமெரிக்காவின் மியாமியை தளமாகக் கொண்ட பீட்டா அனலிட்டிக்ஸ் நிறுவனம் (Beta Analytic Inc.) அவை கி.பி.1404 -1635ற்கும் இடைப்பட்ட நூற்றாண்டுகளை சேர்ந்தது என தீர்மானித்தது.

ஜூலை 2019 இல், அந்த தீர்மானத்தை கடுமையாக நிராகரித்த களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த தொல்லியல் முதுகலைப் பிரிவின் பேராசிரியர் ராஜ் சோமதேவ, வெகுஜன புதைகுழியின் காலத்தைப் பற்றிய நம்பகமான தீர்மானத்திற்கு வரக்கூடிய வகையில், ஜூலை 2019 இல், மனித எலும்புகளுடன் தோண்டியெடுக்கப்பட்ட நூற்றுக்கணக்கான பொருட்களில் புதிய விசாரணைகளை ஆரம்பித்தார்.

அப்போது கண்டெடுக்கப்பட்ட எலும்புகளில் சிலவற்றில் ஆழமான வெட்டுக்காயங்கள் காணப்பட்டதுடன், ஒன்றாகக் கட்டப்பட்டதாக தெரிவிக்கப்படும் எலும்புத் துண்டுகளும் மனித புதைகுழியில் காணப்பட்டன.

# இவ்வார ராசிபலன்

**13-06-2025 வெள்ளி தொடக்கம் 19-06-2025 வியாழன் வரையும்**




**மேஷம்:** மகிழ்ச்சியும், வளர்ச்சியும், கிளர்ச்சியும் உருவாகக்கூடிய வாரம். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். ஆரோக்கியம் அபிவிருத்தி அடையும். அதிகாரியின் ஆதரவு பெருகும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். ஆன்றோர் வாழ்த்து கிட்டும். வியாபார வளர்ச்சியுண்டு. பிள்ளைகளால் பெருமை சேரும். உறவினரால் தொல்லை நேரும். கொடுக்கல், வாங்கலால் நன்மை நேரும். கொள்கையில் பிடிப்பு ஏற்படும். உடல் உபாதை ஏற்பட்டு தீரும். வருமானம் சேரும். நிர்வாக பொறுப்பு கூடும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும். தொலைதூரப் பயணம் உண்டு. பணிச்சுமைகள் குறையும். வியாபாரம் மந்த நிலை அகலும். கடன் உதவி கிட்டும். தொழிலில் மாற்றம் ஏற்படும். சொந்த தொழில் அமையும். குடும்ப அமைதி கூடும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பணியில் உயர்வு கிட்டும். கவலைகள் அடியோடு விலகும். விவசாயம் கை கொடுக்கும். தீய எண்ணங்கள் விலகும். எள் தானம் ஏற்றம் தரும். தேவைகள் பூர்த்தியாகும். அரசு பணியில் மாற்றம் வரும். குடும்ப அன்யோன்யம் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்டலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 7,1,3,4
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J




**ரிஷபம்:** பணவரவு லாபம் தரும் வாரம். புத்தி சாதுர்யம் கூடும். புத்திர வழியில் சந்தோஷம் கூடும். புதிய வாகனம் சேரும். தீய எண்ணம் விலகும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். திடீர் தனவரவு ஏற்படும். அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். அரசு உதவிகள் கிட்டும். விவசாய விளைச்சல் அதிகமாகும். வில்லங்கம் விலகும். வியாபாரம் உயரும். ஆலய தரிசனம் ஆறுதல் தரும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். அரசியலில் புகழ் கூடும். திடீர் வரவு உண்டு. கல்வியில் மேன்மை கிட்டும். நெருக்கடிகள் நீங்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். காதலில் கன்னியம் கூடும். பூர்வீக சொத்து வரும். தொழில் சிக்கல் மறையும். இனிய செய்தியால் மனம் மகிழும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். கல்விச் சலுகைகள் கிட்டும். எதிர்பாராத நன்மை கிட்டும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மன அமைதி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 5,2,4,7
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,O




**மிதுனம்:** சந்தோஷமான நிகழ்வு தரும் வாரம். பாராட்டுக்கள் கிடைக்கும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. முயற்சிகள் அதிகம் தேவை. திடீர் செலவு ஏற்படும். எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. குடும்ப அன்யோன்யம் கூடும். பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படும். விருந்தினர் வருகை உண்டு. உத்தியோக இடமாற்றம் ஏற்படும். புதிய நட்பு உருவாகும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். வராத கடன் வந்து சேரும். பண வரவு உண்டு. ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு வட்டம் விரிவடையும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். பேச்சில் நிதானம் தேவை. பயணத்தால் பலன் உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். குடும்ப கௌரவம் உயரும். பட்டம், பதவி வந்து சேரும். நட்டம் இல்லாத வாரம். சட்டம் சாதகமாகும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். புதிய முயற்சி பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்சிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 8,1,3,9
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**கடகம்:** எதிர்பார்த்த காரியம் நடக்கக்கூடிய வாரம். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதிகள் மேம்படும். கவனமுடன் செயல்பட வேண்டும். காரிய தாமதம் ஏற்படும். வரவுகள் திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். வாகனத்தில் கவனம் தேவை. பழையக் கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மனச்சஞ்சலம் ஏற்படும். ஆடை, அணிகலன்கள் சேரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். கால்நடைகளால் பலன் உண்டு. கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் பெருகும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். மனை வாங்கும் சிந்தனை மேலோங்கும். கலைத்தொழிலில் கவனம் தேவை. பாதகமான சூழ்நிலைகள் அகலும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பைரவர், அதிர்ஷ்ட எண்: 2,1,6,4
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,T




**சிம்மம்:** செல்வாக்கு உயரக்கூடிய வாரம். உடல்பொலிவு கூடும். உற்சாகம் கலை கட்டும். வேலைபளு அதிகரிக்கும். புதிய சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்பார்ப்புகள் குறையும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். உறவினர் வருகை உற்சாகம் தரும். சூழ்நிலைகள் சமாளிக்க சூரிய வழிபாடு அவசியம். நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் ஒழியும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்விச் செலவு அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். நண்பர்களால் நன்மை உண்டு. பூமி வாங்கும் யோகம் உண்டு. சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகள் வெற்றிகள் தரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பதவி உயர்வு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கலைத்தொழில் லாபம் தரும். கண் நோய் வந்து போகும். கவலைகள் ஒழியும். கால்நடைகளால் லாபம் உண்டு. வியாபார விருத்தி ஏற்படும். வேற்றுமை விலகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 4,6,5,8
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,P


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**கன்னி:** பயணங்களால் பணவரவு கிடைக்கக்கூடிய வாரம். விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு. காரியம் கைகூடும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. வாகன மாற்றம் உண்டு. பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடி வரும். விவேகம் கைகொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும். காரியம் கைகூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். உடல் சோர்வு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். ஏற்றங்கள் அமையும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். உடல்நலத்தில் அக்கறை தேவை. ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். பணப்பற்றாக்குறை தீரும். பெற்றவர்களின் வாழ்த்து கிட்டும். வாழ்வில் வசந்தம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. தொலைபேசித் தகவல் ஆதாயம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,5,3,8
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Z




**துலாம்:** தேவைகள் பூர்த்தியாகும் வாரம். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். திட்டமிட்ட செயல் வெற்றி பெரும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். வாக்குவாதங்கள் உருவாகி மறையும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடும். கஷ்டகாலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். பணியில் உயர்வு கிட்டும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். ஆறுதலான சூழ்நிலை அமையும். உறவினர் வருகை உண்டு. உற்சாகம் கலைகட்டும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். உத்தியோக இடமாற்றம் தரும். வெளியூர் பயணம் வெற்றி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பூமி வாங்கும் யோகம் உண்டு. கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். கடல் கடந்த பயணம் உண்டாகும். ஆனந்தம் குடிகொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விநாயகர், அதிர்ஷ்ட எண்: 1,4,2,9
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K




**விருச்சிகம்:** ஊக்கத்தோடு செயல்படும் வாரம். நவகிரஹ அனுகிரஹம் கூடும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன் பிறப்புக்களால் நன்மையுண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடல் உஷ்ணம் வந்து போகும். பொதுப்பிரச்சினைகள் விலகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். வாய்ப்புகள் வந்து சேரும். நிர்வாகச் செலவுகள் கூடும். பொறுமையைக் கையாள வேண்டும். பழையக் கடன் தீரும். முத்தான வாய்ப்பு பெருகும். ஸ்திர சொத்து சேரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பயணம் அனுகூலம் தரும். பங்குச்சந்தை லாபம் தரும். கனவுகள் நிறைவேறும். பொறுப்புக்கள் கூடும். வெறுப்புகள் அகலும். சிறப்புக்கள் சேரும். தாய் நலனில் அக்கறை தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வியாபாரம் சிறக்கும். நிதி பற்றாக்குறை நீங்கும். வேண்டாத நபர் விலகுவர். திடீர் பயணம் ஏற்படும். மாற்று யோசனை பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 1,4,6,2
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,I




**தனுசு:** பெத்தவங்களோட வாழ்த்து கிடைக்கும் வாரம். வாயில் தேடி வரன் வரும். பயணம் அனுகூலம் தரும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். உடல்நலத்தில் அக்கறை தேவை. தாய்வழி உறவில் கவனம் தேவை. தோற்றப் பொலிவு கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். மனைவி சச்சரவு ஏற்படும். அரசு வாய்ப்பு ஏற்படும். செயல்திறமை அதிகரிக்கும். உத்தியோக வாய்ப்புக் கிட்டும். நலமும், நன்மையும் பெருகும். வேண்டாத நபர் விலகுவர். ஆடை, அணிகலன்கள் சேரும். சகோதர உதவி கிட்டும். பேச்சுத் திறமை அதிகரிக்கும். தொழிலில் கவனம் தேவை. பொறியியல் துறை இலாபம் தரும். மாணவர்கள் திறமைகள் பளிச்சிடும். திருமண வாய்ப்பு கூடி வரும். மனஅமைதி கூடி வரும். உடல்நலம் திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிடைக்கும். பொருளாதாரம் உயரும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 3,5,9,8
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,R





**மகரம்:** பிரயாணத்தில் பிரபல்யம் கிடைக்கக்கூடிய வாரம். விரும்பிய பொருள் கிடைக்கும். பழைய கடன் வசூலாகும். வாகனச் செலவு ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். திறமையில் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத்தொழிலில் நிலை உயரும். சான்றோர்களின் சந்திப்புக் கிட்டும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். பங்குச் சந்தையில் லாபம் பெருகும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். உறவினர்களால் நன்மை உண்டு. காரியத்தடை ஏற்படும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு.

(தொடர்ச்சி 26 பக்கம்)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
1150

## (வரலாறும் மரபும்)

## தொண்டீசுவரம் மாத்தறை

ஒரு செயலைச் செய்யும்பொழுது காலம், இடம், கருவி இவற்றினை ஆராய்ந்து அவை கூறும் நெறியில் இயங்கினாலும், அனேகமான வேளைகளில் நாம் நினைத்தவற்றிற்கு மாறாக, சம்பவங்கள் நிகழ்வது, அனைவர் வாழ்விலும் நடைபெறும் சாதாரண நிகழ்ச்சியாகும். இவ்வாறான சூழ்நிலையில் எதனால் இவ்வாறு மாறுபட்டு நடைபெறுகின்றது என்ற எண்ணத்தின் விளைவு தான், மனித ஆற்றலுக்கும் மேற்பட்ட சக்தியொன்று இருப்பதான எண்ணம் தோன்ற ஆதாரமாக அமைந்தது. இதன்விளைவாக, மனித ஆற்றலுக்கும் மேம்பட்ட ஆற்றலை, இறைசக்தியாக மக்கள் மனங்கொண்டனர். இயற்கையின் சீற்றங்களை எதிர்கொண்ட ஆதி மனிதர்கள் பயத்தின் காரணமாகவும், மனித வாழ்விற்கு ஆதாரமாக உதவும் நிலையில் காணப்பட்டவற்றிற்கும், நீருக்கும், நெருப்பிற்கும், வானுக்கும், மண்ணுக்கும் தெய்வீகநிலையை ஊட்டி, அவற்றிற்கு உருவம் கொடுத்து, பல்வேறு நிலையிலே வழிபடவும் ஆரம்பித்தனர். இந்நிலை மனித பரிணாம வளர்ச்சியின் ஒரு நிலையாகவே கருதப்படுகின்றது. இவ்வாறாகத் தோன்றிய நம்பிக்கைளுக்கு வடிவம் கொடுத்ததோடு, அந்த வடிவங்களை வழிபாட்டிற்குரியதாகவும் ஆக்கி, அவற்றிற்குக் கோயில்களை எழுப்பி, வழிபாட்டு முறைகளை ஏற்படுத்தி, மனிதகுலம் அமைதி பெற்றது. இவ்வாறான நிலையிலே எழுந்த கோயில்கள் மனிதனை மனிதநேயத்தோடு வாழவும், வளரவும் வகை செய்தன. இவ்வாறான கோயில்கள் உலகத்திலுள்ள அனைத்து இனமக்களிடமும் மாறுபட்ட பெயர்களோடு காணப்படுகின்றன. ஆயினும், இறைசக்தியின்மீது கொண்ட நம்பிக்கை அனைவருக்கும் பொதுவானதாக விளங்குகின்றது.

ஆரம்பகாலத்தில் உலகின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த சைவசமயத்தைப் பின்பற்றிய மக்கள், சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு அதனை ஏற்றிப் போற்றினர். சிந்துவெளி நாகரிகம் போன்றவையும், இப்பிரதேசங்களின் அகழ்வாய்வுகளின் முடிவுகளும் இவற்றிற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. இவ்வாறான நிலையில் பல நூற்றுக்கணக்கான சிவாலயங்கள் ஈழமெங்கும் எழுந்தன. ஈழமெங்கும் செறிந்து காணப்படும் சிவாலயங்கள் ஈழத்தமிழரின் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை எடுத்தியம்பும் கலாச்சாரச் சின்னங்களாகப் பரிணமித்துக் காணப்படுகின்றன. ஈழத்தின் புராதன சிவாலயங்களின் வரலாறுகளை ஆழ்ந்து நோக்கினால், ஈழத்தமிழர்களின் ஆதிவரலாற்றை அறியமுடியும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலே ஈழத்திலே சிவனை முழுமுதலாகக் கொண்ட சைவசமயம் எழுச்சி பெற்றுக் காணப்பட்டமையை, மகாவம்சம் போன்றவற்றிலிருந்து நோக்கமுடியும். ஈழத்தின் ஆதிக்குடிகளாக நாகர். இயக்கர் என்னும் திராவிட இனத்தவர்கள் வாழ்ந்துள்ளனர். இம்மக்கள் சிவவழிபாடு, நாகவழிபாடு. இயற்கை வழிபாடு போன்றவற்றைப் பின்பற்றுபவர்களாக வாழ்ந்துள்னர். இம்மக்களைப்பற்றிய குறிப்புக்களை புராண, இதிகாச வரலாறுகள் தெளிவாக எடுத்தியம்பியுள்ளன. கி.மு. 543 ஆம் ஆண்டிலே கலிங்கதேசத்திலிருந்து நாடுகடத்தப்பட்ட விஜயனும், அவனுடைய தோழர்களும் காற்றின் போக்கிற்கமைய, ஈழத்தை வந்தடைந்து குவேனி என்னும் இயக்கப் பெண்ணை மணந்ததாக, வரலாற்று ஏடுகளிலே குறிப்பிடப்பட்டுள்ளது. விஜயனின் வருகையின்போது, ஈழத்திலே திராவிட மக்கள் வழிபாடியற்றிய பஞ்ச ஈஸ்வரங்கள் காணப்பட்டுள்ளன. விஜயனின் வருகையின்போது காணப்பட்ட பஞ்ச ஈஸ்வரங்களுள் தொண்டீசுவரம் தவிர்ந்த ஏனைய ஈசுவரங்கள், காலத்திற்குக் காலம் பல்வேறு அழிவுகளுக்கு ஆட்பட்டபோதிலும், தற்காலத்திலும் மீண்டும் எழுச்சி பெற்றுக் காணப்படுவது கண்கூடு.

பஞ்ச ஈசுவரங்களின் ஆதிவரலாற்றினையும், எக்காலத்தில் இவ்வாலயங்கள் கட்டப்பட்டன என்பதையும், கட்டியவர்கள் யார் என்பதையும் அறியமுடியாதுள்ளது. நாடுகடத்தப்பட்ட விஜயன் பஞ்ச ஈசுவரங்களைப் புனரமைத்ததோடு, பல்வேறு சிவாலயங்களையும் கட்டுவித்தான் என சில குறிப்புக்களிலே கூறப்பட்டுள்ளது. மகாவம்சக் குறிப்பின்படி, விஜயனுடன் நாடு கடத்தப்பட்ட நண்பர்களுள் ஒருவனாகிய உபதிஸ்ஸன் என்னும் பிராமணர், பஞ்ச ஈசுவரங்களுக்குச் சென்று வழிபட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு பல்வேறு பரிமாணங்களுடன் காணப்படும் பஞ்ச ஈஸ்வரங்களுள் ஒன்றாகிய தொண்டீசுவரம், தற்காலத்தில் விஷ்ணு தேவாலயமாக மாற்றம்பெற்று, சிவாலயத்தின் அடிச்சுவடுகள் மாற்றம்பெறமால், மாத்தறை மாவட்டத்தில் தற்காலத்தில் சிங்கள இன மக்களால் போற்றப்படுகின்றது.

ஈழத்திலுள்ள வரலாற்றுப்புகழ்மிக்க பல்வேறு ஆலயங்களின் வரலாறு, பல்வேறு மாறுபட்ட கருத்துக்களோடு, ஆதிவரலாற்றினை அறியமுடியாத நிலையில் அமைந்துள்ளமை, இந்துமதத்தின் துரதிஷ்டமாகவே விளங்குகின்றது. ஈழத்தில், பொன்னுக்கும், புகழுக்கும் ஆளுவோரை வாழ்த்திப்பாடிய புலவர்கள், நாட்டின் வரலாற்றையும், இனத்தின் வரலாற்றையும், ஒரு இனத்தின் கலாச்சாரசின்னமாக விளங்கும் ஆலய வரலாறுகளையும் திட்டவட்டமாகப் பதிவுசெய்ய மறந்துவிட்டனர். அரசோச்சிய மன்னர்களும் அவர்கள் வழிவந்த பிரபுக்களும் ஆலயங்களைக் கட்டியெழுப்பியதோடு, தம்பணி நிறைவு பெற்றுவிட்டதாகக் கொண்டனரே தவிர, வரலாறுகளை ஆதாரபூர்வமாகக் குறிப்பிடவில்லை.

**வளரும்...**





# தமிழர்களின் பூர்வீக காணிகளைத் திருடிய வனஇலாகா

## சிங்களக்குடியேற்றத்திற்கும், படைத்தளங்கள் அமைக்கவும் காடுகள் விடுவிக்கப்படுவதாக ரவிகரன் எம்.பி குற்றச்சாட்டு

இலங்கை செய்திகள் Sri Lanka News

ந.லோகதயாளன்

வனவளத் திணைக்களம் தமிழ் மக்களின் பூர்வீக குடியிருப்பு மற்றும், விவசாயக் காணிகளை அடாவடித்தனமாக அபகரித்துவிட்டு, அந்தக் காணிகளை விடுவிப்பதற்கு மறுப்பதாகவும், அதேவேளை சிங்களக்குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காகவும் படைத்தளங்களை அமைப்பதற்காகவும் ஒதுக்கக் காடுகளை வனவளத் திணைக்களம் விடுவிப்பதாகவும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

குறிப்பாக முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட தமிழர்களின் பூர்வீக ஏ.சி.பாம் கிராமத்தை வனவளத்திணைக்களம் அபகரித்துவிட்டு விடுக்க மறுப்பதை இதன்போது குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர், வவுனியா வடக்கில் போகஸ்வெவ எனும் சிங்களக்குடியேற்றத்தை ஏற்படுத்த 2000ஏக்கர் ஒதுக்கக்காடு வனவளத் திணைக்களத்தால் விடுவிக்கப்பட்டுள்ளதையும், ஒட்டுசுட்டான், அம்பகாமம் பகுதியில் விமானப் படைத்தளம் அமைப்பதற்கு சட்டவிரோதமாக ஒதுக்கக்காடுகள் அழிக்கப்பட்டுள்ள விடயத்தையும் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை ஊழலை ஒழிப்போமெனும் கோசத்துடன் ஆட்சிபீடமேறிய இந்த அரசு, கடந்தகாலத்தில் சட்டவிரோதமாக இடம்பெற்ற ஒதுக்கக்காடு அழிப்புச் செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பிலும், கடந்தகாலத்தில் முறையற்ற தீர்மானங்களை எடுப்பதற்கு வற்புறுத்திய அமச்சின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு நடவடிக்கை மேற்கொள்வதுதொடர்பிலும் கவனஞ்செலுத்த வேண்டுமெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றில் 03.06.2025 அன்று இடம்பெற்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், கடந்தசில நாட்களில் முல்லைத்தீவு மாவட்டத்தின ஒட்டுசுட்டான் பிரதேசசெயலாளர்பிரிவில் நான் மேற்கொண்ட களவிஜயத்தின்போது, அரசாங்கத்தின் சிலதிணைக்களங்கள் நூதனமானமுறையில் தமிழ் மக்களின் காணிகளை திருடிவருவதை அவதானிக்கமுடிந்தது.

குறிப்பாக வனவளத்திணைக்களம், தொல்லியல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் ஆகிய திணைக்களங்கள் நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு முரணாக பொதுமக்களின் காணிகளைத் திருடிவருகின்றார்கள். பொதுமக்களின் குடியிருப்புக்காணிகளையும், அவர்களின் வயல் நிலங்களையும், வர்த்தமானி அறிவித்தல் முலம் சட்டத்திற்கு முரணானவகையில் வன ஒதுக்குப்பிரதேசங்களாக, தொல்லியல் ஒதுக்குப் பிரதேசங்களாக ஒதுக்கீடு செய்து அறிவித்துள்ளார்கள்.

இதனால் இங்குள்ள மக்கள் தமது பூர்வீக குடியிருப்புக்களில் குடியிருக்கமுடியாமல், வயல் நிலங்களில் பயிரிட முடியாமல் இத்திணைக்களங்களால் துரத்தியடிக்கப்படுகின்றார்கள். இதனால் அவர்களுடைய வாழ்வாதாரம், அவர்களுடைய அன்றாட உணவுத்தேவை, அவர்களுடைய பிள்ளைகளின்கல்வி என்பன மறுக்கப்படுகின்றன.

ஒட்டுசுட்டான் பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட தண்டுவான் கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஏ.சி.பாம் என்ற கிராமத்தில் 47 குடும்பங்கள் வசித்துவந்த நிலையில், 1997இல் ஜெயசிக்குறு இராணுவ நடடிக்கையின்மூலம் இவர்கள் இடம்பெயர்ந்தனர்.

இன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்வு நவடிக்கைகள்யாவும் பூர்த்தியடைந்து விட்டதாக கூறுப்படுகின்று நிலையில், இம்மக்கள் இன்னும் தங்கள் சொந்தக்கிராமத்தில் மீள்குடியேற்றப்படவில்லை. காரணம் கடந்த 2012ஆம் ஆண்டு இக்கிராமம் தண்டுவான் ஒதுக்கக்காடு என வனவளத்திணைக்களத்தால் சட்டத்திற்கு முரணாக வர்த்தமானிமூலம் அறிவிக்கப்பட்டிருக்கின்றமையாகும்.

ஒரு பிரதேசத்தை வனஒதுக்காக வர்த்தமானிமூலம் அறிவித்தல் செய்யும்முன், அதுபற்றி அப்பிரதேச மக்களுக்கு பிரதேசசெயலாளரூடாக அறிவிக்கவேண்டும். இதுதொடர்பான கருத்துக்கள் மக்களிடம் பெறப்படவேண்டும். இவற்றுக்கெல்லாம் முரணாக, இவ்வாறெல்லாம் செய்யாமல் இப்பிரதேசம் தண்டுவான் வனஒதுக்குப்பிரதேசமாக நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டவிதிகளுக்கு புறம்பாக வர்த்தமானப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திருட்டுத் திணைக்களம் இப்பிரதேசத்தை தண்டுவான் வனஒதுக்குப் பிரதேசமாக 2012இல் வர்த்தமாணி அறிவித்தல் நிவித்தல் செய்யும்முன்பு, 1979ஆம் ஆண்டில் இப்பிரதேசம் இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தினால் அளவீடுசெய்யப்பட்டு, எல்லைக் கற்கள் நாட்டப்பட்டு, நிலஅளவை வரைபடம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. ரொப் ஒவ் பிபி 66 என்ற வரைபடத்தொகுதியினுள் இவ்வரைபடம் உள்ளது.

இந்தக்கிராமத்தைத் திட்டமிட்டு திருடும்போது வனவளத்திணைக்களத்திற்கு இது தெரிந்திருக்கவில்லை. இதேபோலத்தான் சட்டத்திற்கு முரணாக வனவளத்திணைக்களம் தமிழ்மக்களின் காணிளை வனஒதுக்குப் பகுதியாக வர்த்தமானிமூலம் அறிவித்துவருகின்றார்கள்.

ஒதுக்காட்டில் அமைந்துள்ள அமைந்துள்ள சித்தாத்தன் குளம் எனப்படும் தமிழ்மக்களின் பூர்வீக விவசாயநிலங்களை விடுவிக்க வனவளத்திணைத் திணைகமகளம் இதுவரை இணங்கவில்லை.

வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவில், வனஒதுக்கு பிரதேசங்களை சிங்களமக்களைமட்டுமே கொண்டகுடியேற்றத் திட்டமான போகஸ்வெவ உருவாக்குவதற்காக 2000 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை வனவளத்திணைக்களம் விடுவித்துள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேசசெயலாளர் பிரவின் அம்பகாமம் பகுதியில் இலங்கை விமானப்படையின் விமானப்படைத்தளம் அமைப்பதற்கு, ஒதுக்கப்பட்ட வனப்பகுதியிலிருந்து 8000ஏக்கர் வனப்பகுதிகள் துப்பரவு செய்யப்பட்டுள்ளன. வனவளத்திணைக்களத்தின் அனுமதி இன்றி, குறித்த சட்ட ஏற்பாடுகள் எவற்றையும் பின்பற்றாது, இந்த அடர்வனப்பகுதிகள் அழிக்கப்பட்டுள்ளதுடன், இங்குள்ள பெறுமதியான மரங்கள் இரகசியமான விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஊழலுக்கு எதிரான கோசத்துடன் ஆட்சிக்கு வந்துள்ள அரசு இதுதொடர்பில் வெளிப்படையான விசாரணைகள் மேற்கொள்ளவேண்டும்.

சமகாலத்தில் நாம்மிகவும் வேதனைப்படவேண்டிய விடயம் என்னவெனில் வனவளத்திணைக்களம், வனஜீவராசிகள் போன்ற திருட்டுத் திணைக்களங்களில் உயர்அதிகாரிகள் நீதிபதிகளாக மாறிவிட்டனர். வடக்கு மாகாணத்திலுள்ள மாவட்டச்செயலகங்கள்தோறும் வனஒதுக்குப் பிரதேசங்களை விடுவிப்பதாகக்கூறி விசாரணை மேற்கொண்டு வருகின்றார்கள்.

திருடனே களவை விசாரிக்கும் நகைப்பிற்கிடமான இந்த நீதி வழங்கும் பொறிமுறை உழலுக்கு எதிரான கோசத்துடன் ஆட்சிபீடம் ஏறிய இந்தஅரசிற்கு பெரிய அவமானமாகும்.

இவ்விசாரணை மேற்கொள்ளவரும் அதிகாரிகள் கடந்தகால அரசாங்கங்களின் காலத்தில் ஊழலில் மூழ்கித்திளைத்தவர்களாவர். இவர்கள் இங்குள்ள ஒதுக்கு வனப்பகுதிகளை விடுவிப்பது தொடர்பில் பொய்யான தகவல்களை அரசிற்கு வழங்கிவருவதுடன், மாவட்டச்செயலாளர் உட்பட, தமிழ் அதிகாரிகளையும் இப்பொய்த்தகவல்களை ஏற்றுக்கொள்ளும்படி அதிகாரத்தோரணையில் மிரட்டியும் வருகின்றனர்.

கடந்த 2023.06.01இல் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர், பிரதேசச்செயலாளர், வனவளத்திணைக்களத்தின் அதிகாரிகள் ஆகியோருடன் வனவளப்பகுதிகளை விடுவிப்பதாகக்கூறி கூட்டமொன்றை ஏற்படுத்திய வனவள மற்றும், வனஜீவராசிகள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி சமந்தி, வனவள மற்றும், வனஜீவராசிகள் திணைக்களத்தின் முறையற்ற தீர்மானங்கள் சிலவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தியதுடன், அத்தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால் ஒருஅங்குலம் நிலத்தைக்கூட விடுவிக்கமுடியாதென அச்சுறுத்தியுள்ளார். கடந்த அரசாங்கங்களின் காலத்தில் கடமையாற்றிய இவர்களைப்போன்ற அதிகாரிகளை இந்தஅரசாங்கம் எச்சரிக்கையுடன் கையாளவேண்டும். நாங்கள் வனப்பகுதிகளை விடுவித்துத் தாருங்கார் எனக் கேட்டு, காடழிப்பிற்கு வழிகோரவில்லை.

எங்கள் வீடுகளையும், வயல்களையும், தெருக்களையும் விடுவியுங்களென்றே கேட்கின்றோம். எமது மக்களின் நிலங்களை விடுவியுங்கள். எமது மக்கள் உழைப்பிற்குப் பழக்கப்பட்டவர்கள். உழைத்துவாழ்வார்கள். நிலங்களை விடுவிக்காதவரை அம்மக்களின் அன்றாட வாழ்விற்கான நிவாரணங்களை வழங்குங்கள். அவர்களின் குழந்தைகள் பசியுடன் இருக்கின்றனர் - என்றார்

## இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)

**மகரம்:** விவசாயம் பலன் தரும். அரசு வழி ஆதாயம் உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். கடன் பிரச்சனை அகலும். கவலைகள் ஒழியும். தனலாபம் கூடும். புதிய எண்ணங்கள் உருவாகும். மெத்தனப்போக்கு விலகும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மனோதைரியம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். மனக்குழப்பம் நீங்கும். தர்ம சிந்தனைகள் மேலோங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நந்தி பகவான், அதிர்ஷ்ட எண்: 4,9,2,1

அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,O




**கும்பம்:** நினைத்ததெல்லாம் நடக்கக்கூடிய வாரம். குடும்ப வளர்ச்சி பெருகும். கமிஷன் தொழில் லாபம் தரும். பயணத்தால் பலன் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. பிள்ளைகளால் பெருமை சேரும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். நட்பு பெருகும். ஆண்கள் அதிகாரம் உயரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். பணவரவு உண்டு. வராத கடன் வந்து சேரும். நன்மைகள் நாடி வரும். மதிப்புகள் உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். மனோ பயம் அகலும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பாக்கியவான்களை சந்திப்பீர்கள். கன்னிப்பெண்களுக்குச் சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பழையக் கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 0,2,3,7

அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,M




**மீனம்:** பணவரவும், மனநிறைவும் கிடைக்கக்கூடிய வாரம். நினைத்தது நிறைவேறும். வாகன மாற்றமுண்டு. மின்சாரத்தில் கவனம் தேவை. குதூகலமான எண்ணம் உருவாகும். குடும்ப கௌரவம் உயரும். வரவுகள் திருப்தி தரும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். கலைத்துறையில் ஆர்வம் கூடும். காரியம் கைகூடும். குடும்ப மேன்மை உண்டாகும். உடல் சோர்வு ஏற்படும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பணப்பற்றாக்குறை தீரும். குளிர்பான தொழிலில் கவனம் தேவை. செயல் விவேகம் கூடும். தொலைபேசி தகவல் தொல்லை தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். சாதக சூழ்நிலைகள் விலகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். மெத்தனப் போக்கு மாறும். சந்தர்ப்பங்கள் சாதகமாகும். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். புதிய நட்பு உருவாகும். சுபச்செய்தி தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 3,7,8,2

அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Z

# MORTGAGE

## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL RESIDENTIAL VACANT LAND

INDUSTRIAL CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



CALL US

# NESAN

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank
FIRST NATIONAL FINANCIAL LP
TD Canada Trust
Manulife
NATIONAL BANK
Desjardins
RFA
MCAP
HOME TRUST
EQUITABLE BANK
radius financial
RMG mortgages

**55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8**








26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்




உதயம் 1523 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 13, 2025


# நாளை 14ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள "உதயன்" சர்வதேச விருது விழாவில் இலங்கைக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது பெறும் "வீரகேசரி" ஸ்ரீகஜன் அவர்கள்



வெற்றிகரமாக "உதயன்" சர்வதேச விருதுகளை வழங்கிவரும் வரிசையில் 19வது ஆண்டில் கால எடுத்து வைத்து நாளை 14ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள "உதயன்" சர்வதேச விருது விழாவில் எல்லாமாக 7 வெற்றியாளர்களுக்கு விரு-துகள் வழங்கப்பெறவுள்ளன. சமூகத் தலைவர்கள் மத்திய பாராளுமன் உறுப்பினரகள். மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் என பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ள இவ்விழாவில் இலங்கைக்கான வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெறும் இலங்கை "வீரகேசரி" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன் அவர்கள் இன்று வெள்ளிக்கிழமை கனடா வந்து சேர்ந்தார். அவருடன் விருது பெறும் ஏனைய அறுவர் பற்றிய விபரங்கள் நாளை சனிக்கிழமை காலை அனைவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் வெளியிடப்பெறும். அனுமதிச் சீட்டுக்களுக்கும் ஏனைய விபரங்களுக்கும் 416 732 1608

# Computek College of Technology நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி முரளி ஸ்ரீநாராயணதாஸ் அவர்களோடு மூன்று ஊடக நிறுவனங்கள் நடத்திய நேர்காணல்

கனடாவில் சிறந்த தொழிற்பயிற்சி கல்விக் கூடமாக விளங்கிவரும் **Computek College of Technology** நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி முரளி ஸ்ரீநாராயணதாஸ் அவர்களோடு 12ம் திகதி வியாழக்கிழமையன்று ரொறன்ரோவின் மூன்று ஊடக நிறுவனங்கள் நடத்திய நேர்காணல் இன்னும் சில நாட்களில் அச்சு பதிப்பாகவும் மின்ஊடகங்களில் பதிவாகவுள்ளன. வியாழக்கிழமையன்று ஸ்காபுறோவில் உள்ள நிறுவனத்தின் தலைமையலுவகத்தில் முரளி ஸ்ரீநாராயணதாஸ் அவர்களோடு நிறுவனத்தின் பொது சனத் தொடர்பு அதிகாரி தினேஸ்குமார். "ரூபம்" ஊடக நிறுவன அதிபர் ராம்சங்கர் சிவநாதன் மற்றும் **Behind media Group Inc** ஊடக நிறுவனத்தைச் சேர்ந்த செனார்லி ஆகியோர் நிற்பதைக் காணலாம்.







# மட்டக்களப்பில் விபுலானந்த அடிகளாரின் சிலை திறப்பு விழாவிற்காகச் சென்றிருந்த கனடா வாழ் விசு கணபதிப்பிள்ளை அங்கு சமூகப் பணிகளிலும் பங்கெடுத்தார்

அண்மையில் மட்டக்களப்பில் விபுலானந்த அடிகளாரின் சிலை திறப்பு விழாவிற்காகச் சென்றிருந்த கனடா வாழ் விசு கணபதிப்பிள்ளை அங்கு சமூகப் பணிகளிலும் பங்கெடுத்து பல மாணவர்களையும் பெற்றோர்களையும் ஆசிரியப் பெருந்தகைகளையும் மகிழ்வித்து கனடா திரும்பியுள்ளார்.

அத்துடன் கனடா- இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின் நிதி உதவியில் அங்கு ஆரம்பிக்கப்பெற்றுள்ள 10 வீட்டுத் திட்டத்தினை மேற்பார்வை செய்து திட்டம் சிறப்பாக தொடர்வதை உறுதி செய்தும் தனது நேரத்தையும் பொருளையும் அர்ப்பணித்துள்ளார்.

இவ்வாறான நற்பணிகள் ஆற்றும் அவரை அண்மையில் பியர்சன் விமான நிலையத்தில் வரவேற்ற கனடா- இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின தற்போதைய தலைவர் சோம. சச்சிதானந்தன் அவர்கள் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் கௌரவிப்பதைக் காணலாம். (படம்: சத்தியன்)




# "பிடில்" வாசித்த நீரோ மன்னனும் "வீணை" இசைக்கும் தமிழரசு மன்னர்களும்

"தமிழ் தேசியத்தின் பால் உண்மையான பற்றுறுதியும் கொள்கைப் பிடிப்பும்,இலட்சியமும் கொண்ட ஏனைய தமிழ்த்தேசிய கட்சிகளுடன் இணைந்து உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க இணங்கிப்போக,இறங்கிப்போக இந்த தமிழரசின் சில மன்னர்களுக்கு வரட்டுக் கௌரவமும் மேதாவித் தலைக்கனமும் ஆணவமும் இடம்கொடுக்காமையினால்தான் இராணுவத் துணைக்குழுக்கள்,தமிழினத் துரோகிகள், தமிழ்,இளைஞர் யுவதிகளை படுகொலை செய்தோர்,காணாமல் போகச் செய்தோர் என்று தங்களினாலேயே குற்றம்சாட்டப்பட்டவர்களுடன் இரவு நேரத் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களின் அலுவலகக் கதவுகளை ஆடையின்றி தட்டத் தொடங்கியுள்ளனர்"" -----------கே.பாலா

ரோம் நகரம் பற்றி எரியும்போது ரோமாபுரி மன்னன் நீரோ பிடில் வாசித்தானாம்.அதாவது தன் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் நாட்டின் தலைநகரம் எரிந்து மக்களது உயிரும், அவர்தம் உடைமையும் நாசமாகியதைப் பற்றிய அக்கறையற்று , பிடில் இசைத்தபடி இருந்தான் என்பது பதிவு . ஆக மோசமான, மனிதாபிமானமற்ற , பொறுப்பற்ற ஆட்சியாளனுக்கான ,தலைவனுக்கான முன் மாதிரியாக வரலாற்றில் பதிவாகியுள்ளான் "நீரோ" மன்னன்.அது மட்டுமில்லை, ஒவ்வொரு நாசகரமான ஆட்சியாளனையும் குறிப்பிடும் குறியீடாகவும் இருக்கிறான் "நீரோ" மன்னன்.

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

